## பகுதி II


| | பக்கம் |
|---|---|
| மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும் | ( i–Lii ) |
| ஆளணி | ( Liii–Lv ) |

# மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்


| | பக்கம் |
|---|---|
| கணக்குகளும் வங்கித்தொழில் தொழிற்பாடுகளும் | ( i ) |
| நாணய வெளியீடு | ( vii ) |
| வங்கித் தொழில் அபிவிருத்தி | ( viii ) |
| வங்கி மேற்பார்வை | ( x ) |
| அபிவிருத்தி நிதி | ( xi ) |
| கிராமியக் கொடுகடன் | ( xvi ) |
| பிரதேசக் கிராமிய அபிவிருத்தி வங்கிகள் | ( xxiv ) |
| கிராமிய வங்கித்தொழில், அலுவலர் பயிற்சிக்கல்லூரி | ( xxviii ) |
| ஊழியர் சேம நிதியம் | ( xxix ) |
| செலாவணிக் கட்டுப்பாடு | ( xxxii ) |
| பொதுப் படுகடன் | ( xxxiii ) |
| பிரதேச அலுவலகம்-மாத்தறை | ( xxxiv ) |
| பிரதேச அலுவலகம்-அநுராதபுரம் | ( xxxx ) |
| பிரதேச அலுவலகம்-மாத்தளை | ( xxxxv ) |
| வாடிக்கையாளர் பணிகள் | ( xxxxvii ) |
| வெளியீடுகள் | ( xxxxviii ) |
| ஆய்வரங்குகள் | ( xxxxix ) |
| அளவீடுகள் | ( xxxxix ) |
| பயிற்சி | ( L ) |
| தரவு செய்முறைப் படுத்தல் | ( L ) |
| முகாமைக் கணக்காய்வு | ( Lii ) |

# மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்

## கணக்குகளும் வங்கித்தொழில் தொழிற்பாடுகளும்

மத்திய வங்கியின் 1986 திசெம்பர் 31 இன் படியான ஐந்தொகையும், 1986 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாப, நட்டக் கணக்கும் அட்டவணை 2.1 இல் காட்டப்பட்டுள்ளது.

1986 இறுதியில் மத்திய வங்கியின் மொத்த சொத்துக்கள்/பொறுப்புக்கள் ரூ. 431,639 இலட்சமாக அமைந்து கடந்த ஆண்டின் அவற்றின் மட்டத்தினைவிட 4.9 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. உள்நாட்டுச் சொத்துக்கள் (12.4 சத வீதத்தால்) ஏனைய சொத்துக்களும் கணக்குகளும் (16.8 சதவீதத்தால்) என்ப வற்றில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் சொத்துக்களில் அதிகரிப்பினை ஏற்படுத்தின. உள்நாட்டுச் சொத்துக்களில் அரசிற்கான கடன்களும் முற்பணங்களும் (9.7. சதவீதம்) நடுத்தர,நீண்டகாலக் கடன்கள் (8.1 சதவீதம்), குறுங்காலக் கடன்கள் (66.4 சதவீதம்), அரச, அரச உத்தரவாதப் பிணைகள் (9.1 சதவீதம்) என்பவற் றில் அதிகரிப்புக்கள் பதிவுசெய்யப்பட்டன. இவ்வாண்டில் வங்கியின் பொறுப் புக்கள் முக்கியமாக நாணயச் சுற்றோட்டம் (13.6 சதவீதம்), நடுத்தர நீண் டகாலக் கொடுகடன் நிதியம் (32.2 சதவீதம்),மத்திய வங்கிப் பிணைகள் (122.9 சதவீதம்), ஏனைய பொறுப்புக்களும் கணக்குகளும் (11.9 சதவீதம்) என் பனவற்றில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் காரணமாக உயர்வடைந்தன. எனினும் வைப்புக்கள் 23.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

1986 இற்கான வங்கியின் வருமானம் ரூ. 36,895 இலட்சமாக விளங்கி முந்திய ஆண்டினைவிட 3.5 சதவீத வீழ்ச்சியைக் காட்டியது. செலவு, ஒதுக்குக் கணக்குகளுக்கான ஒதுக்கல்கள், பெறுமானத் தேய்விற்கான ஒதுக்கல்கள் என்ப வற்றுக்கு இடமளித்தபின்னர் மத்திய வங்கியின் தேறிய இலாபம் ரூ. 17,240 இலட்சமாக விளங்கியது. நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 39 (பி) இன் நியதி களின்படி வங்கியின் மிகைக்கு ரூ. 10 இலட்சம் மாற்றல் செய்யப்பட்டது. மீதியான ரூ. 17,230 இலட்சங் கொண்ட தொகை நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 39 (சி) இன் நியதிகளின்படி மத்திய வங்கிக்கான அரசின் வெளிநின்ற கடப்பாடுகளின் ஒரு பகுதியினைத் தீர்ப்பனவு செய்வதற்குப் பயன்படுத்துவதற் காக அரசிற்குச் செலுத்தப்பட்டது.

### வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகள்

மத்திய வங்கி வர்த்தக வங்கிகளுடனான அதன் கொடுக்கல் வாங்கல்களுக்காக இலங்கை ரூபாவிற்கெதிரான ஐ.அ. டொலரின் நாளாந்த வாங்கும் விற்கும் உடன்மாற்று வீதங்களைத் தொடர்ந்தும் தீர்மானித்து வந்தது. இவ்வாறு தீர் மானிக்கப்பட்ட வாங்கும் விற்கும் உடன் மாற்று வீதங்களின் அடிப்படையில் அது ஐ.அ. டொலரினைக் கொள்வனவு செய்து விற்பனை செய்கிறது. 1986 திசெம்பர் இறுதியில் ஐ.அ. டொலர் ஒன்றுக்கான உடன் மாற்று வாங்கும் விற்கும் வீதங்கள் முறையே ரூ. 28.5125 ஆகவும், ரூ. 28.5275 ஆகவும் விளங்கின.

## இலங்கை மத்திய

ஐந்தொகை —

| 1985 திசெம்பர் 31 ரூபா | 1985 திசெம்பர் 31 ரூபா | பொறுப்புக்கள் | 1986 திசெம்பர் 31 ரூபா | 1986 திசெம்பர் 31 ரூபா |
|---|---|---|---|---|
| | | **மூலதன கணக்குகள்** | | |
| 15,000,000 | | முதல் ... | 15,000,000 | |
| 70,000,000 | 85,000,000 | மிகை ... | 80,000,000 | 95,000,000 |
| | | **சுற்றோட்டத்திலுள்ள நாணயம்** | | |
| 10,763,800,798 | | தாள்கள் ... | 12,229,000,668 | |
| 555,634,845 | 11,319,435,643 | குத்திகள் ... | 634,241,496 | 12,863,242,164 |
| | | **வைப்புக்கள்** | | |
| 2,119,925,142 | | அரசு .. | 1,710,810,540 | |
| 85,447,855 | | அரச முகவர் நிலையங்களும் அரச நிறுவனங்களும் | 122,732,153 | |
| 5,490,156,739 | | வர்த்தக வங்கிகள் .. | 5.045,339,209 | |
| 4,108,963,586 | | பன்னாட்டு அமைப்புக்கள், வெளிநாட்டு அரசு, வெளிநாட்டு வங்கி நிறுவனங்கள் ... | 2,463,197,152 | |
| 54,476 | | திறைசேரி உண்டியல்களில்முதலீடு செய்யப்பட்ட ரூபா 164,352,500 கொண்ட தொகை நீங்கலாக கட்டாயச் சேமிப்பு நிதி .. | 103,942 | |
| 1,190,716,724 | 12,995,264,522 | ஏனையவைகள் .. | 664,531,455 | 10,006,714,451 |
| | 5,992,891 | வெளிநாடுகளிலிருந்து பெற்ற கடன்பாடுகள் .. | | இல்லை |
| | 775,000,000 | நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் .. | | 1,025,000,000 |
| | 150,000,000 | மூலதன உதவதொகைக் கணக்குகள் .. | | 160,000,000 |
| | 1,168,125,000 | மத்திய வங்கிப் பிணைகள் .. | | 2,603,633,000 |
| | 14,659,800,056 | ஏனைய பொறுப்புக்களும் கணக்குகளும் ... | | 16,410,354,180 |
| | 41,158,618,112 | | | 43,163,943,795 |

### 1986 திசெம்பர் 31 ஆம் நாள் முடிவுற்ற

| 1985 திசெம்பர் 31 ரூபா | 1985 திசெம்பர் 31 ரூபா | | 1986 திசெம்பர் 31 ரூபா | 1986 திசெம்பர் 31 ரூபா |
|---|---|---|---|---|
| | 1,882,274,433 | பொதுச் செலவுகளுக்கும் (சம்பளங்களையும், நாணயத் தாள்கள், குத்திகள் மீதான செலவையும், காணியும் கட்டடங்களினதும், அலுவலகத் தளபாடங்களினதும் மீதான பெறுமானத் தேய்வையும், உள்ளடக்கும்) நாணய விதிச் சட்டத்தின் 38ஆம் பிரிவின் நியதிகளின்படி செய்யப்பட்ட ஒதுக்குகளுக்கும். | | 1,729.274,810 |
| | | 1986 திசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கான தேறிய இலாபம் | | |
| 153,735,000 | | நாணய சீராக்கக் கணக்கிற்கு நாணய விதிச்சட்டத்தின் 39 (அ) பிரிவின் நியதிகளின்கீழ் தீர்ப்பனவு செய்யப் பட்ட நிலுவை | 236.255,802 | |
| 10,000,000 | | நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 39 (ஆ) இன்படி தேறிய இலாபம் மிகைக்குக் கொண்டு செல்லப்பட்டது | 1,000,000 | |
| 1,779,000,000 | 1,942,735,000 | நாணயவிதிச் சட்டத்தின் 39 (இ) நியதிகளின்படி அரசிடமிருந்து மத்திய வங்கிக்கு வரவேண்டிய பொறுப்புக்களின் ஒரு பகுதியை தீர்ப்பதற்கு | 1,723,000,000 | 1,960,255,802 |
| | 3,825,009,433 | | | 3,689,530,612 |

1986ஆம் அண்டு திசெம்பர் 31ஆம் நாள் முடிவுற்ற மத்திய வங்கியின் கணக்குகள் இலங்கை அரசியல் அமைப்பின் பிரிவு 154 (1) இற்கு அமையவும் 1971இன் எண் 38 கொண்ட நிதிச் சட்டத்தின் பிரிவு 13 (1) இற்கு ஏற்பவும் நாணயவிதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) பிரிவு 42 (1) இற்கு ஏற்பவும் எனது பணிப்புரையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

நாணய விதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) பிரிவு 42 (2) இன் நியதிகளுக்கேற்ப நிதியமைச்சருக்கு ஒப்படைக்க வேண்டி எனது அறிக்கை உரிய காலத்தில் ஒப்படைக்கப்படும்.

கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களம்,
கொழும்பு–7.
1987, எப்பிறல் 07

**டபிள்யூ. காமினி ஏபா**
கணக்காய்வாளர் நாயகம்

அட்டவணை 2.1

## வங்கியின் கணக்குகள் — 1986

### 1986 ஆம் ஆண்டு திசெம்பர் 31ஆம் நாளில் உள்ளபடி

| 1985 திசெம்பர் 31 | | சொத்துக்கள் | 1986 திசெம்பர் 31 | |
|---|---|---|---|---|
| ரூபா | ரூபா | | ரூபா | ரூபா |
| | | **பன்னாட்டு ஒதுக்கு** | | |
| 8,328,092,837 | | இலங்கைக்கு வெளியே உள்ள பணங்களும், நிலுவைகளும் | 4,728,955,695 | |
| 3,099,913,490 | | *வெளிநாட்டுப் பிணைகளும் திறைசேரி உண்டியல்களும்... | 4,810,389,476 | |
| 1,564,189 | 11,429,570,516 | கையிருப்பிலிருக்கும் சிறப்பு எடுப்பனவு உரிமை ... | 84,801 | 9,539,429,972 |
| | | **உள்நாட்டுச் சொத்துக்கள்** | | |
| | | கடன்களும் முற்பணங்களும் | | |
| 4,218,176,362 | | அரசிற்கு ... | 4,625,461,262 | |
| 692,501,865 | | ஏனையவற்றிற்கு–நடுத்தர, நீண்டகால ... | 748,540,277 | |
| 1,444,475,344 | | குறுங்கால ... | 2,403,793,574 | |
| 18,542,423,324 | | அரச, அரச உத்தரவாதப் பிணைகள் ... | 20,220,560,536 | |
| 150,000,000 | 25,047,576,895 | நிதி ஏனைய நிறுவனங்களுக்கான உதவுதொகைகள் ... | 160,000,000 | 28,158,355,649 |
| | 4,681,470,701 | ஏனைய சொத்துக்களும், கணக்குகளும் ... | | 5,466,158,174 |
| | | *அரச நிறுவனங்களிலிருந்து 1964 பெப்புருவரி 1இல் ரூபா 5,527,675 முகப்புப் பெறுமானத்திலும், 1965 மே 24இல் ரூபா 57,450 முகப்புப் பெறுமானத்திலும் பெற்ற பிணைகளை உள்ளடக்கும். (இப்பிணைகளின் மதிப்பிடப்பட்ட சந்தைப் பெறுமானங்கள், மேற்குறித்த நாட்களில் முறையே, ரூபா 2,933,697 ஆகவும், ரூபா 34,340/– ஆகவும் இருந்தன.) | | |
| | 41,158,618,112 | | | 43,163,943,795 |

### ஆண்டுக்கான இலாப நட்டக் கணக்கு

| 1985 திசெம்பர் 31 | | 1986 திசெம். 31 |
|---|---|---|
| ரூபா | | ரூபா |
| 3,825,009,433 | பெறப்பட்ட வட்டி, ஏனையவை | 3,689,530,612 |
| 3,825,009,433 | | 3,689,530,612 |

வர்ணசேன இராசபுத்திரம்
ஆளுநர்

என். ஏ. தர்மபந்து
முதன்மைக் கணக்காளர்

வர்த்தக வங்கிகள் இலங்கை ரூபாவிற்கெதிராக ஐ.அ. டொலரில் விற்பனைகளையும் கொள்வனவுகளையும் மேற்கொள்வதற்காக மத்திய வங்கி தொடர்ந்தும் அவற்றுக்கு முன்மாற்றுக் காப்பினை வழங்கியது. இக் காப்பிற்குட்பட்ட காலம் மூன்று மாதங்களாகும். 1986 இறுதியில் மத்திய வங்கி உடன்மாற்று நடுத்தர வீதத்தில் ஒரு மாத முன்மாற்று டொலர்களைக் கொள்வனவு செய்து அவற்றை உடன் மாற்று நடுத்தர வீதத்திற்கெதிராக 100 ஐ.அ. டொலர்களுக்கு ரூ. 4.00 கொண்ட கூடிய வீதத்தில் விற்பனை செய்தது. மூன்று மாத முன்மாற்று ஐ.அ. டொலர்கள் உடன்மாற்று நடுத்தர வீதத்திற்கெதிராக 100 ஐ.அ. டொலர்களுக்கு இலங்கை ரூ. 0.50 கொண்ட கழிவுடன் கொள்வனவு செய்யப்பட்டு இலங்கை ரூ. 20.00 கொண்ட கூடிய வீதத்தில் விற்பனை செய்யப்பட்டன.

**ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம்**

1986 இல் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தினூடாக ஏற்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் மொத்தப் பெறுமதி ரூ. 79,076 இலட்சமாக அமைந்தது. இது முந்திய ஆண்டின் ரூ. 59,601 இலட்சங் கொண்ட மொத்தத் தொகையுடன் ஒப்பிடத்தக்கது.

ஆய்விற்குரிய ஆண்டின் தேறிய கொடுப்பனவுகள் 1985 இன் ரூ. 9,273 இலட்சங் கொண்ட தேறிய கொடுப்பனவுகளுக்கெதிராக ரூ. 9,256 இலட்சமாக அமைந்தன.

உடன்மாற்று, முன்மாற்று வீதங்களிலான ஆறு மாதங்கள் வரைக்குமான நாணயங்களின் விற்பனைகளும், கொள்வனவுகளும் தொடர்ந்தும் விளங்கின. தொடர்புபட்ட நாணயங்களாக வங்காளதேச தக்கா, பர்மிய கியத், இந்திய ரூபாய், ஈரானிய ரியால், நேபாள ரூபாய், பாக்கித்தான் ரூபாய் என்பன விளங்கின.

**குறுங்காலக் கொடுகடன்**

அரச, அரச உத்தரவாதப் பிணைகளைப் பொறுப்பாக வைத்து வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட குறுங்கால முற்பணங்களின் மீதான மத்திய வங்கியின் வட்டி வீதமும் (வங்கி வீதம்) வர்த்தக மற்றும் உற்பத்திகள் தொடர்பாக வாக்குறுதிச் சான்றிதழ்களைப் பிணையாக வைத்துப் பெறப்படும் கடன்கள் மீதான வட்டியும் 1986 இல் தொடர்ந்தும் ஆண்டிற்கு 11 சதவீதமாக விளங்கியது.

ஏற்றுமதிகளுக்கான மீள் நிதியிடல் திட்டங்களின் கீழ் வர்த்தக வங்கிகளுக்கான மத்திய வங்கியின் கடன் வசதி இவ்வாண்டிலும் தொடர்ந்தும் தொழிற்பாட்டிலிருந்தது. வகை 1 இற்கு உட்பட்ட ஏற்றுமதிகளுக்கான மீள் நிதியிடலுக்குரிய காலப்பகுதி (மரபுவழி ஏற்றுமதிகள்) 60 நாட்களிலிருந்து 90 நாட்களுக்கு நீடிக்கப்பட்டது. இதே காலப்பகுதி வகை 11 இற்கு உட்பட்ட ஏற்றுமதிகளுக்கும் (மரபுவழியல்லாத ஏற்றுமதிகள்) பொருத்தமானதாகும். எனினும் இரு வகைகளிலும் ஒவ்வொரு விடயமும் தனித்தனியாக ஆராய்ந்து மேலும் 30 நாட்களால் மொத்தம் 120 நாட்களுக்கு நீடிக்கப்படுகின்றன. இரு வகைகளுக்கும் 90 நாட்களுக்கிடையில் ஏற்றுமதி வருவாய்கள் இலங்கைக்கு அனுப்பப்பட்டால் மட்டும் 4 சதவீதப்புள்ளிகள் கொண்ட வட்டித் தள்ளுபடி வழங்கப்பட்டது.

வகை 1 இன் கீழான ஏற்றுமதிகளுக்கான மீள் நிதியிடலுக்கான வட்டி வீதம் ஆண்டுக்கு 11 சதவீதமாகவும் கடன் வழங்கும் வீதம் ஆண்டுக்கு 14 சத வீதமாகவும் தொடர்ந்துமிருந்தது. வகை 11 இன் ஏற்றுமதிகளுக்குப் பொருத்த மான தொடர்பான வீதங்கள் ஆண்டுக்கு 6 சதவீதமாகவும், 9.8 சதவீதமாகவும் விளங்கின. இவ்வாண்டில் ஏற்றுமதிக் கொடுகடன் வசதியின் வகை 1 இன் கீழான ஏற்றுமதிகளுக்கான வர்த்தக வங்கியின் ஆகக்கூடிய உச்ச எல்லை ரூ. 15,000 இலட்சத்திலிருந்து ரூ. 16,634 இலட்சத்திற்கு அதிகரிக்கப்பட்டது.

நெல், காய்கறிகள், ஏனைய குறிப்பிட்ட உணவுப் பயிர்களின் உற்பத்தி தொடர்பாக கூட்டுறவுச் சங்கங்களின் அல்லது தனி நபர்களின் குறிப்பிட்ட காலப்பகுதிக்குரிய வாக்குறுதிப் பத்திரங்களைப் பிணையாகக் கொண்டு மத்திய வங்கியினால் வழங்கப்படும் முற்பணங்கள் மீதான வட்டி வீதம் ஆண்டுக்கு 1.5 சதவீதமாகத் தொடர்ந்தும் விளங்கியது. இம்முற்பணங்கள் புதிய அனைத் தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப் பட்டன. நெல் கொள்வனவையும் உள்ளூரில் பயிரிடப்படும் குறிப்பிட்ட சில பயிர்களின் கொள்வனவு, களஞ்சியப்படுத்தல் என்பவற்றையும் நிதியிடுவதற்காகக் கூட்டுறவுச் சங்கங்கள், வேளாண்மைப் பணி நிலையங்கள், அதிகாரம் பெற்ற தனியாட்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்ட முற்பணங்கள் தொடர்பான குறிப் பிட்ட காலப்பகுதிக்குரிய வாக்குறுதிப் பத்திரங்களைப் பிணையாகக் கொண்டு வர்த்தக வங்கிகளுக்கு வங்கியினால் வழங்கப்படும் வங்கி முற்பணங்கள் மீதான வட்டி வீதம் மாற்றமின்றி ஆண்டுக்கு 3 சதவீதமாக விளங்கியது. மகா வலிப் பிரதேசத்தில் மிளகாயைக் கொள்வனவு செய்வதற்காகக் கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையத்திற்கு மக்கள் வங்கியினால் வழங்கப்படும் முற் பணங்களின் பேரில் ஆகக்கூடியது ரூ. 1,000 இலட்சம் வரையிலான முற்பணங் கள் ஆண்டுக்கு 4 சதவீதத்தில் வழங்கப்பட்டவேளையில் மக்கள் வங்கி கூட் டுறவு மொத்த விற்பனை நிலையத்திற்கு இதனை 6 சதவீதத்திற்கு வழங்கியது.

### நடுத்தர நீண்டகால கொடுகடன்

1986 ஆம் ஆண்டில் மத்திய வங்கி நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியத்தின் கீழ் மீள் நிதியிடல் திட்டத்தினைத் தொடர்ந்தும் தொழிற்படுத்தியது. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களை மீள் நிதியிடுவதற்கான வட்டி வீதங்கள் மாற்றமின்றியிருந்தன. மத்திய வங்கி சுற்றுலாக் கைத்தொழிலின் நீண்டகாலம் வரவேண்டியவட்டி, கடன் தவணைகள் என்பவற்றிற்கான மூலதனத் தைத் தொடர்ந்தும் மீள் நிதியிட்டது. நடுத்தர, நீண்டகாலக் கொடுகடன் நிதி யத்தின் நிலுவை 1986 திசெம்பரில் ரூ. 7,750 இலட்சத்திலிருந்து ரூ. 10,250 இலட்சத்திற்கு அதிகரிக்கப்பட்டது. இதில் ரூ. 7,485 இலட்சம் 1986 திசெம்பர் 31 இல் கொடுகடன் நிறுவனங்களிலிருந்து வெளிநின்ற தொகையாகும்.

### வர்த்தக வங்கிக் கொடுகடன்

1984 இல் நடைமுறைக்கு வந்த கொடுகடன் எல்லைகள் 1986 இலும் தொடர்ந்தும் தொழிற்பாட்டிலிருந்தன. எனினும் ''கைத்தொழில்'' நோக்கத் திற்காக வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட கொடுகடன் 1986 பெப்புருவரி 21 இல் கொடுகடன் உச்ச எல்லையிலிருந்து விலக்களிக்கப்பட்டது. இவ் உச்ச எல்லைகளின் நியதிகளின்படி மத்திய வங்கி எல்லா வர்த்தக வங்கிகளையும் பின் வருவனவற்றை உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொண்டது:—

(அ) இன்றியமையாதனவல்லாத விடயங்களின் இறக்குமதிக்காக வழங்கப்பட்ட முற்பணங்களின் மொத்தத் தொகை 1984 மாச்சு 23 இல் வழங்கப்பட்டு வெளிநிற்கும் முற்பணங்களை விஞ்சக் கூடாது;

(ஆ) இன்றியமையாதனவல்லாத இறக்குமதிகளைப் பொறுத்தவரை 1984 மாச்சு 23 இல் வெளிநிற்கும் மட்டத்திற்கு அப்பால் எந்தவொரு தனிப்பட்ட இறக்குமதியாளர்களுக்கும் கொடுகடன் அதிகரிக்கப்படக் கூடாது;

(இ) ஏற்றுமதிகள், வேளாண்மை, கைத்தொழில் தவிர்ந்த ஏனையவற்றிற்காகத் தனியார்துறைக்கு வழங்கப்பட்டு வெளிநிற்கும் மொத்த முற்பணங்கள் 1984 மே 11 இல் வழங்கப்பட்டு வெளிநிற்கும் அத்தகைய மொத்த முற்பணங்களின் 5 சதவீதத்தினை விஞ்சக்கூடாது.

## ஒதுக்குத் தேவைகள்

1985 இன் எண் 52 கொண்ட நாணய விதிச் சட்டத்தின் (திருத்தம்) நியதிகளின்படி 1986 சனவரி 9 இலிருந்து ஒவ்வொரு வர்த்தக வங்கியும் வைத்திருக்க வேண்டிய ஒதுக்கின் மீதான குறைபாடுகளுக்கு நாளொன்றுக்கு ஒரு சதவீதத்தின் முப்பதிலொரு வீதத்திற்குப் பதிலாக நாளொன்றுக்கு ஒரு சத வீதத்தின் பத்திலொரு வீதத்தினை வட்டியாகச் செலுத்துமாறு வேண்டப்பட்டன.

வர்த்தக வங்கிகள் பேணவேண்டுமென வேண்டப்பட்ட குறிப்பிட்ட அதிகரித்த மட்டத்திற்கு மேலான வைப்புக்களுக்குப் பொருந்துவதான ஒதுக்கு வகுப்பு முறையின் கீழ் நிலவிய சிறிதளவிலான ஒதுக்குகள் 1986 பெப்புருவரி 28 இலிருந்து புறக்கீடு செய்யப்பட்டன. இம்மாற்றம் நீங்கலாக 1985 ஒகத்து 9 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட ஒதுக்குத் தேவைகள் 1986 ஆம் ஆண்டில் தொடர்ந்தும் தொழிற்பாட்டிலிருந்தன.

## திறைசேரி உண்டியல்களின் இரண்டாந்தரச் சந்தைத் தொழிற்பாடுகள்

இரண்டாந்தரச் சந்தையில் திறைசேரி உண்டியல்களின் கொடுக்கல் வாங்கல்களை மத்திய வங்கி தொடர்ந்தும் மேற்கொண்டது. மொத்த விற்பனைத் தொகை 1985 இன் ரூ. 758,441 இலட்சத்திலிருந்து 1986 இல் ரூ. 742,951 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மொத்தக் கொள்வனவுத் தொகை ரூ. 371,315 இலட்சத்திலிருந்து ரூ. 318,173 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

இவ்வாண்டுக் காலத்தில் அழைப்புப் பணச் சந்தையின் வட்டி வீதங்கள் ஆண்டிற்கு 9.0 சதவீதத்திற்கும், 12.75 சதவீதத்திற்கும் இடையில் வேறுபட்டமைந்தவேளையில் இரண்டாந்தரத் திறைசேரி உண்டியல் சந்தைத் தொழிற்பாடுகளுக்கு விதிக்கப்படத்தக்க கழிவு வீதங்கள் 10.0 சதவீதத்திற்கும், 10.5 சதவீதத்திற்கும் இடையில் வேறுபட்டிருந்தன.

**இந்தியாவிற்குக் குடிபெயர்ந்து செல்வோருக்கான உதவுதொகையும் வெகுமதிக் கொடுப்பனவும்**

1964 இல் இந்திய—இலங்கை உடன்படிக்கையின் கீழ் அடங்கும் இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளர்களை மீள அனுப்புதலைத், துரிதப்படுத்துவதற்கான இரு திட்டங்களையும் அரசின் சார்பில் வங்கி தொடர்ந்தும் செயற்படுத்தியது. அவையாவன:--

(அ) ஒப்புதலளிக்கப்பட்ட உதவு தொகைகளின் 65 சதவீதத்திற்குச் சமமான தொகை அல்லது அதன் ஒரு பகுதி அத்தகைய குடிபெயர்ந்து செல்வோருக்குச் செலுத்தப்பட வேண்டுமென்ற நியதியைக் கொண்ட உதவு தொகைத் திட்டமும்,

(ஆ) நாட்டை விட்டு வெளியேறும் ஒவ்வொருவருக்கும் வெகுமதிக் கொடுப்பனவான ரூ. 500 உம் அதில் 65 சதவீதமும் இலங்கையை விட்டு இத்தொழிலாளர்கள் நீங்குவதற்கு ஊக்குவிப்புப் பணமாகச் செலுத்தப்படும் திட்டமும் ஆகும்.

வங்கி இவ்விரு திட்டங்களையும் வர்த்தக வங்கிகளுக்கூடாகச் செயற்படுத்தியது. உதவுதொகைத் திட்டத்தின் கீழ் 1986 இல் இந்தியாவிற்குத் திரும்பிச் செல்வோருக்கு ரூ. 4.67 இலட்சம் கொண்ட தொகை செலுத்தப்பட்டது. இவ்வாண்டில் நாட்டை விட்டு வெளியேறிய 129 இந்தியா திரும்புவோர் தொடர்பான வெகுமதிக் கொடுப்பனவுகள் ரூ. 5 இலட்சமாக அமைந்தன.

**கட்டாயச் சேமிப்பு நிதியம்**

மத்திய வங்கியானது 1971 இன் எண் 6 கொண்ட கட்டாய சேமிப்புக்கள் சட்டத்தினதும், 1972 இன் எண் 15 கொண்ட வருமான உச்ச வரம்பு, கட்டாய சேமிப்புக்கள் சட்டத்தினதும் நியதிகளில் சேகரிக்கப்பட்ட பணத்தின் பாதுகாவலனைத் தொடர்ந்தும் விளங்கியதுடன், அரசின் சார்பாகக் கட்டாய சேமிப்பு நிதியத்தின் நிருவாகத்தினையும் மேற்கொண்டது. இவ்வாண்டில் வங்கி பெற்ற 1,263 மீளளிப்பு விண்ணப்பங்கள்மீது அதன் உதவுநர்களுக்கு ரூ. 36 இலட்சத்தை (வட்டியுட்பட) செலுத்தியது.

**அரச கணக்குகள்**

அரசின் வங்கியாளராக வங்கித் தொழில் திணைக்களத்தின் அரச கணக்குக் கிளையானது அரச திணைக்களங்கள், அரச முகவர்கள் மற்றும் நிறுவனங்கள் சில நியதிச் சட்டசபைகள் என்பவற்றின் கணக்குகளைத் தொடர்ந்தும் பேணி வந்தது. 1986 திசெம்பர் இறுதியில் அரச கணக்குக் கிளையில் செயற்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை 162 (அரச திணைக்களங்கள் 147, ஏனையவை 15) ஆக விளங்கியது.

## நாணய வெளியீடு

1986 திசெம்பர் 31 இல் சுற்றோட்டத்திலுள்ள மொத்த நாணயம் ரூ. 128,632 இலட்சமாக விளங்கி ரூ. 122,290 இலட்சங் கொண்ட தாள்களையும், ரூ. 6,342 இலட்சங் கொண்ட குத்திகளையும் உள்ளடக்கியிருந்தது. முந்திய

ஆண்டின் இறுதியில் விளங்கிய எண் தொகையான ரூ. 113,194 இலட்சத்தினை விட இது ரூ. 15,438 இலட்சங் கொண்ட அதிகரிப்பினைப் பிரதிபலிக்கின்றது. இவ்வாண்டில் நாணயத் தாள்கள், குத்திகளின் சுற்றோட்டம் முறையே ரூ. 14,652 இலட்சத்தினாலும், ரூ. 786 இலட்சத்தினாலும் அதிகரித்தது.

ஆங்கிலத்தில் வங்கியின் பெயர் ''சென்றல் பாங்க் ஒவ் சிலோன்'' என்பதிலிருந்து, ''சென்றல் பாங்க் ஒவ் சிறீலங்கா'' என மாற்றப்பட்டதன் விளைவாக 1985 திசெம்பர் 31 இல் (சட்டத்தினை மாற்றியமைத்த நாள்) அல்லது அதன் பின்னரான திகதிகளைக் கொண்ட வங்கியினால் அச்சிடப்படும் தாள் நாணயங்களுக்கு இம் மாற்றத்தினைப் புகுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. குத்திகளைப் பொறுத்தவரை 5– ரூபா நாணயத்தின் விளிம்பில் காணப்படும் வங்கியின் ஆங்கிலத்திலான சுருக்கமான தலைப்பு ''சி.பி.சி.'' என்பதற்குப் பதிலாக ''சி.பி.எஸ்.எல்'' என மாற்றியமைக்கப்பட்டது. எனினும் வங்கியின் சிங்கள, தமிழ்ப் பெயர்கள் மாற்றமின்றியிருந்தன.

ஆய்விற்குரிய ஆண்டில் தாள் நாணயங்களின் நீர்க்கோட்டு வடிவத்தினுள் அமைந்த சிங்கத்தின் படத்தினை மாற்றியமைப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. இதன்படி ஆங்கிலத்தில் வங்கியின் பெயர் மாற்றத்திற்கு ஏற்ப எல்லா நாணயத் தாள்களும் நீர்க்கோட்டு வடிவத்தினுள் அமைந்த சிங்கம் தேசியக் கொடியில் உள்ளது போன்று அமையும் இவ்வாண்டில் 1000/- ரூபா தாள் நாணயத்தினையும் புதிய வடிவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## வங்கித் தொழில் அபிவிருத்தி

1986 இன் ஆரம்பத்தில் 600 முதன்மைக் கிளை அமைப்புக்களுடன் 21 வெளிநாட்டு வங்கிகளையும், 4 உள்நாட்டு வங்கிகளையும் உள்ளடக்கி 25 வர்த்தக வங்கிகள் இலங்கையில் தொழிற்பட்டன. இவற்றுடன் 914 கிராமிய வங்கிகளும், 53 வேளாண்மை பணி நிலையங்களும், பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் 17 கிளைகளும் காணப்பட்டன. வெளிநாட்டு வங்கிகளின் இரு பிரதிநிதித்துவ அலுவலகங்களும் இரு வணிக வங்கித் தொழில் கூட்டு நிலையங்களும் நாட்டில் தொழிற்பட்டன.

ஆய்விற்குரிய ஆண்டில் வங்கித் தொழில் அபிவிருத்தியில் பல மாற்றங்கள் காணப்பட்டன. 1986 திசெம்பர் 31 இலிருந்து இரு வெளிநாட்டு வங்கிகள் இலங்கையில் தமது தொழிற்பாடுகளை நிறுத்திக் கொண்டன. வரையறுக்கப்பட்ட மத்திய கிழக்கின் யூனியன் வங்கியினால் வரையறுக்கப்பட்ட டுபாய் வங்கி, கையேற்கப்பட்டமையினால், வரையறுக்கப்பட்ட மத்திய கிழக்கின் யூனியன் வங்கியினது கொழும்புக் கிளை வரையறுக்கப்பட்ட டுபாய் வங்கியின் கொழும்புக் கிளையின் தொழிற்பாட்டினைக் கையேற்றதுடன் வரையறுக்கப்பட்ட மத்திய கிழக்கின் யூனியன் வங்கி என்ற பெயரின் கீழ்த் தொடர்ந்தும் தொழிற்பட்டது. 1980 இல் இலங்கையில் தனது கிளையை நிறுவிய ''பாங்க் ஒவ் அமெரிக்கா'' உலகளாவிய அதன் சிக்கனப்படுத்தல் செயற்றிட்டத்தின் ஒரு பகுதியாக அதன் கிளையை 1986 திசெம்பர் 31 இல் மூடிவிட்டது. இம்மாற்றங்களுடன் 1986 திசெம்பர் இறுதியில் நாட்டில் தொழிற்பட்ட வெளிநாட்டு வங்கிகளின் மொத்த எண்ணிக்கை 21 இலிருந்து 19 ஆகக் குறைவடைந்தது. இவ்வாண்டில் நாணயவிதிச் சட்டத்தின் 121பி பிரிவின் கீழ் இரு உள்நாட்டு ஒன்றிணைந்த வர்த்தக வங்கிகளை நிறுவுவதற்கு உத்தரவு வழங்கப்பட்டு இவ்வாண்டின் இறுதியில் அவற்ற

நிறுவுவதற்கான தொடக்க வேலைகளும் நடைபெறுகின்றன. இலங்கையில் தொழிற்படும் இரு பிரதிநிதித்துவ அலுவலகங்களில் மெலன் வங்கி என்.ஏ. இலங்கை 1986 பெப்புருவரியிலிருந்து அதன் தொழிற்பாடுகளை நிறுத்திக் கொண்டது.

இவ்வாண்டில் இரு அரச வங்கிகளும் 7 புதிய கிளைகளைத் திறந்தன. இலங்கை வங்கி அநுராதபுர மாவட்டத்தில் மீகல்லாவ, எப்பாவெல ஆகிய இடங்களில் 3 கிளைகளையும், மாத்தறை மாவட்டத்தில் ருகுணுப் பல்கலைக்கழக வளாகத்தில் ஒரு கிளையையும் ஆரம்பித்தவேளையில் அதன் ஒல்கொட் மாவத்தைக் கிளையை 1986 திசெம்பரில் மூடியது. இதன்படி 1986 திசெம்பர் இறுதியில் இலங்கை வங்கிக் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 238 ஆக விளங்கியது. மக்கள் வங்கி இவ்வாண்டில் 4 கிளைகளைத் திறந்தது. இவற்றில் இரண்டு கொழும்பு மாவட்டத்தில் மல்வத்தை வீதியிலும், கட்டுப்பெத்தவிலும், ஒன்று அநுராதபுர மாவட்டத்தில் தலாவயிலும் மற்றையது கம்பகா மாவட்டத்தில் ருகமவிலும் அமைந்தன. இவ்வாறாக 1986 இறுதியில் மக்கள் வங்கிக் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 297 ஆக விளங்கியது. இலங்கை வர்த்தக வங்கியும் 1986 திசெம்பரில் குருநாகலையில் ஒரு புதிய கிளையினைத் திறந்தவேளையில் ஸ்ரேட் பாங் ஒவ் இந்தியா 1986 பெப்புருவரியில் அதன் அநுராதபுரக் கிளையை மூடியது. இம் மாற்றங்களுடனும் ''பாங்க் ஒவ் அமெரிக்கா'', வரையறுக்கப்பட்ட டுபாய் வங்கி என்பனவற்றின் மூடுதல்களுடனும் 1985 இறுதியில் 600 ஆக விளங்கிய வர்த்தகவங்கிக்கிளைகளின் மொத்த எண்ணிக்கை 1986 இல் 604 ஆக உயர்வடைந்தது.

தேசிய சேமிப்பு வங்கி 1986 இல் கல்நேவ, மாவனல்ல, பண்டாரவெல ஆகிய இடங்களில் மூன்று கிளைகளைத் திறந்ததுடன் அதன் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 60 ஆக விளங்கியது.

பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் (பி.கி.அ.வ.) 1986 இல் 15 புதிய கிளைகளைத் திறந்ததுடன் (தலைமை அலுவலகங்கள் நீங்கலாக) அவற்றின் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 32ஆக விளங்கியது. அம்பாந்தோட்டை மாவட்டத்தில் உள்ள அம்பலாந்தோட்டையில் தலைமை அலுவலகத்தினைக் கொண்டு 1986 திசெம்பரில் ஒரு புதிய பிரதேச கிராமிய அபிவிருத்திவங்கி நிறுவப்பட்டது.

மத்திய வங்கி இலங்கையில் வங்கித் தொழில்துறையினை நவீனமயப்படுத்துவதனை ஊக்குவிக்கும் கொள்கையினைத் தொடர்ந்தும் கொண்டிருந்தது. இக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதில் மத்திய வங்கி வரையறுக்கப்பட்ட கொங்கொங் அன்ட் சங்காய் வங்கிக்கு எலக்ரோனிக் ரெலர் காட் பொறியினை நிறுவுவதற்கு அனுமதியினை வழங்கியது. இந்த வங்கியினால் இத்தகைய இரு எலக்ரோனிக் ரெலர் காட்பொறிகள் நிறுவப்பட்டதுடன் இலங்கை 1986 இல் முதன் முதலாக மின்னியல் வங்கித் தொழில் பணியில் நுழைந்தது. தன்னியக்கக் காசோலைத் தீர்ப்பனவுமுறையினை அறிமுகம் செய்வதற்கு முயற்சி எடுத்ததன் மூலம் மத்திய வங்கி வங்கித் தொழில் பணிகளைக் கணனிமயப்படுத்துவதற்கு முயற்சியெடுத்தது. இத்துடன் பல வர்த்தக வங்கிகள் கிளைகளிலிருந்து தகவல்களை உரிய வேளையில் சேகரிப்பதற்காகத் தரவுத் தொடர்பூட்டல் வலையமைப்பினையும் அறிமுகம் செய்தன.

## வங்கி மேற்பார்வை

### வர்த்தக வங்கிகள்

நாணய விதிச் சட்டத்தின் 29 (1) பிரிவின் கீழ் 1986 இல் மத்திய வங்கி 1986/87 பரீட்சிப்புக் காலப்பகுதியில் பதினொரு வர்த்தக வங்கிகளைப் பரீட்சிக்கத் தொடங்கி இவற்றில் மூன்று பரீட்சிப்புக்களைப் பூர்த்தி செய்துள்ளது. மேலும் அனைத்து வர்த்தக வங்கிகளினதும் நிதி நிலைமைகள் ஒவ்வொரு மாத இறுதியிலும் வங்கிகளினால் வழங்கப்பட்ட சொத்துக்கள் பொறுப்புக்களைக் கொண்ட கூற்றின் அடிப்படையில் கண்காணிக்கப்பட்டன. 1985 ஆம் ஆண்டிற்கான வங்கிகளின் இலாபத் தன்மையும் அவற்றினால் வழங்கப்பட்ட திரட்டுக்களின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டன. வெளிநாட்டு வங்கிகளினால் அவற்றின் ஊழியர்களுக்கு வழங்கப்படும் பயிற்சி வசதிகளையும் வங்கி கண்காணித்து வந்தது.

வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் திட்டத்தின் கீழ் வர்த்தக வங்கிகளினால் நிறுவப்பட்ட வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளின் கொடுக்கல் வாங்கல்களைக் கண்காணிக்கும் அதன் நிகழ்ச்சித் திட்டத்தினைத் தொடர்ந்தும் மேற்கொண்டது.

### நிதிக்கூட்டு நிலையங்கள்

1979 இன் எண் 27 கொண்ட நிதிக் கூட்டு நிலையங்களின் கட்டுப்பாட்டு ஒழுங்குகளின் கீழ் நாணயச் சபையுடன் பதிவு செய்து கொண்ட நிதிக் கூட்டு நிலையங்களை மேற்பார்வை செய்தல், பரீட்சித்தல் ஆகியவற்றில் வங்கி ஈடுபட்டது. 1986 திசெம்பர் 31 இல் 72 நிறுவனங்கள் மத்திய வங்கியுடன் பதிவு செய்து கொண்டன. பதிவிற்காக வங்கியினால் இவ்வாண்டில் பெறப்பட்ட இரு விண்ணப்பங்கள் இக்கூட்டு நிலையங்கள் நிதிக் கூட்டு நிலையங்களின் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கு ஒவ்வாதமையினால் நிராகரிக்கப்பட்டன.

நாணயச் சபையினால் வழங்கப்பட்ட விதிகளுக்கு இக்கூட்டு நிலையங்கள் எவ்வளவு தூரம் இசைந்துள்ளன என்பதனை மதிப்பிடும் பொருட்டு எழுபத்தொரு (71) கூட்டு நிலையங்கள் பார்வையிடப்பட்டன. சட்டத்தின் 15 (1) பிரிவின் கீழ் 13 கூட்டு நிலையங்களைப் பரீட்சித்தல் 1986 இல் தொடங்கியது. மேலும் நிதிக் கூட்டு நிலையக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட ஒழுங்கு விதிகளை மீறும் சில குறிப்பிட்ட கூட்டு நிலையங்களுக்கு எதிராகச் சட்ட ரீதியான நடவடிக்கையை ஏற்படுத்தும் பொருட்டு வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளர் சட்ட நடவடிக்கையை எடுக்கும் முதல் நடவடிக்கையாக அத்தகைய கூட்டு நிலையங்களுக்கு எதிராகக் காவல்துறையில் முறைப்பாடுகளைச் செய்தார். நாணயச் சபை சட்டத்தின் 16 வது பிரிவின் கீழ் மூன்று கூட்டு நிலையங்களின் தொழிற்பாட்டினை நிறுத்துவதற்கும் ஒப்புதல் வழங்கியது. இதனைத் தொடர்ந்து ஒரு கூட்டு நிலையம் தொழிற்பாட்டினைத் தொடருவதற்கு அனுமதிக்கப்பட்ட வேளையில் மற்றைய இரு கூட்டு நிலையங்களைப் பொறுத்தவரையிலும் அவற்றினைக் கலைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இவ்வாண்டில் திரவச் சொத்துக்கள், மூலதன நிதியங்கள், மற்றும் ஒதுக்கு நிதியங்களுக்கான மாற்றல்கள் ஆகியவற்றின் தேவைப்பட்ட மட்டங்கள் தொடர்பாக நாணயச் சபையினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்குச் சிறப்பான இடமளித்து நிறைவேற்றுமுகமாக நிதிக் கூட்டு நிலையங்களினால் வழங்கப்பட்ட மொத்த வைப்புப் பொறுப்புக்களின் மாதாந்தக் கூற்றுக்கள், மொத்தத் திரவச் சொத்துக்கள், ஆண்டு இலாப நட்டக் கணக்குகள், ஐந்தொகை என்பன ஆய்வு செய்யப்பட்டன.

## அபிவிருத்தி நிதி

மத்திய வங்கியின் நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியத்தின் கீழான மீள் நிதியிடலுக்கான ஒப்புதல் 1986 இல் கணிசமான அதிகரிப்பைப் பதிவு செய்தது. வகைகள் II, III, IV ஆகியவற்றின் கீழான மீள் நிதியிடலின் மொத்தத் தொகை ரூ. 4,428 இலட்சமாக அமைந்தது. முந்திய ஆண்டினைப் போன்று ரூ. 3,164 இலட்சம் அல்லது 71 சதவீதம் கொண்ட பெருமளவு பங்கு சுற்றுலா விடுதிகளுக்கு வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் மீதான வட்டி நிலுவைகளுக்கு முதலிடுவதைப் பயன்படுத்துவது உட்பட நலிவுற்ற கைத்தொழில்களை மீள் நன்னிலைப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டது. வேளாண்மைத் துறைக்கான மீளளிப்பின் ஒப்புதல் ரூ. 806 இலட்சமாக அமைந்தது. இது முக்கியமாகப் பெருந்தோட்டத்துறைக்கான நடுத்தர முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் உள்நாட்டு நிதியிடல் கூறினை ஈடுசெய்வதற்காக வழங்கப்பட்ட ஒப்புதல்கள் காரணமாக ஏற்பட்டதாகும். மீள் நிதியிடல் ஒப்புதல்களின் பகுப்பு அட்டவணை 2.2 இல் தரப்பட்டுள்ளது.

சுற்றுலா விடுதித்துறைக்கு வழங்கப்பட்ட நிவாரண வழிமுறைகளை மத்திய வங்கி தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தியது. இத்திட்டம் 1984 இல் முதன் முதலாகக் கொண்டுவரப்பட்டது. இவ்வழிமுறைகள் முதலாவதாக 1987 மாச்சு வரையிலான கடன்கள் மீதான முதலையும் வட்டியையும் மீளச் செலுத்துவதற்கான சட்டரீதியான கால அவகாசத்தையும், பின்னர் நீடிக்கப்பட்ட காலத்திற்கு வெளிநின்ற கடன்களை மீள அட்டவணைப்படுத்துவதையும் நிலுவையிலுள்ள வட்டியில் 60 சதவீதத்தினை மத்திய வங்கி மீள் நிதியிடுவதனையும் உள்ளடக்கியிருந்தது. இச்சலுகைகள் சட்டரீதியான கால அவகாசத்தை 1989 மாச்சு வரை நீடிப்பதனையும் கடன்களுக்கு வழங்கப்பட்ட மீள அட்டவணைப்படுத்தல் அளவினை முன்பு அனுமதிக்கப்பட்ட 80 சதவீதத்திற்கு எதிராக 100 சதவீதத்திற்கு உயர்த்துவதனையும் உள்ளடக்கி 1985 இல் திருத்தப்பட்டது.

அட்டவணை 2.2

**நடுத்தர நீண்டகால கொடுகடன் நிதியம்**
**(வகைகள் II—IVஇன் கீழ் மீள்நிதியிடலின் ஒப்புதல்கள்)**

(ரூபா பத்து இலட்சங்களில்)

| வகை | 1984 | | 1985 | | 1986 | |
|---|---|---|---|---|---|---|
| | கடன் தொகை | மீள் நிதி யிடப்பட்ட தொகை | கடன் தொகை | மீள் நிதி யிடப்பட்ட தொகை | கடன் தொகை | மீள் நிதி யிடப்பட்ட தொகை |
| II ஏற்றுமதித்துறை .. | 113.0 | 79.1 | 13.7 | 9.0 | 41.4 | 29.0 |
| IIIஉம் IVஉம் | | | | | | |
| (i) வேளாண்மை .. | 0.1 | 0.1 | 2.6 | 1.6 | 134.4(அ) | 80.6 |
| (ii) கைத்தொழில் .. | 98.2 | 49.1 | 38.9 | 27.2 | 1.0 | 0.6 |
| (iii) சுற்றுலா விடுதிகள் | — | — | — | — | 2.5 | 1.5 |
| (iv) ஏனையவை .. | 2.2 | 1.3 | 6.5 | 3.9 | 16.5 | 14.7 |
| நலிவுற்ற கைத்தொழில்களை மீள் நன்னிலைப்படுத்தல் .. | — | — | 145.5 | 101.9 | 325.6(ஆ) | 316.4 |
| மொத்தம் | 213.5 | 129.6 | 207.2 | 143.6 | 521.4 | 442.8 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) நடுத்தர கால முதலீட்டு நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் மரப்பயிர் செயற்றிடங்களுக்கு வழங்கப்பட்ட ஐந்து கடன்களின் மொத்தத் தொகையான ரூ. 1,304 இலட்சங்களையும் உள்ளடக்கும்

(ஆ) சுற்றுலா விடுதிகளுக்கு வழங்கப்பட்ட ரூ. 409 இலட்சம் கொண்ட கடன்கள் மீதான நிலுவையிலுள்ள வட்டியின் மூலதனமாக்கலையும் உள்ளடக்கும்.

1986 முடிவில் ரூ. 3,713 இலட்சம் மொத்தத் தொகை கொண்ட கடன்களது மீள் அட்டவணை பூர்த்தியாக்கப்பட்டது. இது 66 உணவகச் செயற்றிட்டங்களை உள்ளடக்கியிருந்தது. இத்துடன் மத்திய வங்கி ரூ. 1,165 இலட்சம் மொத்தத் தொகை கொண்ட நிலுவையிலுள்ள வட்டியினையும் மீள் நிதியிட்டது. வேறு 48 உணவகங்களின் ரூ. 2,456 இலட்சங் கொண்ட மொத்தக் கடன்களை மீள அட்டவணைப்படுத்துவது பற்றி ஆலோசிக்கப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழான வளர்ச்சி அட்டவணை 2.3 இல் காட்டப்பட்டுள்ளது.

இவ்வாண்டில் நிதியின் சரியான பயன்பாட்டினையும் இலக்குகளை அடைவதனையும் மதிப்பிடும் வகையிலும் ஏதாவது கைத்தொழில் நலிவுகளுக்கான அறிகுறிகளை இனங்காண்பதற்காகவும் மீள் நிதியிடல் ஒப்புதல்கள் தொடர்பான பின்தொடர் வேலைகள் தீவிரப்படுத்தப்பட்டன.

பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பினால் வழங்கப்பட்ட இரண்டாவது சிறிய நடுத்தர கைத்தொழில் கொடுகடன் வழங்கலின் பயன்பாடு ஆய்வுக்குரிய ஆண்டில் வரவேற்கத்தக்க வகையில் முன்னேறியது. 1986 திசெம்பர் இறுதியில் இத்திட்டத்தின் கீழ் 1,751 செயற்றிட்டங்கள் தொடர்பாக மொத்தமாக ரூ. 7,487 இலட்சங் கொண்ட தொகை வழங்கப்பட்டது. கொடுகடன் வழங்குவதில் பங்குபற்றும் நிறுவனங்கள் மாதாந்தம் ஏறக்குறைய ரூ. 300 இலட்சங் கொண்ட முன்னேற்றமடைந்த கடப்பாட்டு வீதத்தினைப் பதிவு செய்துள்ளன. இதன் விளைவாகத் தற்போது சிறிய நடுத்தர கைத்தொழில் திட்டத்தின் II வது செயற்றிட்டம் 1987 இன் முதற் பகுதியில் முழுமையாகச் செயற்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

அட்டவணை 2.3

**சுற்றுலாக் கைத்தொழிலுக்கான நிவாரணம் — கடன்களின் மீளட்டவணை**

**(1986 திசெம்பரிலுள்ள திரட்டிய மொத்தம்)**

| கொடுகடன் நிறுவனங்களின் பெயர் | முடிவடைந்த மீளட்டவணை | | பரிசீலனையிலுள்ள மீளட்டவணை | | மத்திய வங்கியினால் மீள நிதியிடப்பட்ட நிலுவையிலிருக்கும் வட்டி |
|---|---|---|---|---|---|
| | உணவகங்களின் எண்ணிக்கை | கடன் தொகை (ரூபா) | உணவகங்களின் எண்ணிக்கை | கடன் தொகை (ரூபா) | தொகை (ரூபா.) |
| இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் ... | 25 | 132,686,710 | — | — | 72,979,789 |
| இலங்கை தேசிய அபிவிருத்தி வங்கி ... | 10 | 105,678,568 | 2 | 14,380,000 | 33,296,389 |
| மக்கள் வங்கி ... | 11 | 34,628,822 | 20 | 120,540,168 | — |
| இலங்கை வங்கி ... | 10 | 53,732,389 | 11 | 38,681,975 | — |
| வரையறுக்கப்பட்ட அட்டன் நெசனல் வங்கி . | 5 | 36,606,301 | 2 | 2,670,063 | 8,528,919 |
| வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி ... | 4 | 4,941,450 | 9 | 28,783,776 | — |
| கிறின்லேஸ் வங்கி ... | — | — | 1 | 6,964,285 | — |
| டியூச் வங்கி (ஆசியா) ஏ.ஜீ. ... | 1 | 3,059,256 | — | — | 1,833,943 |
| இந்தோசூயெஸ் வங்கி ... | — | — | 3 | 33,655,847 | — |
| மொத்தம் . | 66 | 371,333,496 | 48 | 245,676,114 | 116,589,040 |

**மூலம்:** இலங்கை மத்திய வங்கி.

மத்திய வங்கி தனது நேரடியான செயற்றிட்டப் பரிசீலனைகளுடன் அதன் சிறிய நடுத்தர முதலீட்டுப் பின்தொடர் வேலைகளைத் தீவிரப்படுத்தியது. 1986 இல் 98 செயற்றிட்டங்களில் நேரடியான பரிசீலனைகள் மேற்கொள்ளப்பட்டன. கைத்தொழில்களில் நலிவினைக் காட்டிய செயற்றிட்டங்களில் பின்தொடர் வேலைகள் முக்கியமாக வழிப்படுத்தப்பட்டதுடன் வங்கிகளுக்கு ஆலோசனை கூறுவதற்கும் தேவையானவிடத்து செயற்றிட்டங்களை மீள் நன்னிலைப்படுத்த அல்லது முன்னேற்றுவதற்கும் தக்க முயற்சிகள் எடுக்கப்பட்டன. கடன்களை மீளச் செலுத்துவதில் முன்னேற்றம் ஏற்பட்டமைக்கு மத்திய வங்கியின் பின்தொடர் நிகழ்ச்சித் திட்டம் முக்கிய பங்கு வழங்கியுள்ளமைக்குத் தெளிவான சான்று உள்ளது. நிலுவைகளில் உள்ளனவாகப் பகுக்கப்பட்ட சி.அ.கை. 1, சி.ந.கை.11 திட்டங்களின் கீழான கடன்கள் 1985 இன் 622 இலிருந்து 1986 இல் 492 இற்கு வீழ்ச்சியடைந்தன.

**கொடுகடன் உத்தரவாதத் தொழிற்பாடுகள்**

கொடுகடன் உத்தரவாதத் தொழிற்பாடுகளின் தொகுப்பொன்று அட்டவணை 2.4 இல் காட்டப்பட்டுள்ளது.

**சிறிய அளவு கைத்தொழில் திட்டம்**

சிறிய அளவு கைத்தொழில் திட்டத்தின் கீழான கொடுகடன் உத்தரவாத வழங்கல் 1981 இறுதியில் பூர்த்தியாக்கப்பட்டது. சிறிய அளவு கைத்தொழில் திட்டத்தின் கீழ் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் விதந்துரைப்பின் பேரில் கொடுகடன் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட கடன்களுக்கு மத்திய வங்கி அரசின் சார்பில் உத்தரவாதங்களை வழங்கியது. இதன் பயனாக மத்திய வங்கி ரூ. 310 இலட்சத்தினை உள்ளடக்கிய 767 உத்தரவாதங்களை வழங்கியது. 1986 திசெம்பர் இறுதியில் 545 கடன்கள் முற்றாக மீளப் பெறப்பட்டதாக அறிவிக்கப்பட்டதுடன் 62 உத்தரவாதங்கள் காலங் கடந்தனவாக அல்லது புறக்கீடு செய்யப்பட்டனவாகக் கருதப்பட்டன. 1986 முடிவில் வெளிநின்ற மொத்தக் கடன்கள் 108 ஆகும். இவற்றில் 105 கடன்கள் நிலுவையிலுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மத்திய வங்கி ரூ. 15 இலட்சம் கொண்ட 50 கோரல்களைத் தீர்த்து வைத்தது அல்லது ஏற்றுக் கொண்டது. மற்றும் 10 கோரல்கள் பரிசீலனையின் கீழ் உள்ளன. இக் கொடுப்பனவுகள் அரசின் வரவு செலவுத் திட்டத்திலிருந்து கிடைத்த நிதியங்களின் ஒதுக்கிலிருந்து செய்யப்பட்டன.

**சிறிய, நடுத்தர கைத்தொழில் திட்டம்—I**

1979 இல் ஆரம்பித்த சிறிய நடுத்தரக் கைத்தொழில் திட்டம் 1 கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் கீழ் மத்திய வங்கி கொடுகடன் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட கடன்களுக்குத் தனது சொந்த உத்தரவாதங்களை வழங்குதல் 1984 இல் பூர்த்தியாக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ்க் கடன்களில் ரூ. 2,860 இலட்சத்தினை உள்ளடக்கிய 1,668 உத்தரவாதங்கள் வழங்கப்பட்டன. இவற்றில் 913 கடன்களின் கீழ் வழங்கப்பட்ட ரூ. 890 இலட்சம் முழுமையாக மீளப் பெறப்பட்டது.

அட்டவணை 2.4

## மத்தியவங்கிக் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்கள் (1985—1986)
## (1986 திசெம்பர் 31 இல் உள்ளபடி)

(தொகை பத்து இலட்சம் ரூபாய்களில்)

| விடயம் | சிறிய அளவுக் கைத்தொழில்கள் | | | | சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள்- I | | | | சிறிய நடுத்தா அளவுக் கைத்தொழில்கள்-II | | | |
| | 1985 | | 1986 | | 1985 | | 1986 | | 1985 | | 1986 | |
| | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை |
| வழங்கப்பட்ட கடன்கள் ... | 767 | 31.2 | 767 | 31.2 | 1,664 | 284.1 | 1,668 | 286.1 | 831 | 382.3 | 1,540(உ) | 782.7 |
| உத்தரவாதமளிக்கப்பட்ட கடன்கள் ... | 767 | 23.4(அ) | 767 | 23.4(அ) | 1,664 | 156.4(இ) | 1,668 | 157.5(இ) | 831 | 204.7 (ஈ) | 1,540(உ) | 406.9(ஈ) |
| முழுமையாக மீளச்செலுத்தப்பட்ட கடன்கள் ... | 508 | 17.2 | 545 | 19.4 | 691 | 51.2 | 913 | 89.4 | 23 | 4.1 | 56 | 8.66 |
| புறக்கீடு செய்யப்பட்ட / காலங்கடந்த உத்தரவாதங்கள் ... | 62 | 3.6 | 62 | 3.6 | 45 | 11.4 | 48 | 12.8 | 23 | 6.9 | 50 | 30.33 |
| அனுமதிக்கப்பட்ட / தீர்க்கப்பட்ட கோரல்கள் | | | | | | | | | | | | |
| (i) வெளிநிற்கும் கடன்கள் ... | 47 | 2.0 | 50 | 2.067 | 95 | 10.835 | 123 | 15.900 | — | | 1 | 0.060 |
| (ii) அனுமதிக்கப்பட்ட பொறுப்புக்கள் | 47 | 1.5 | 50 | 1.550 | 95 | 6.502 | 123 | 9.541 | — | | 1 | 0.036 |
| நிராகரிக்கப்பட்ட கோரல்கள் | | | | | | | | | | | | |
| (i) வெளிநிற்கும் கடன்கள் ... | 2 | 0.22 | 2 | 0.22 | 10 | 2.83 | 13 | 4.05 | 2 | 0.17 | 2 | 0.17 |
| (ii) கோரப்பட்ட தொகை ... | 2 | 0.16 | 2 | 0.16 | 10 | 1.66 | 13 | 2.42 | 2 | 0.1 | 2 | 0.1 |
| வெளிநிற்கும் கடன்கள் ... | 148 | 3.6(ஆ) | 108 | 2.5(ஆ) | 823 | 105.8(ஆ) | 571 | 76.8(ஆ) | 783 | 371.4(ஆ) | 1,431(உ) | 490.0(ஆ) |
| (நிலுவையில் உள்ளவை) ... | 118 | 2.9 | 105 | 2.4 | 504 | 51.9 | 387 | 48.6 | 79 | 18.5 | 197 | 59.1 |
| வெளிநிற்கும் உத்தரவாதங்கள் ... | 148 | 2.7(அ) | 108 | 1.9(அ) | 823 | 60.9(இ) | 571 | 44.1(இ) | 783 | 231.9(ஈ) | 1,431(உ) | 260.0(ஈ) |
| தீராத கோரல்கள் | | | | | | | | | | | | |
| (i) வெளிநிற்கும் கடன்கள் ... | 13 | 0.4 | 10 | 0.685 | 69 | 14.1 | 82 | 16.428 | 5 | 0.52 | 12 | 4.326 |
| (ii) கோரப்பட்ட தொகை ... | 13 | 0.3 | 10 | 0.514 | 69 | 8.5 | 82 | 9.857 | 55 | 0.31 | 12 | 2.596 |
| கட்டணச் சேகரிப்பு | | 0.86 | | 0.89 | | 7.80 | | 8.69 | | 1.39 | | 3.39 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) 75 சதவீதமான வெளிநிற்கும் கடன்கள்
(ஆ) மீளப்பெறப்பட்ட தவணைப்பணம் தவிர்ந்த
(இ) வெளிநிற்கும் 60 சதவீதமான கடன்கள் ஆகக் கூடியது ரூ. 400,000/-
(ஈ) ரூ. 20 இலட்சம் மற்றும் ரூ. 12 இலட்சம் வரையான கடன்களையும் ரூ. 20 இலட்சத்திற்கும் ரூ. 40 இலட்சத்திற்கும் இடையிலான கடன்களையும் பொறுத்த வரையில் அகக் கூடியது ரூ. 800,000 என்ற வகையில் 60 சத வீதங்கொண்ட வெளிநிற்கும் கடன்கள்
(உ) 86-12-31 இல் பகிர்ந்தளிக்கப்பட்டமைபற்றி குறிப்பிடப்படாத ரூ. 1519.6 இலட்சம் கொண்ட 213 கடன்களையும் உள்ளடக்கும்.

1986 திசெம்பர் இறுதியில் ரூ. 768 இலட்சம் மொத்த நிலுவையைக் கொண்ட 571 கடன்கள் மீளப் பெறப்பட வேண்டியிருந்தன. நிலுவைகளிலுள்ள கடன்களின் எண்ணிக்கை 1985 இன் 504 இலிருந்து 1986 இல் 387 இற்கு வீழ்ச்சியடைந்தது. ஆனல் நிலுவைகளில் உள்ள கடன்களின் வெளிநின்ற மொத்தத் தொகை ரூ. 486 இலட்சமாக அல்லது இத்திட்டத்தின் கீழ் வெளி நின்ற கடன்களில் 63 சதவீதமாக விளங்கியது. 1986 முடிவில் கொடுகடன் நிறுவனங்களினல் சமர்ப்பிக்கப்பட்ட ரூ. 95 இலட்சம் கொண்ட 123 கோரல்களை மத்திய வங்கி தீர்த்துக் கொண்டது. ரூ. 24.2 இலட்சங் கொண்ட 13 கோரல்கள் நிராகரிக்கப்பட்டன. இத்திட்டத்தின் கீழான மொத்த உத்தரவாதக் நட்டணம் 1986 முடிவில் ரூ. 86.9 இலட்சமாக விளங்கியது.

சிறிய நடுத்தரக் கைத்தொழில் 1 கடன்களின் கைத்தொழில் ரீதியிலான பகுப்பு அட்டவணை 2.5 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.5

**கடன்களின் கைத்தொழில் வகைப்படியான பகுப்பாய்வு சிறிய நடுத்தரக் கைத்தொழில் — திட்டம் I**

தொகை ஆயிரம் ரூபாய்களில்

| கைத்தொழில் | 1979—1986 | | |
|---|---|---|---|
| | கடன்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை | உத்தரவாதமளிக்கப்பட்ட தொகை |
| 1. நெல் குத்துதல் .. | 352 | 53,510 | 31,500 |
| 2. மென் பொறியியல் .. | 192 | 24,775 | 13,869 |
| 3. செங்கட்டிகளும் ஏனைய கட்டிடப் பொருட்களும் | 242 | 48,949 | 27,260 |
| 4. தைக்கப்பட்ட உடுப்புகள், பதிதக் கைத்தறி, விரிப்புக்கள் இன்னேரன்னவை .. | 142 | 22,142 | 11,525 |
| 5. இறப்பரும் இறப்பரை அடிப்படையாகக் கொண்ட பொருட்களும் .. | 31 | 9,294 | 4,696 |
| 6. காலணிகளும் ஏனைய தோல் உற்பத்திகளும் | 22 | 3,452 | 1,821 |
| 7. பனங்கட்டியும் கரும்பு உற்பத்திகளும் | 6 | 198 | 119 |
| 8. தளபாடங்களும் ஏனைய மரப் பொருட்களும் | 80 | 9,806 | 5,579 |
| 9. தும்பும் தும்பை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளும் . | 96 | 8,901 | 5,321 |
| 10. எழுது கருவிகளும் ஏனைய தாளுற்பத்திகளும் | 27 | 4,636 | 2,582 |
| 11. உணவும் குடி பானங்களும் .. | 80 | 13,202 | 6,953 |
| 12. பூச்சுக்கள், மினுக்கிகள், வண்ணமெழுகு இன்னேரன்னவை . | 16 | 5,503 | 2,967 |
| 13. வானெலி, ஈருருளிகள் என்பவற்றிற்கான உதிரிப்பாகங்கள் . | 11 | 725 | 435 |
| 14. சவர்க்காரம் ஏனைய குளியலறைப் பொருட்கள் | 30 | 2,004 | 1,177 |
| 15. கைப்பணிப் பொருட்களும் பொம்மைகளும் | 29 | 951 | 571 |
| 16. சுருட்டுக்களும் பீடிகளும் .. | 6 | 48 | 28 |
| 17. மீன்பிடி வள்ளங்களும் உள்ளூர் கடற்றொழிலும் .. | 14 | 11,100 | 4,700 |
| 18. நகைகளும் இரத்தினக் கற்களும் | 15 | 944 | 566 |
| 19. விளையாட்டுப் பொருட்கள் .. | 2 | 80 | 48 |
| 20. வேளாண்மைக் கருவிகள் .. | 13 | 2,213 | 1,128 |
| 21. கண்ணுடியும் ஏனைய உற்பத்திகளும் .. | 6 | 1,051 | 631 |
| 22. பித்தளையும் அலுமினியப் பொருட்களும் .. | 44 | 6,850 | 3,370 |
| 23. மரம் அரிதல் .. | 52 | 11,113 | 6,645 |
| 24. அச்சகம் .. | 44 | 12,906 | 6,951 |
| 25. பல்வகை | 116 | 31,763 | 17,089 |
| மொத்தம் . | 1,668 | 286,116 | 157,531 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## சிறிய நடுத்தா கைத்தொழில் திட்டம்—II

சிறிய நடுத்தரக் கைத்தொழில் திட்டம் 11 கொடுகடன் உத்தரவாதத் திட்டம் 1982 இல் ஆரம்பிக்கப்பட்டு அதன் தொடக்க ஆண்டுகளில் மெதுவான வளர்ச்சியைப் பதிவு செய்தன. ஆய்வுக்குரிய ஆண்டில் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பினால் வழங்கப்பட்ட இரண்டாவது சிறிய நடுத்தரக் கொடுகடனின் பயன்பாட்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டது. 1986 திசெம்பர் இறுதியில் மத்திய வங்கி 1,540 உத்தரவாதங்களை வழங்கியது. இது கடன்களில் வழங்கப்பட்ட ரூ. 7,827 இலட்சத்தினை உள்ளடக்கியிருந்தது. 1986 இறுதியில் ரூ. 87 இலட்சம் கொண்ட 56 கடன்கள் முற்றாக மீளப் பெறப்பட்டன. வெளிநின்ற கடன்களில் ரூ. 591 இலட்சங்களைக் கொண்ட 197 கடன்கள் நிலுவையில் இருந்தன. இத்திட்டத்தின் கீழ் மத்திய வங்கி ஒரு கோரலைத் தீர்த்து வைத்த வேளையில் 12 கோரல்கள் பரிசீலனையில் இருந்தன. சிறிய நடுத்தரக் கைத்தொழில் திட்டம் 11 இன் கீழ் வழங்கப்பட்ட கடன்களில் கைத்தொழில் ரீதியான பகுப்பு அட்டவணை 2.6 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.6

**கடன்களின் கைத்தொழில் வகைப்படியான பகுப்பாய்வு**
**சிறிய நடுத்தரக் கைத்தொழில் திட்டம் II**

தொகை ஆயிரம் ரூபாய்களில்

| கைத்தொழில் | 1982 – 1986 | | | 1986 | | |
|---|---|---|---|---|---|---|
| | கடன்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை | உத்தரவாதமளிக்கப்பட்ட தொகை | கடன்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை | உத்தரவாதமளிக்கப்பட்ட தொகை |
| 1. உணவு பதப்படுத்தல் ... | 491 | 257,644 | 132,535 | 243 | 136,444 | 69,570 |
| 2. ஏனைய வேளாண்மைக் கைத்தொழில்கள் ... | 35 | 14,613 | 7,648 | 11 | 5,940 | 3,164 |
| 3. இறப்பர் உற்பத்திகள் ... | 56 | 38,366 | 19,900 | 25 | 17,434 | 9,560 |
| 4. உலோக உற்பத்திகள் ... | 156 | 64,478 | 32,897 | 59 | 29,985 | 14,701 |
| 5. கட்டடப் பொருட்கள் ... | 105 | 61,114 | 32,834 | 49 | 29,229 | 15,579 |
| 6. கட்டடவாக்க ஒப்பந்தம் ... | 8 | 12,075 | 5,785 | 4 | 6,500 | 3,000 |
| 7. மர உற்பத்திகள் ... | 113 | 37,620 | 20,817 | 43 | 16,307 | 8,484 |
| 8. ஆடைகள் ... | 87 | 33,205 | 18,306 | 32 | 10,751 | 5,611 |
| 9. புடவைகள் ... | 32 | 19,356 | 10,668 | 12 | 10,053 | 5,406 |
| 10. தொழிற்கூடத்திருத்தல் ... | 63 | 24,655 | 14,366 | 38 | 15,860 | 9,276 |
| 11. ஏனையவை ... | 394 | 219,573 | 111,121 | 197 | 108,891 | 54,920 |
| மொத்தம் ... | 1,540 | 782,699 | 406,877 | 713 | 387,394 | 199,271 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## கிராமியக் கொடுகடன்

1986 இல் கிராமியக் கொடுகடன் தொடர்பான விடயத்தில் மத்திய வங்கி தீவிர பங்கினைத் தொடர்ந்தும் வகித்து வந்தது. இது தேசிய கொள்கைநெறி முறைகளை ஆக்கல், பல்வேறு கொடுகடன் திட்டங்களின் கண்காணிப்பும் மேற்பார்வையும், கிராமிய கொடுகடன் நிறுவனங்களின் ஊக்குவிப்பு, அபிவிருத்தி என்பனவற்றை உள்ளடக்கும். 1985 இல் நிறுவப்பட்ட நான்கு பிரதேச கிராமிய

அபிவிருத்தி வங்கிகள் 1986 இல் மேலும் பல கிளைகளுக்கு விரிவடைந்ததுடன் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் புதிய பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியொன்றும் நிறுவப்பட்டது.

கிராமிய கொடுகடன் மதியுரைச் சபை மீளாய்வின் கீழுள்ள ஆண்டில் ஏழு அமர்வுகளை நடத்தின. இவ்வமர்வுகளில், கிராமிய கொடுகடன் தொடர்பான பல கொள்கை முறைகள் கலந்துரையாடப்பட்டன. இவற்றில், குடித்தொகையில் மிகவும் ஏழ்மை வகுப்பினரால் மேற்கொள்ளப்பட்ட உற்பத்தி–தொழில்நிலை தொடர்பான நடவடிக்கைகளுக்கு உதவும் பொருட்டு வங்கிகளால் வழங்கப்பட்ட முதலீட்டுக் கடன்களுக்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டம் ஒன்றினை அறிமுகப்படுத்துவதற்கான விருப்பம், கடன்கள் மீதான இறுதிப் பயன்பாட்டு மேற்பார்வையையும் பின்தொடர் நடவடிக்கைகளையும் வலுப்படுத்துவதற்காகக் கடன் வழங்கும் வங்கிகளால் மேலதிக மேற்பார்வை அலுவலர்களை நியமிப்பதற்கான தேவை, புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் நிதியிடப்பட்ட பல்வேறு பயிர்களுக்கான நிதியின் அளவில் மேற்கொள்ளப்பட்ட திருத்தம், வேளாண்மையாளரின் தேவைகளுக்குக் கூடியளவில் இசைவளிக்கும் வகையில் அமையச் செய்வதன் பொருட்டு வேளாண்மைக் காப்புறுதித் திட்டத்தின் குறைபாடுகளின் பரிசீலனை என்பன விளங்கின. பன்னாட்டு முகவர் நிலையங்களினால் வழங்கப்பட்ட கடன்களினதும் மீள்நிதியிடல் ஒதுக்குகளினதும் மெதுவான பயன்பாடு சபையின் கவனத்தை ஈர்த்ததுடன் கடன் வழங்கலை விரைவுபடுத்துவதற்கான பல்வகை எடுத்துரைப்புக்களையும் சபை கவனத்திற் கொண்டது. நாட்டின் கால்நடைத்துறையில் பிரச்சினைகளைப் பரிசீலிப்பதற்கும் இப்பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதற்கான ஏற்ற விதந்துரைப்புக்களைச் செய்வதற்காகவும் மத்திய வங்கி, மக்கள் வங்கி, இலங்கை வங்கி, நிதி திட்டமிடல் அமைச்சு, திட்ட நடைமுறைப்படுத்தல் அமைச்சு ஆகியவற்றிலிருந்தான பிரதிநிதிகளைக் கொண்ட குழுவைச் சபை நியமித்தது. இக்குழு அதன் அறிக்கையைச் சபைக்கு அதன் கவனத்திற்காகக் கையளித்தது. சபை பாற்பண்ணை அபிவிருத்திக்கான கொடுகடன் திட்டத்திற்கும் கேகாலை ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டக் கடன் திட்டத்திற்கும் 1986 இல் அனுமதி வழங்கியது. நடுத்தர நீண்ட காலக் கொடுகடன் நிதியத்தின் வகை 1 இன் கீழ் வழங்கப்பட்ட கடன்களுக்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டம், ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியிடப்பட்ட இரண்டாவது (மேற்கு கரை) கடற்றொழில் செயற்றிட்டத்தின் கீழ்வழங்கப்பட்ட கடன்களுக்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டம், உருளைக் கிழங்குப் பயிர்ச்செய்கைக்கான நிதியின் அளவுகளில் திருத்தம் ஆகியனவும் சபையினால் அனுமதிக்கப்பட்டன.

1986 சிறுபோகத்திலிருந்து மத்திய வங்கி புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தைச் செயற்படுத்தியதுடன் இக்காலத்தில் பயிர்ச்செய்கைக் கடன்களாக மொத்தம் ரூ. 1,509 இலட்சத்திற்கு ஒப்புதலளித்தது. இது முன்னைய 20 ஆண்டுகளில் சிறுபோகத்திற்கான சராசரி கடன் வழங்கல் மட்டத்தினை விஞ்சுகின்றது. இதற்கு முன்பு வழங்கப்பட்ட கடன்களின் அதிகூடிய அளவு வங்கித் தொழில் துறை 1985 சிறுபோக காலத்திற்காக 1985 இல் வழங்கிய ரூ. 368 இலட்சமாகும். புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்கள் 50 சதவீதம் வரையான உத்தரவாதக் காப்பினைக் கொண்டிருந்தது. சிக்கனக் கொடுகடன் கூட்டுறவு அமைப்புக்களும் இத்திட்டத்தின் கீழ் வேளாண்மை உறுப்பினர்களுக்குக் கடன் வழங்குவதைத் தொடங்கின. வங்கித் தொழில் முறையினால் ஆதரவளிக்கப்பட்ட

கடன் திட்டத்தில் இவ்வமைப்புக்கள் பங்குபற்றியமை இதுவே முதற்றடவை யாகும். மூன்று ஆண்டுகளுக்கான பயிர்ச்செய்கைக்குரிய கொடுகடன் தக்க காரணங்களுடன் கடன் செலுத்தத் தவறியவர்களின் மீள நிகழ்ச்சி நிரலிடப்பட்ட கடன்கள் தொடர்பான மீள் சுழல்வடையும் வசதிபோன்ற இத்திட்டத்தின் ஏனைய பண்புகள் வங்கிகளாலும் வேளாண்மையாளர்களாலும் திருப்திகரமாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடு கடன் திட்டத்தில் இணைக்கப்பட்ட புதிய அறிக்கையிடல் முறை பயிர்ச்செய்கைக் கடன்களின் வழங்கல் மீளப்பெறல் தொடர்பான தரவுகளின் கணனிமயப்படுத் தலுக்கு உதவியது. இக்கொடுகடன் திட்டத்தின் தொழிற்பாட்டின்மீது திருப்தி யான தரவுகளைப் பெற முடிந்ததுடன் புவியியல் அமைப்பு ரீதியாகவும் பல்வேறு கடன்பட்டோர் வகையாகவும் கடன்களின் பரம்பலின் விபரமான பகுப்பாய்வினை கடன் வழங்கும் வங்கிகளுக்கு ஒரு குறுகிய காலத்தில் வழங்கவும் முடிந்தது. தக்க காரணத்துடன் கடன் செலுத்தத் தவறியவர்களின் மீள அட்டவணைப் படுத்தப்படும் பயிர்ச்செய்கைக் கடன்களுக்கான மீள் நிதியிடலை மத்திய வங்கி வழங்கும். மீள் சுழல்வடையும் வசதியின் திறமையான செயற்பாட்டிற்கும் மத்திய வங்கியின் கண்காணிப்பு முறை உதவியது.

இலங்கை எண்ணெய் கொழுப்புக் கூட்டுத்தாபனத்தினால் கால்நடை உணவு, தாவர எண்ணெய் ஆகியவற்றின் உற்பத்திக்குத் தேவையான சோளம், சோயா அவரை, பருப்பு வகை மற்றும் மட்டரகத் தானியங்கள் ஆகியவற்றின் கொள் வனவுக்கு நிதியிடுவதற்கான சந்தைப்படுத்தல் கடன் திட்டம் மீளாய்வின் கீழுள்ள ஆண்டில் திருப்தியானளவில் இருந்தது. இத்திட்டம் முதலில் அறிமுகப்படுத்தப் பட்ட அநுராதபுரம் மாவட்டத்தில் 1986 இல் இந்நோக்கத்திற்காக ரூ. 150 இலட்சம் கொண்ட மொத்தத் தொகை வங்கிகளால் இலங்கை எண்ணெய் கொழுப்புக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டது. உற்பத்தியாளர்களுக்குச் சிறந்த விலைகளை உறுதிப்படுத்துவதற்கு இத்திட்டம் உதவியதென்பதை மாவட்ட வேளாண்மைக் குழு அவதானித்தது.

மீளாய்வின் கீழுள்ள ஆண்டில் கிராமிய துறைகளுக்கு நடுத்தர நீண்டகால கொடுகடனை வழங்குவதற்கு ஐந்து புதிய கொடுகடன் திட்டங்கள் அறிமுகப் படுத்தப்பட்டதோடு சில நடைமுறையிலுள்ள திட்டங்களுக்குத் திருத்தங்களும் அறிமுகப்படுத்தப்பட்டன. முன்னைய திட்டமான நுவரெலியா மாவட்டத்திலுள்ள பாற்பண்ணை அபிவிருத்திக்கான கொடுகடன் திட்டம் 1985 இல் நிறுத்தப்பட்டு அதற்குப் பதிலாகத் தீவு முழுவதற்குமான பாற்பண்ணை அபிவிருத்தித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இப் புதிய திட்டம் பால் கொண்டு செல்வதற்கான ஈருருளிகள், பொலிக்காளைகள் ஆகியவற்றின் கொள்வனவு, மாட்டுத் தொழு வங்களின் விரிவாக்கமும் மேம்பாடும், உயிர்வாயுப் பொறிகளின் அமைப்பு போன்றவற்றுக்கான கொடுகடன் போன்ற பல புதிய கூறுகளை உள்ளடக்கி யிருந்தது. மேலும் இலங்கை—ஆசிய அபிவிருத்தி வங்கி கால்நடை அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழ் கொழும்பு, காலி, கம்பகா, யாழ்ப்பாணம் (கிளிநொச்சி), களுத்துறை, கேகாலை, குருநாகல், புத்தளம் ஆகிய மாவட்டங்களில் பாற்பண்ணை

பன்றி, கோழி வளர்ப்புக்காகக் கடன்களை வழங்குவதற்கான கொடுகடன் திட்டமொன்றும் 1986 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. 1985 இல் அறிமுகப்படுத்தப்பட்ட ஈரவலய பண்ணை பொறிக் கடன் திட்டம் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைக் காட்டியதுடன் பண்ணை வலுக் கருவிகளின் அதிகரித்த கேள்விகளின் காரணமாக 1986 இல் தீவின் எல்லா மாவட்டங்களுக்கும் இத்திட்டம் விரிவாக்கப்பட்டது. இத்திட்டம் தீவு முழுவதற்குமான பண்ணை பொறிக் கடன் திட்டம் என மீள மாற்றியமைக்கப்பட்டது. மகாவலி செயற்றிட்டப் பகுதிகளில் குடியேற்றப்பட்டவர்களுக்கு உதவுமுகமாக உழுபொறிகளினைக் கொள்வனவு செய்வதற்கான கொடுகடன் திட்டம் 1986 இல் நிறுத்தப்பட்டு மத்திய வங்கியால் இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட மீள் நிதியிடல் நிதியங்களின் பயன்படுத்தப்படாத ரூ. 490 இலட்சத்திற்கு வகை கூறும் நிலுவை தீவு முழுவதற்குமான பண்ணை பொறி கடன் திட்டத்தினை மீள் நிதியிடுவதற்கு மாற்றப்பட்டது. நாட்டின் பல மாவட்டங்களில் பண்ணை வலுவுக்கான தேவைகளை வழங்கிய பல ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டங்களும் ஆசிய அபிவிருத்தி வங்கி—இலங்கை கிராமிய கொடுகடன் செயற்றிட்டமும் 1986 இன் முதல் அரைப்பகுதியில் முடிவுக்கு அல்லது முடிவை நோக்கிச் சென்றமையால் தீவு முழுவதையும் அடக்கும் வகையில் இத்திட்டத்தினை விரிவாக்குவது அவசியமானதாகவிருந்தது.

பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் நிறுவப்பட்டதிலிருந்து கிராமிய இளைஞர்களுக்கான சுய தொழில்களுக்கான வாய்ப்புக்களை ஊக்குவித்தல், கிராமிய துறைகளை அடையும் நோக்கில் வடிவமைக்கப்பட்ட கொடுகடன் திட்டங்களில் கூடியளவு அங்கீகாரத்தைப் பெற்றது. இந்நோக்கங்களுக்கான கொடுகடன் திட்டங்கள் களுத்துறை, குருநாகல் மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டன. மேலும், இளைஞர்களின் சுய தொழில்வாய்ப்புகளை ஊக்குவிப்பதற்கான கொடுகடன் திட்டம் மத்திய வங்கியின் மாத்தளையிலுள்ள பிரதேச அலுவலகத்தின் அதிகாரத்தின் கீழ் வரும் கேகாலை, மாத்தறை, கண்டி ஆகிய மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டது.

உலர் வலயத்தில் உள்ள 6 மாவட்டங்களில் 1986 இல் குழாய்க் கிணறுகளை அமைக்கும் பொருட்டுக் கடன் திட்டமொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டது. குருநாகல் மாவட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழுள்ள கடன் திட்டம் 1986 இல் முடிவடைந்த வேளையில் வவுனியா, மன்னார் மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் இடைநிறுத்தப்பட்டது. இத்திட்டத்தின் முன்னேற்றத்தைப் பாதித்த மோசமடைந்த பாதுகாப்பு நிலைமைகளும் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பின் அலுவலர் குழுவினால் செயற்றிட்ட முன்னேற்றத்தை மதிப்பிடுவதனைக் கடினமடையச் செய்ததே இவ்விடைநிறுத்தத்திற்கான காரணமாகும். நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியத்தின் வகை 1 இன் கீழ் நடைமுறையிலுள்ள நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் திட்டங்களின் செயற்பாட்டின் முன்னேற்றம் அட்டவணை 2.7 இல் காட்டப்பட்டுள்ளது.

## நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியத்தின் வகை I இன்

| கொடுகடன் திட்டத்தின் பெயர் | மீள் நிதியிடல் ஒதுக்கீடுகள் (ரூ.ப.இ.) |
|---|---|
| **அ. 1986ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கொடுகடன் திட்டங்கள்** | |
| 1. ஒகிட் மரச் செய்கைக்காக இலங்கை வங்கி / வரையறுக்கப்பட்ட இலங்கைப் புகையிலைக்கூட்டு நிலையத்திற்கான கொடுகடன் திட்டம் ... | 4.50 |
| 2. தெங்கு வளமாக்கிக் கொடுகடன் திட்டம் ... ... | 55.00 |
| 3. கடற்றொழில் துறை வங்கி நிதியிடல் திட்டம் ... ... | 140.00 |
| 4. குள நீர்ப்பாசனம் நவீனமயப்படுத்தல் செயல்திட்டம் ... | 7.69 |
| 5. குருநாகல் மாவட்டத்திற்கான ஒருங்கிணைக்கப்பட்ட கிராம அபிவிருத்தி செயற்றிட்டத்திற்கான பண்ணைப் பொறித் தொகுதிக் கடன் திட்டம் ... | 76.50 |
| 6. சம்மாந்துறை தேர்தல் தொகுதியின் பாற்பண்ணை அபிவிருத்தி (றூன்றேடி) செயற்றிட்டத்திற்கான கடன் திட்டம் ... ... | 0.12 |
| 7. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினால் நிறுவப்படும் வளமாக்கி களஞ்சியங்களுக்கான கொடுகடன் திட்டம் ... ... ... | 14.00 |
| 8. அபுதாபியினால் நிதியளிக்கப்பட்ட வடமேற்குக் கரை கடற்றொழில் அபிவிருத்தித் திட்டம் ... ... ... | 60.00 |
| 9. ஒகிட் பயிர்ச் செய்கைகளின் கொடுகடன் திட்டம் மக்கள் வங்கி / சர்வோதயம் / லக்மல்சல ... ... | 3.00 |
| 10. கடற்றொழில் கூட்டுறவு நிலையங்களுக்கான கொடுகடன் திட்டம் ... | 42.00 |
| 11. மாத்தளை, புத்தளம் மாவட்டங்களுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தித் திட்டம் ... ... ... | 54.79 |
| 12. காற்றுடி ஆலைகளுக்கு நிதியிடுவதற்கான திட்டம் ... ... | 2.56 |
| 13. மாத்தறை மாவட்டத்தில் இளைஞர் சுயதொழில் வாய்ப்புத் திட்டம் ... | 8.20 |
| 14. ஆசிய அபிவிருத்தி வங்கி, இலங்கை கிராமியக் கொடுகடன் செயற்றிட்டக் கடன் திட்டம் | 137.00 |
| 15. தேயிலை சிறு உடைமையாளர்களுக்கான வளமாக்கிக் கொடுகடன் திட்டம் ... | 7.50 |
| 16. இலங்கை கிராமிய கொடுகடன் திட்டத்திற்குள் அடங்காத மாவட்டங்களில் சுமை இழக்கும் விலங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு நிதியிடுவதற்கான கொடுகடன் திட்டம் ... | 5.60 |
| 17. அநுராதபுர மாவட்டத்தில் கிராம ஏற்பு சுய வேலைவாய்ப்பு நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் அடையாளம் காணப்பட்ட செயற்றிட்டங்களுக்கு நிதியிடலுக்கான கொடுகடன் திட்டம் ... | 6.00 |
| 18. பயிரிடுகைக்கு முன்னுன விதை உருளைக் கிழங்கு சிறு களஞ்சியங்களின் கட்டட வாக்கத்திற்கான கொடுகடன் திட்டம் ... ... | 1.00 |
| 19. பதுளை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராம அபிவிருத்தி செயற்றிட்டம் ... | 7.00 |
| 20. மாதல் மீன்பிடிக்கான கொடுகடன் திட்டம் (கரையோர பாரவலை மீன்பிடி) ... | 5.00 |
| 21. பெல்வத்தை சீனிச் செயற்றிட்டத்தின்கீழ் கரும்பினை பயிரிடும் குடியிருப்பாளர்களுக்கான கொடுகடன் திட்டம் ... ... | 66.00 |
| 22. வவுனியா, மன்னார் மாவட்டங்களின் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டம் ... ... ... | 32.00 |
| 23. செவனகல, இங்குரான, கந்தளாய் சீனி செயற்றிட்டத்தில் கரும்பினைப் பயிரிடும் சிறு வேளாண்மையாளர்களுக்கு உதவும் கொடுகடன் திட்டம் ... | 120.60 |
| 24. இறம்புக்கனைப் பிரதேசத்தில் இடைப் பயிர்ச் செய்கையுடன் மீள் நடுகை நிகழ்ச்சித் திட்டத்தை மேற்கொள்வதற்காக தெங்கு வளர்ப்போருக்கு உதவுவதற்கான இலங்கை —ஆசிய அபிவிருத்தி வங்கியின் தெங்கு அபிவிருத்தி செயற்றிட்ட கொடுகடன் திட்டம் | 8.00 |
| 25. விக்டோரியா செயற்றிட்டத்தின்கீழ் இடம்பெயர்ந்த வர்த்தகர்கள் வர்த்தக கட்டிடங்களைக் கொள்வனவு செய்வதற்கான கொடுகடன் திட்டம் ... | 22.00 |
| 26. ஈரவயை மாவட்டங்களிலும் மொனறாகலை மாவட்டத்திலும் இரு சில்லு உழுபொறிகளைக் கொள்வனவு செய்வதற்கான கொடுகடன் திட்டம் ... | 81.99 |
| 27. உணவு வேளாண்மை அமைப்பு/மாதர் பணியக செயற்றிட்டத்தின்கீழ் வருமான உருவாக்க நடவடிக்கைகளில் பெருந்தோட்டத்துறைப் பெண்களுக்கு உதவுவதற்கான சிறப்புக் கொடுகடன் திட்டம் ... | 1.00 |
| 28. குருநாகல் மாவட்டத்தில் சீன இஞ்சி, அன்னாசி, பாசன் பழங்களை பயிரிடுவதற்கான கொடுகடன் திட்டம் ... | 32.00 |
| 29. அநுராதபுரம் உலர்வலய வேளாண்மைச் செயற்றிட்டக் கடன் திட்டம் ... | 22.30 |
| 30. உயிரியல் வாயு பொறித்தொகுதியை நிறுவுவதற்கான மினிப்பே திட்டத்தின் குடியேற்றக்காரர்களுக்கு உதவுவதற்கான கொடுகடன் திட்டம் ... | 0.40 |
| **ஆ. 1986ஆம் ஆண்டுப் பகுதியில் ஒப்புதலளிக்கப்பட்ட கொடுகடன் திட்டங்கள்** | |
| 1. இலங்கை ஆசிய அபிவிருத்தி வங்கி, கால்நடை அபிவிருத்தி செயற்றிட்டம் | 68.20 |
| 2. கண்டி, கேகாலை, மாத்தளை மாவட்டங்களிலுள்ள சுய தொழில் வாய்ப்பு மற்றும் ஏனைய நடுத்தரப்பண்ணைச் செயற்றிட்டங்களுக்கு நிதியிடுவதற்கான திட்டம் | 6.00 |
| 3. பாற்பண்ணை அபிவிருத்திக்கான கொடுகடன் திட்டம் ... | 20.60 |
| 4. களுத்துறை, குருநாகல் மாவட்டங்களில் சுயதொழில் வாய்ப்பினை ஊக்குவிப்பதற்கான கொடுகடன் திட்டம் ... | 20.00 |
| 5. கிணற்று நீர்ப்பாசன நோக்கங்களுக்கு குழாய் கிணறுகளை அமைப்பதற்கான கொடுகடன் திட்டம் | 1.10 |
| மொத்தம் | 1,139.65 |

அட்டவணை 2.7

## கீழ் மீள் நிதியிடுவதற்கு ஒப்புதலளிக்கப்பட்ட கடன் திட்டங்கள்

| 31.12.86இல் பயன்படுத்தப்பட்ட தொகை (ரூ. ப. இ.) | 31.12.86இல் பயன்படுத்தப்படாத தொகை (ரூ. ப. இ.) | செயற்றிட்டம் தொடங்கிய நாள் | ஒதுக்கீடுகளின் பகிர்ந்தளிப்புக் காலப் பகுதி (ஆண்டுகள்) |
|---|---|---|---|
| 3.49 | 1.01 | 03.02.79 | 3 |
| 46.85 | 8.15 | 26.03.79 | 3 |
| 112.88 | 27.12 | 02.07.79 | 3 |
| 7.69 | — | 02.06.79 | 1 |
| 71.57 | 4.93 | 28.10.79 | 5 |
| — | 0.12 | 27.11.79 | 3 |
| 9.14 | 4.86 | 13.10.80 | 1 |
| — | 60.00 | 13.10.80 | 3 |
| 0.23 | 2.77 | 10.12.80 | 5 |
| 1.28 | 40.72 | 28.04.81 | 2 |
| 45.07 | 9.72 | 08.05.81 | 6 |
| 1.05 | 1.51 | 11.12.81 | 1 |
| 5.90 | 2.30 | 10.04.81 | — |
| 82.31 | 54.69 | 01.07.82 | 1 |
| 0.96 | 6.54 | 11.08.82 | 1 |
| 0.01 | 5.59 | 10.09.82 | 2 |
| 3.68 | 2.32 | 14.10.82 | — |
| — | 1.00 | 01.03.83 | 1 |
| 2.54 | 4.46 | 27.09.83 | 5 |
| 0.68 | 4.32 | 26.04.84 | 1 |
| — | 66.00 | 10.05.84 | 6 |
| 0.70 | 31.30 | 14.06.84 | 4 |
| 9.34 | 111.26 | 20.09.84 | 5 |
| 0.08 | 7.92 | 26.12.84 | 3 |
| — | 22.00 | 11.03.85 | 2 |
| 18.84 | 63.15 | 26.03.85 | 2 |
| 0.30 | 0.70 | 31.12.85 | 1 |
| 3.11 | 28.89 | 27.06.85 | 3 |
| 2.26 | 20.04 | 02.07.85 | 3 |
| — | 0.40 | 16.09.85 | — |
| — | 68.2 | 01.03.86 | 3 |
| — | 6.0 | 01.03.86 | — |
| 1.76 | 18.84 | 16.04.86 | 3 |
| 5.71 | 14.29 | 15.05.86 | — |
| — | 1.10 | 08.09.86 | 2 |
| 437.43 | 702.22 | — | — |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1986 இல் 35 நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் திட்டங்கள் தொழிற்பாட்டில் இருந்ததுடன் இத்திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட கடன்கள் தொடர்பான மீள நிதியிடல் வசதிகளுக்காக மத்திய வங்கி ரூ. 11,397.5 இலட்சத்தினை ஒதுக்கியது. கடன் வழங்கும் வங்கிகளினால் பயன்படுத்தப்பட்ட மீள் நிதியிடல் தொகை ஆண்டின் இறுதியில் ரூ. 4,374 இலட்சமாக அல்லது ஒதுக்கின் 38 சதவீதமாக விளங்கியது.

திருப்தியான முன்னேற்றத்தைக் காட்டிய செயற்றிட்டங்களில் தெங்கு வளமாக்கிக் கொடுகடன் திட்டம், குருநாகல் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழுள்ள பண்ணைப் பொறிக் கடன் திட்டம், ஈரவலய மாவட்டங்களிலும் மொனராகலை மாவட்டத்திலும் இரு சில்லு உழு பொறிகளின் கொள்வனவுக்கான கொடுகடன் திட்டம், இலங்கை—ஆசிய அபிவிருத்தி வங்கி கிராமிய கொடுகடன் செயற்றிட்டம் ஆகியன விளங்கின. மேலும் 1985 இன் பிற்பகுதியிலும் 1986 இலும் அறிமுகப்படுத்தப்பட்ட சில கொடுகடன் திட்டங்கள் மீளாய்வின் கீழுள்ள ஆண்டில் திருப்தியான முன்னேற்றத்தைக் காட்டின. உதாரணமாகக் களுத்துறை, குருநாகல் மாவட்டங்களிலுள்ள சுய தொழில்வாய்ப்பு ஊக்குவிப்புக்கான கொடுகடன் திட்டம் அதன் ஏழு மாத காலத்தில் தொழிற்பாட்டில் துரித வளர்ச்சியைக் காட்டியது.

கடற்றொழிற்றுறைக்கான கடன் திட்டங்களின் மெதுவான வளர்ச்சிக்கு இத்துறைகளுக்கு முன்பு வழங்கப்பட்ட கடன்களின் மீளப் பெறுகைகள் மிகவும் குறைந்ததாக விளங்கியதால் இத்திட்டத்தில் பங்குபற்றுவதற்குக் கடன் வழங்கும் வங்கிகள் பொதுவாகத் தயக்கம் காட்டியமையே காரணமாகும். பெல்வத்தை சீனிச் செயற்றிட்டத்தின் கீழ்க் குடியேற்றப்பட்டவர்களுக்கான கொடுகடன் திட்டத்தை நோக்குகையில், பங்குபற்றும் வங்கியான இலங்கை வங்கியினால் பெல்வத்தை சீனிக் கூட்டு நிலையம் குடியேற்றப்பட்டவர்களுடனான குத்தகை உடன்படிக்கையினை இறுதியாக்குவதில் ஏற்பட்ட காலதாமதம் காரணமாகக் கடன்களை வழங்க முடியவில்லை. இவ்விடயங்கள் தீர்க்கப்பட்டதுடன், அடுத்த ஆண்டிலிருந்து இவ்வசதி பயன்படுத்தப்படும்.

1982 இலிருந்து தொழிற்பாட்டில் உள்ள இலங்கை—ஆசிய அபிவிருத்தி வங்கியின் கிராமிய கொடுகடன் செயற்றிட்டம் 1986 இல் பூர்த்தியாக்கப்பட்டது. திருத்தப்பட்ட ஒதுக்கான ஐ.அ. டொலர் 69 இலட்சத்தில் ஐ.அ. டொலர் 51 இலட்சம் அல்லது ரூ. 1,288 இலட்சம் செயற்றிட்டக் கால இறுதியில் பயன்படுத்தப்பட்டது. மத்திய வங்கி இச் செயற்றிட்டத்தின் செயற்படுத்தலில் இணைப்பு முகவர் நிறுவனமாகச் செயற்பட்டது. அட்டவணை 2.8 ஒவ்வொரு வகையின் கீழுமான கடன் ஒதுக்கையும் பயன்படுத்தப்பட்ட தொகையினது பகுப்பாய்வினையும் தருகின்றது.

ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியிடப்படும் இரண்டாவது கிராமிய கொடுகடன் செயற்றிட்டத்திற்காக மத்திய வங்கி 1986 யூலையில் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் தொடக்க கலந்துரையாடல்களைத் தொடங்கியது. ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து இது தொடர்பான மேலும் தூதுக் குழுக்கள் 1987 இல் எதிர்பார்க்கப்படுகின்றது. வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்திலிருந்தான செயற்றிட்ட ஏற்பாடுகளைத் தயாரிக்கும் குழுவொன்றும் கண்டி, காலி, புத்தளம் ஆகிய நிருவாக மாவட்டங்களிலுள்ள கிராமிய கொடுகடன் அமைப்பினை ஆராய்வதற்காகவும் இம்மாவட்டங்களில் பிரதேச கிராமிய அபி

அட்டவணை 2.8

**ஆசிய அபிவிருத்தி வங்கி—இலங்கை கிராமியக் கொடுகடன் செயற்றிட்டத்தின் கீழ் பயன்படுத்தப்பட்ட நிதி**

ஐ. அ. டொலர் '000

| | | திருத்தப்பட்ட ஒதுக்கு | பயன்படுத்தப் பட்ட தொகை |
|---|---|---|---|
| 1. பண்ணைவலு வசதிகள் | ... | 3,792 | 3,779 |
| 2. நீர்ப்பாசன வசதிகள் | ... | 448 | 400 |
| 3. அரிசி ஆலைகளும், நெல் சூடடித்தலும் | ... | 400 | 11 |
| 4. துணைப்பணி வசதிகள் | ... | 256 | 158 |
| 5. பயிற்சி நிறுவனம் | ... | 1,107 | 771 |
| 6. சுமை இழுக்கும் விலங்குகள் | ... | 25 | 22 |
| 7. ஒதுக்கப்படாதவை | ... | 872 | — |
| | | 6,900 | 5,141 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

விருத்தி வங்கிகளூடாகச் செயற்படுத்துவதற்காகச் ''சிறு வேளாண்மையாளர், காணி அற்றோர் கிராமியக் கொடுகடன் செயற்றிட்டம்'' ஒன்றினை வடிவமைப்பதற்காகவும் 1986 ஒத்தோபரில் நாட்டுக்கு வருகை தந்தது.

இவ்வாண்டில் மக்கள் வங்கியின் 5 கிளைகள், இலங்கை வங்கியின் 5 கிளைகள், 4 கூட்டுறவு கிராமிய வங்கிகள், இந்தியன் ஒவசீஸ் வங்கியின் மாத்தறைக் கிளை ஆகியவற்றின் வேளாண்மைக் கடன்கள் தொடர்பான பரீட்சிப்புக்களை மத்திய வங்கி பூர்த்தி செய்தது. இவ்வங்கிக் கிளைகள் மாத்தறை, பதுளை, இரத்தினபுரி, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் அமைந்திருந்தன. அவதானிக்கப்பட்ட குறைபாடுகளைச் சீராக்குவதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை விதந்துரைக்கவும் கிராமிய கடன் வழங்கலை முன்னேற்றுவதற்கும் பரீட்சிப்பு அறிக்கைகள் ஒவ்வொரு வங்கியினதும் தலைமை அலுவலகத்திற்கும் பரீட்சிப்புக்குட்பட்ட கிளைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டன. பரீட்சிப்புக்குட்பட்ட வங்கிக் கிளைகளிலிருந்தான இசைவறிக்கைகளைப் பெறுவதற்குத் தொடர்ந்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மேற்கூறப்பட்ட பரீட்சிப்புக்களுடன் இத்திட்டத்திற்குத் தேவையான மாற்றங்களைச் செய்வதற்கான பெறுபேறுகளைப் பெறும் நோக்குடன் முன்னேற்றத்தைப் பரிசீலிப்பதற்காகவும் களமட்டத்தில் புதிய அணைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் பயன்பாட்டினை அளவிடுவதற்காகவும் அதிகாரிகளைக் கொண்ட சிறப்புக் குழுவொன்று பல மாவட்டங்களுக்கும் சென்று வந்தது.

## பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள்

1986 இல் மத்திய வங்கி அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அம்பலாந் தோட்டையை முதன்மைத் தொழில் இடமாகக் கொண்டு அதன் ஐந்தாவது பிர தேச கிராமிய அபிவிருத்தி வங்கியினை நிறுவியது. இவ்வங்கி 1986 திசெம்பர் 13 இல் திறக்கப்பட்டது. களுத்துறை, மாத்தறை, குருநாகல், அநுராதபுரம் மிகிந் தலை ஆகிய மாவட்டங்களில் முறையே புளத்சிங்கள, யட்டியான, குளியாப்பிட்டி, ஆகிய இடங்களை முக்கிய தொழில் இடங்களாகக் கொண்டு நிறுவப்பட்ட நான்கு பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் வெற்றிகரமாகத் தொழிற்பட்டன.

ஒவ்வொரு பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியும் ஆரம்ப கட்டங்களில் ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் ஆகக் குறைந்தது ஒரு கிளையையாவது திறக்க வேண்டும் என்பதனைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தது. 1986 முடிவில் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் தமது கிளைகளை 32 கிளைகளாக விரிவு படுத்தின. தமது அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசங்களில் உள்ள கிராமிய குடித் தொகையின் அபிவிருத்திக்காகப் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளினால் வடிவமைக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளின் மூலம் பெருந்தொகையான மக்கள் பயனடைவதற்கு இது வழிவகுத்தது.

கிளை அமைப்பின் மாவட்ட ரீதியிலான பகுப்பு அட்டவணை 2.9 இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 2.9

பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் கிளை அமைப்பு

| பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியின் பெயர் | தலைமை அலுவலகம் | திறக்கப்பட்ட கிளைகளின் எண்ணிக்கை | | 1986 இறுதியில் உள்ள மொத்தம் |
|---|---|---|---|---|
| | | 1985 | 1986 | |
| களுத்துறை ... | புளத்சிங்கள ... | 04 | 03 | 07 |
| மாத்தறை ... | யட்டியன ... | 05 | 02 | 07 |
| குருநாகல் ... | குளியாப்பிட்டி ... | 06 | 04 | 10 |
| அநுராதபுரம் ... | மிகிந்தலை ... | 02 | 04 | 06 |
| அம்பாந்தோட்டை ... | அம்பலாந்தோட்டை ... | — | 02 | 02 |
| மொத்தம் ... | ... | 17 | 15 | 32 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

கிராமிய சேமிப்புக்களின் சேகரிப்புக்கள் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளினால் மேற்கொள்ளப்பட்டதுடன் 1986 திசெம்பர் 31 இல் அவற்றுடனான சேமிப்பு, நிலையான வைப்புக்களின் பகுப்பும் அட்டவணை 2.10 இல் தரப்பட் டுள்ளது.

அட்டவணை 2.10

## வைப்புக்களின் திரட்டலின் மாவட்ட அடிப்படையிலான பகுப்பாய்வு 1985, 1936 முடிவில்

(தொகை ரூ. '000)

| பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியின் பெயர் | சேமிப்பு வைப்புக்கள் | | | | நிலையான வைப்புக்கள் | | | | மொத்தம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1935 | | 1936 | | 1985 | | 1986 | | 1985 | | 1986 | |
| | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை |
| களுத்துறை ... | 2,845 | 728 | 10,295 | 3,389 | 15 | 180 | 94 | 3,446 | 2,860 | 908 | 10,389 | 6,835 |
| மாத்தறை ... | 3,472 | 1,134 | 10,503 | 5,350 | 05 | 51 | 105 | 672 | 3,477 | 1,185 | 10,608 | 6,022 |
| குருநாகல் | 4,786 | 906 | 13,958 | 4,221 | 10 | 50 | 49 | 446 | 4,796 | 956 | 14,007 | 4,667 |
| அநுராதபுரம் ... | 1,382 | 336 | 5,377 | 2,749 | 03 | 29 | 02 | 42 | 1,385 | 365 | 5,379 | 2,791 |
| அம்பாந்தோட்டை | — | — | 509 | 259 | — | — | 06 | 48 | — | — | 515 | 306 |
| மொத்தம் | 12,485 | 3,104 | 40,642 | 15,968 | 33 | 310 | 256 | 4,654 | 12,518 | 3,414 | 40,898 | 20,622 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1986 இறுதியில் ஐந்து பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளும் ரூ. 210 இலட்சம் பெறுமதியான வைப்புக்களைக் கொண்ட 40,898 கணக்குகளைத் திறந்தன. ஏறக்குறைய 99 சதவீதமான கணக்குகள் சேமிப்பு வைப்புக் கணக்குகளாகும். வங்கிகளின் முதல் ஆண்டுத் தொழிற்பாடு முடிவடைந்த 1986 இல் வைப்புக் கணக்குகளின் எண்ணிக்கையும் சேகரிக்கப்பட்ட தொகையும் அதிகரித்தது. இது முக்கியமாகக் கிளை அமைப்பு 17 இலிருந்து 32 ஆக அதிகரித்தமையினால் ஏற்பட்டதாகும். பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் பெருமளவிற்கு அப்பகுதியிலுள்ள மக்களிடமிருந்து சிறு வடிவிலான சேமிப்புக்களை பெருமளவில் சேகரிப்பதற்கு முயற்சித்தது. எனவே பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் வங்கித் தொழில் செயற்பாடுகளின் அடிப்படை அம்சம் யாதெனில் அட்டவணை 2.11 இல் விளக்கப்பட்டவாறான சார்பு ரீதியில் சிறிதளவான வைப்புக்களைக் குறிப்பாகச் சேமிப்பு வைப்புக்களைக் கொண்டிருந்தமையாகும்.

அட்டவணை 2.11

**வைப்புக் கணக்கொன்றின் சராசரி அளவு**

(ரூபாய்கள்)

| பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியின் பெயர் | சேமிப்பு வைப்புக்கள் | | நிலையான வைப்புக்கள் | |
|---|---|---|---|---|
| | 1985 | 1986 | 1985 | 1986 |
| களுத்துறை ... | 255 | 329 | 12,033 | 36,660 |
| மாத்தறை ... | 326 | 509 | 10,200 | 6,403 |
| குருநாகல் ... | 189 | 302 | 5,000 | 9,102 |
| அநுராதபுரம் ... | 243 | 511 | 9,583 | 20,925 |
| அம்பாந்தோட்டை ... | — | 509 | — | 7,917 |
| அனைத்து வங்கிகளும் ... | 248 | 393 | 9,401 | 18,179 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

சில பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் தமது வாடிக்கையாளர்களுக்கு முழுமையான வங்கித் தொழில் பணிகளை வழங்க வேண்டும் என்ற அவற்றின் கொள்கையின் ஒரு பகுதியாகக் கேள்வி வைப்புக்களையும் ஏற்றுக் கொண்டன.

1986 திசெம்பர் 31 இல் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் ரூ. 470 இலட்சம் மொத்தத் தொகை கொண்ட 7,273 கடன்களை வழங்கின. இது 1985 இறுதியில் விளங்கிய ரூ. 40 இலட்சம் மொத்தத் தொகை கொண்ட 1,104 கடன்களுடன் ஒப்பிடத்தக்கது. 1986 இல் கடன்களின் எண்ணிக்கையிலும் மொத்தத் தொகையிலும் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பு முக்கியமாகப் புதிய கிளை அலுவலகங்களைத் திறந்ததன் மூலம் வங்கித் தொழில் நடவடிக்கைகள் கூடுதலான பிரதேசத்திற்கு விரிவடைந்தமை காரணமாக ஏற்பட்டதாகும்.

பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளினுல்வழங்கப்பட்டு **1986** திசெம்பர் **31** இல் வெளிநின்றதுமான கடன்களின் நோக்க அடிப்படையிலான பகுப்பு அட்டவணை **2.12** இல் தரப்பட்டுள்ளது.

### அட்டவணை 2.12
### மாவட்ட அடிப்படையில் வெளிநின்ற கடன்களின் நோக்க அடிப்படையிலான பகுப்பாய்வு

(தொகை ரூ. '000)

| நோக்கம் | களுத்துறை | | மாத்தறை | | குருநாகல் | | அநுராதபுரம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை |
| 1. வேளாண்மை | | | | | | | | |
| 1.1 பயிர்ச்செய்கை | 279 | 232 | 820 | 1,210 | 488 | 3,283 | 393 | 2,286 |
| 1.2 பண்[illegible] கருவிகள் ... | 29 | 252 | 90 | 2,992 | 142 | 1,300 | 166 | 5,617 |
| 1.3 ஏனையவை ... | 261 | 561 | 295 | 657 | 273 | 1,404 | 182 | 1,526 |
| 2. கால்நடை ... | 151 | 615 | 49 | 393 | 318 | 2,655 | 75 | 874 |
| 3. சிறு கைத்தொழில்கள் ... | 527 | 1,575 | 352 | 1,280 | 355 | 2,529 | 94 | 1,796 |
| 4. வர்த்தகமும் வியாபாரமும் ... | 616 | 1,680 | 519 | 1,706 | 216 | 2,116 | 73 | 7,113 |
| 5. ஏனையவை ... | 64 | 306 | 376 | 789 | 8 | 73 | 62 | 194 |
| மொத்தம் ... | 1,927 | 5,221 | 2,501 | 9,027 | 1,800 | 13,360 | 1,045 | 19,406 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**1985** இறுதியிலும், **1986** இறுதியிலும் வழங்கப்பட்டடு வெளிநின்ற கடன்களின் நோக்க அடிப்படையிலான பகுப்பு ஒப்பீட்டு அடிப்படையில் அட்டவணை **2.13** இல் தரப்பட்டுள்ளது.

### அட்டவணை 2.13
### 1985, 1986இல் வழங்கப்பட்ட கடன்களின் நோக்க அடிப்படையிலானதொரு ஒப்பீடு

| நோக்கம் | 1985 | | | 1986 | | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | தொகை ரூ. '000 | சதவீதம் | எண்ணிக்கை | தொகை ரூ. '000 | சதவீதம் |
| வேளாண்மை ... | 395 | 2,027 | 42 | 3,418 | 21,321 | 45 |
| கால்நடை ... | 77 | 554 | 11 | 593 | 4,536 | 10 |
| சிறு கைத்தொழில்கள் ... | 257 | 999 | 21 | 1,328 | 7,180 | 15 |
| வியாபாரமும் வர்த்தகமும் ... | 287 | 790 | 16 | 1,424 | 12,615 | 27 |
| ஏனையவை ... | 88 | 478 | 10 | 510 | 1,362 | 3 |
| மொத்தம் ... | 1,104 | 4,848 | 100 | 7,273 | 47,014 | 100 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

கிராமியப் பிரதேசங்களில் சுய தொழில் வாய்ப்பினை உருவாக்கும் நோக்குடன் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் வேளாண்மைத்துறையில் உள்ள சிறு பண்ணை உடைமையாளர்களுக்கும் வர்த்தகத் தொழில்துறையில் உள்ள சிறு முயற்சியாளர்களுக்கும் கடன்களை வழங்குவதற்கு விரும்பின. இதனால் 1986 இறுதியில் வழங்கப்பட்ட மொத்தக் கடன் தொகையில் 45 சதவீதமும், 27 சதவீதமும் முறையே வேளாண்மைத்துறைக்கும் வர்த்தகத் தொழில் துறைக்கும் வழங்கப்பட்டன.

பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் தமது குறிக்கோளினை அடையும் பொருட்டுத் தமது தொழிற்பாடுகளில் சில புதிய வங்கித்தொழில் முறைகளை ஏற்படுத்தின. இவ்வாண்டில் பெரும்பாலும் எல்லாப் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளும் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கித் திட்டத்தின் நோக்கங்களையும் கிராமியப் பொருளாதாரத்தின் அபிவிருத்தியில் அதன் பங்கினையும் விளக்கும் நோக்குடன் தமது பிரதேசங்களில் (ஜனகமுவ) உள்ள கிராமங்களில் பெருந்தொகையான கூட்டங்களை ஒழுங்கு செய்தன. இக்கூட்டங்களின் விளைவாகப் பெருந்தொகையான மக்கள் கடன்களைப் பெறக்கூடியதாகவிருந்தது. கூட்டங்களிலேயே வைப்புக்களைச் சேகரிப்பதற்கு வங்கிகளினால் முயற்சிகள் செய்யப்பட்டு வைப்பாளர்களுக்கு அவர்களது புத்தகங்களைப் பின்னர் அவர்களது வதிவிடங்களிலேயே வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டன. தவிர, வங்கிகள் தமது பணிகளை ஒழுங்காக மேற்கொள்ளாத இடங்களில் உள்ள பொது மக்களுக்கு நடமாடும் வங்கித் தொழில் பணிகளை வழங்கும் வசதிகளையும் சில பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் நடைமுறைப்படுத்தின.

## கிராமிய வங்கித் தொழில், அலுவலர் பயிற்சிக் கல்லூரி

1986 இல் கிராமிய வங்கித் தொழில், அலுவலர் பயிற்சிக் கல்லூரி 23 பயிற்சி வகுப்புக்களையும் கருத்தரங்குகளையும் ஒழுங்கு செய்து நடாத்தியது. இதில் 442 பேர் பங்குபற்றினர். இப்பயிற்சி வகுப்புக்களினதும் கருத்தரங்குகளினதும் இலக்குக் குழுக்கள் வெளிக்களமட்ட அலுவலர்கள் தொடக்கம் மத்திய வங்கி, வர்த்தக வங்கிகள், பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள், ஏனைய நிதி நிறுவனங்கள் என்பனவும், திட்ட நடைமுறைப்படுத்தல் அமைச்சு, இளைஞர் வேலைவாய்ப்பு அலுவல்கள் அமைச்சு, கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், இலங்கை மகாவலி மேலாண்மைச் சபை, கைத்தொழில் அபிவிருத்திச் சபை போன்ற கிராமிய அபிவிருத்தியில் ஈடுபட்டுள்ள சில அரசமுகவர் நிலையங்கள் என்பனவற்றின் மூத்த நிறைவேற்று அலுவலர்கள் வரையில் வேறுபட்டிருந்தது. வங்கித்தொழில்துறைக்குக் கல்லூரியினால் வழங்கப்பட்ட பயிற்சி கிராமிய வங்கித்தொழிலில் இருந்து பன்னாட்டு வங்கித்தொழில் வரையிலான விடயங்களை உள்ளடக்கியிருந்தது. கிராமிய வங்கித்தொழிலும் கிராமிய அபிவிருத்தியும் பயிற்சிக்கான முதன்மை விடயங்களாகக் கணிக்கப்பட்டன. கிராமியக் கொடுகடன் கொள்கையும் செயல்முறைகளும், கிராமிய வங்கித்தொழிலில் கூட்டுறவு அமைப்புக்களின் பங்கு, கிராமிய அபிவிருத்தி நெறிகள், சிறு வேளாண்மையாளர் கொடுகடனும் பிரதேச வங்கித்தொழிலும் போன்ற பல வகுப்புக்கள் கிராமிய வங்கித்தொழில், கிராமியக் கொடுகடன் என்பன மீது நடைபெற்றன.

பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் வெளி ஊர்களிலும் நடாத்தப்பட்டன. இந்தியாவில் பூணேயில் உள்ள பன்னாட்டுக் கூட்டுறவு வேளாண்மை வங்கித் தொழில் பயிற்சி நிலையத்தின் வேண்டுகோளுக்கிணங்க மத்திய வங்கி கிராமிய வங்கித்தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரியின் உதவியுடன் பன்னாட்டுக் கூட்

டுறவு வேளாண்மை வங்கித்தொழில் பயிற்சி நிலையத்தின் வேலைத்தளத்தினை ஏற்பாடு செய்தது. இவ்வேலைத்தளத்தின் நோக்கம் இலங்கையில் உள்ள கிராமிய வங்கித்தொழில் ஆளணியினருக்குக் கிடைக்கத்தக்கதாயுள்ள பயிற்சி ஒழுங்குகளை முன்னேற்றுவதன் பொருட்டு உறுப்புரிமை நாடுகளில் உள்ள வேளாண்மை வங்கித்தொழிலையும் கிராமிய அபிவிருத்தியையும் பற்றி அறிந்து கொள்வதாகும்.

கல்லூரி அதன் தொழிற்பாட்டின் ஐந்தாவது ஆண்டினை 1986 செத்தெம்பரில் நிறைவு செய்தது. ஐந்தாவது ஆண்டு நிறைவு விழாச் சொற்பொழிவு ''கிராமிய அபிவிருத்தியில் வங்கித்தொழிலின் பங்கு'' என்ற தலைப்பில் இந்திய ஒதுக்கு வங்கியின் ஆளுநரான திரு. ஆர். என். மல்கோத்திராவினால், வங்கிகளிலும் நிதி நிறுவனங்களிலும் இருந்து அழைக்கப்பட்ட உயர் அலுவலர்களுக்கு வழங்கப்பட்டது.

1981 செத்தெம்பரில் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து கொழும்பில் வாடகைக்கு எடுக்கப்பட்ட ஓரளவு மட்டுப்படுத்தப்பட்ட ஒரு இடத்திலேயே கல்லூரி அமைந்திருந்தது. கிராமியப் பகுதிகளில் வங்கித்தொழில் நடவடிக்கைகள் துரிதமாக விரிவடைந்தமை, உள்நாட்டிலும் பன்னாட்டு ரீதியிலும் வங்கித்தொழில் நடவடிக்கை பெருமளவில் அபிவிருத்தியடைந்தமை என்பவற்றுடன் வங்கித் தொழில் துறையில் ஏற்பட்ட அதிகரித்த போட்டியும் இணைந்து மிகவும் ஒழுங்கமைந்த ரீதியிலான தொடர்ச்சியான பயிற்சியினை நடாத்தவேண்டிய தேவையினை ஏற்படுத்தியது. இத்தேவைகள் நவீன பயிற்சி வசதிகளுடன் இணைந்த எல்லா வசதிகளையும் உள்ளடக்கிய ஒரு தங்குமிட வசதியைக் கொண்ட அலுவலர் பயிற்சிக் கல்லூரியினை நிர்மாணிக்க வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியது. இல. 58, சிறி ஜயவர்த்தனபுர மாவத்தை, ராஜகிரிய, கோட்டையில் அமைந்துள்ள கிராமிய வங்கித்தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரியின் புதிய கட்டிடத் தொகுதி 1986 திசெம்பர் 20 இல் இலங்கைச் சனநாயகச் சமவுடமைக் குடியரசின் தலைவரான மாண்புமிகு ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்களால் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது. இப்புதிய பணியகத்தில் 60 பங்குபற்றுநர்களுக்குத் தங்குமிட வசதிகள் உண்டு. வகுப்பறைகள், பொது அறைகள் என்பவற்றுடன் இக்கல்லூரியில் ஆய்வரங்கு அறை, கேட்போர் கூடம் சிறந்த வசதிகளைக் கொண்ட நூல் நிலையம் என்பனவும் உண்டு.

## ஊழியர் சேம நிதியம்

உதவுதொகைகள், மேலதிக கட்டணங்கள், ஊழியர் சேமநிதிய பணத்தின் முதலீடுகளிலிருந்தான வருவாய் ஆகியவற்றினைப் பெறுவதற்கும் நிதியத்தில் பதிவு செய்யப்பட்ட தொழில் வழங்குனர்களினதும் தனிப்பட்ட உறுப்பினர்களினதும் சரியான கணக்குகளைப் பேணுவதற்கும் ஊழியர் சேம நிதியச் சட்டத்தின் சிறப்புஏற்பாடுகளுக்கமைய உறுப்பினர்களுக்கு நன்மைகளின் மீளளிப்பைச் செய்வதற்குமான பொறுப்பு மத்திய வங்கியின் நாணயச் சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்நடவடிக்கைகள் இச்சட்டத்தின் சிறப்பு ஏற்பாடுகளின் நிர்வாகத்திலும் நடை முறைப்படுத்தலிலும் ஈடுபடும் தொழிற் திணைக்களத்தின் ஊழியர் சேமநிதியப்பிரிவின் நெருங்கிய ஒத்துழைப்புடன் வங்கியின் ஊழியர் சேமநிதிய திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

**உதவு தொகைகள்**

மீளாய்வின் கீழுள்ள ஆண்டில் நிதியத்தினுல் பெறப்பட்ட உதவுதொகைகள் 1985 இன் ரூ. 19,206 இலட்சங்களுக்கு எதிராக ரூ. 20,479 இலட்சத்திற்கு வகை கூறியது. இது முன்னைய ஆண்டில் பெறப்பட்ட உதவுதொகைகள் மட்டத்தினை விட ரூ. 1,273 இலட்சம் அல்லது 6.6 சதவீதங் கொண்ட அதிகரிப்பினைக் குறிக்கின்றது.

**உறுப்பினர்களின் நிலுவைகள்**

மீளாய்வின் கீழுள்ள ஆண்டுக்கான வட்டியை ஒதுக்குவதற்கு முன்பாக 1986 திசெம்பர் 31 இல் உள்ளவாருன உறுப்பினர்களின் நிலுவை ரூ. 164,021 இலட்சமாக விளங்கி 1985 இறுதியில் உள்ள நிலுவையினை விட ரூ. 33,154 இலட்சம் அல்லது 25.3 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது.

**முதலீடுகள்**

மீளாய்வின் கீழுள்ள ஆண்டில் நிதியம் அரச பிணைகளிலும், திறைசேரி உண்டியல்களிலும் 1985 இன் ரூ. 54,019 இலட்ச முதலீட்டுக்கு எதிராக ரூ. 61,380 இலட்சங் கொண்ட தொகையினை முதலீடு செய்தது. இது 1985 இன் மட்டத்தினை விட ரூ. 7,361 இலட்சங் கொண்ட அதிகரிப்பினைக் காட்டுகின்றது. 1986 இல் செய்யப்பட்ட மொத்த முதலீடுகள் பிணைகளிலும் திறைசேரி உண்டியல் களிலும் செய்யப்பட்ட முன்னைய முதலீடுகளின் முதிர்ச்சிப் பெறுகைகளான ரூ. 24,714 இலட்சங் கொண்ட தொகைகளையும் உள்ளடக்கின. அரச பிணைகளில் செய்யப்பட்ட மொத்த முதலீடுகள் மட்டும் ரூ. 51,179 இலட்சத்திற்கு வகை கூறியதோடு இது 1986 ஆம் ஆண்டில் அரசினுல் வழங்கப்பட்ட மொத்த ரூபா பிணைகளில் 65.8 சதவீதத்தினையும் குறித்தது. இவ்வாண்டில் வேறுபட்ட இடைவெளிகளில் குறுகிய முதிர்ச்சிக்கால திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை ரூ. 10,200 இலட்சத்திற்கு வகை கூறியது. 1986 திசெம்பர் 31 இல் நிதியத்தினுல் வைப்பிடப்பட்ட மொத்த முதலீடுகள் ரூ. 177,186 இலட்சத்திற்கு வகை கூறியதோடு இது 1985 இன் மட்டத்தினை விட ரூ. 36,666 இலட்சங் கொண்டதொரு அதிகரிப்பாகவுமிருந்தது.

**முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருவாய்**

நிதியத்தின் முதலீடுகளிலிருந்தான வருவாய் 1985 இன் ரூ. 15,524 இலட்சத்திற்கு மாருக 1986 இல் ரூ. 19,535 இலட்சத்திற்கு வகை கூறி ரூ. 4,011 இலட்சம் அல்லது 25.8 சதவீதங் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது. இவ்வதிகரிப்பிற்கு முக்கியமாக மீளாய்வின் கீழுள்ள ஆண்டில் நிதியத்தினுல் பெறப்பட்ட உதவுதொகைகளின் அதிகரித்த தொகையான முதலீடும் ஏற்கனவேயுள்ள முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருவாயினை மீள முதலீடு செய்தமையும் காரணங்களாகும்.

**மீளளிப்புக்கள்**

உறுப்பினர்களுக்கு ஊழியர் சேமநிதிய நன்மைகளின் மீளளிப்பாகக் கொடுக்கப்பட்ட மொத்தத் தொகை 1985 இன் ரூ. 5,236 இலட்சத்திற்கு மாருக 1986 ஆம் ஆண்டில் ரூ. 3,527 இலட்சத்திற்கு வகை கூறியது. இது 1985 இன் மீளளிப்புக்களை விட ரூ. 1,709 இலட்சம் அல்லது 32.6 சதவீதம் குறைவானதாகும். மீளாய்வின் கீழுள்ள ஆண்டில் திணைக்களத்தினுல் மீளளிப்புக்காக 33,41 கோரல்களை பெறப்பட்டதோடு இதில் 898 கோரல்கள் தாயகம் திரும்பும் இந்திய வம்சாவழியினருடையதாகவும், 1,623 கோரல்கள் மருத்துவ அடிப்படையைக் கொண்டதாகவும் இருந்தன. மருத்துவ அடிப்படையின் மீது கொடுப்பனவுக்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட கோரல்களின் எண்ணிக்கையில் கணிசமானதொரு வீழ்ச்சி 1986 இல் பதிவு செய்யப்பட்டது.

---

**உறுப்பினர்களின் நிலுவையின் மீதான வட்டி**

நிதியத்தின் பணங்களின் முதலீட்டிலிருந்தான வருவாய்களிலிருந்து ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலுமுள்ள உறுப்பினர்களின் நிலுவைகளின் மீதான வட்டியை ஊழியர் சேமநிதியம் வழங்க வேண்டும். 1986 இறுதியிலுள்ள உறுப்பினர்களின் நிலுவையின்மீது கொடுக்கப்படவேண்டிய வட்டி வீதம் முன்னைய ஆண்டில் நிலவிய அதே வட்டி வீதமான 12.5 சதவீதமாக மாற்றமுருது விளங்கியது. எனினும் நடைமுறையாண்டில் உதவு தொகைள் உறுப்பினரின் வரவில் முளு ஆண்டிற்கும் கணக்கில் இருந்ததா இல்லையா என்பதைக் கருத்திற் கொள்ளாது ஆண்டு இறுதி நிலுவைகளின் மீதே வட்டி கணிக்கப்படுவதால் தொழிற்படும் வட்டி வீதம் மேற் குறிப்பிட்ட விகிதத்தினை விட உயர்வானதாகும்.

**ஊழியர் சேமநிதிய கணக்குப் புத்தகங்களில் நிலுவைகளைப் ப்திவு செய்தல்**

அண்மைய கடந்த காலங்களில் தொழில் திணைக்களத்தினுல் வழங்கப்பட்ட ஊழியர் சேமநிதிய கணக்குப் புத்தகத்தில் நிலுவைகளைப் பதிவு செய்தல் 1986 ஒத்தோபரில் தொடங்கியது. எனினும் ஆண்டு இறுதியிலுள்ள நிலுவைகளை குறிக்கும் வழமையான அறிக்கைக் கூற்று முந்திய ஆண்டினைப் போன்று தொடர்ந்தும் அனுப்பப்பட்டது. தற்போது கிடைக்கத்தக்க தரவுகளை அடிப்படையாகக் கொண்ட நிதியத்தின் தொழிற்பாடுகளின் ஒப்பீட்டு ரீதியான அறிக்கைக் கூற்று அட்டவணை 2.14 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.14

**ஊழியர் சேமநிதியப் புள்ளி விபரங்கள் 1985–1986**

| விடயம் | | 1985 | 1986 |
|---|---|---|---|
| 1. பெறப்பட்ட உதவு தொகைகள் (ரூ. '000) | ... | 1,920,653(அ) | 2,047,962(அ) |
| 2. முதலீடுகள் (ரூ. '000) | ... | 5,401,865(ஆ) | 6,137,982(ஆ) |
| 3. முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருமானம் (ரூ. '000) | ... | 1,552,425 | 1,953,489 |
| 4. மீளளிப்புக் கொடுப்பனவுகள் (ரூ. '000) | ... | 523,629 | 352,709 |
| 5. மீளளிப்புக்களின் எண்ணிக்கை | ... | 46,123 | 25,219 |
| 6. வட்டி வீதம் (%) | ... | 12.5 | 12.5 |
| 7. உறுப்பினர் நிலுவைகள் மீதான வட்டி ஒதுக்கு (ரூ. '000) | ... | 1,635,834 | 2,050,259 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) தொங்கற் கணக்கில் வரவு வைக்கப்பட்ட உதவு தொகைகள் நீங்கலாக.

(ஆ) வேறுபட்ட இடைவெளிகளில் அரச பிணைகளில் மீள் முதலீடு செய்யப்பட்ட முதிர்ச்சித் தொகைகளையும் குறுங்கால திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்ட பணத்தையும் உள்ளடக்கும்.

## செலாவணிக் கட்டுப்பாடு

செலாவணிக் கட்டுப்பாட்டினை நடைமுறைப்படுத்துவதில் மத்திய வங்கி அரசின் முகவராக அதன் பங்கினைத் தொடர்ந்தும் வழங்கி மீளாய்விற்குரிய ஆண்டில் செலாவணிக் கட்டுப்பாட்டு வழிமுறைகளில் பின்வரும் மாற்றங்களைச் செய்தது.

### 1. இறக்குமதிகள்

கொடுகடன் பத்திரங்களின்றி ஆள் ஒருவரின் தனிப்பட்ட பாவனைக்கான பொருட்களின் இறக்குமதியின் மேலெல்லை (வர்த்தக அளவுகளில் அல்லாத) கொழும்பு வரையான கொ.கா.க. பெறுமதியான ரூ. 5,000 இலிருந்து ஐ.அ. டொலர் 500 இற்கு (1986.03.27 இன் கொழும்பு வரையான செ.கா.க. தொழிற் பாட்டு அறிவுறுத்தல் எண் ஈசி–13–86 (பி)) உயர்த்தப்பட்டது.

### 2. கல்வி

வெளிநாட்டில் கல்வியைத் தொடரும் இலங்கையர்களுக்கு அவர்களின் வாழ்க்கைச் செலவுகளை ஈடுசெய்யும் நோக்கத்திற்காகப் பின்வரும் கூடுதலான செலாவணிப் படிகளை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள் அனுமதிக் கப்பட்டனர். (1986.08.26 இன் தொழிற்பாட்டு அறிவுறுத்தல் ஈசி–26–86 (ஈ).)

**வாழ்க்கைச் செலவுப் படிகள்**

| நாடுகளின் தொகுதி | பட்டப்படிப்பு, தொழில்சார், தொழில்நுட்பக் கல்வி | பட்டப்பின் படிப்பு |
|---|---|---|
| அ. வங்காளதேசம், பூட்டான், பர்மா, இந்தியா, மாலை தீவு, நேபாளம், பாக்கித் தான் | ஆண்டுக்கு இந்திய ரூபா 8,640 | ஆண்டுக்கு இந்திய ரூபா 11,520 |
| ஆ. ஐக்கிய இராச்சியம், சோ.ச.கு.ஒ. உட்பட ஐரோப்பிய நாடுகள் | ஆண்டுக்கு 3,120 ஸ்ரேலிங்பவுண் | ஆண்டுக்கு 3,840 ஸ்ரேலிங்பவுண் |
| இ. அவுஸ்திரேலியா, கனடா, ஜப்பான், நியூசிலாந்து, ஐ. அ. நாடுகள் | ஆண்டுக்கு ஐ.அ. டொலர் 7,200 | ஆண்டுக்கு ஐ.அ. டொலர் 8,640 |
| ஈ. ஏனைய எல்லா நாடுகள் | ஆண்டுக்கு ஐ.அ. டொலர் 4,320 | ஆண்டுக்கு ஐ.அ. டொலர் 5,760 |

**3. பயணிகள் காசோலைகளை பணமாக மாற்றுதல்**

எந்தவொரு நாளிலாவது இலங்கை ரூ. 100,000 பெறுமதியினை விஞ்சும் பயணிகள் காசோலைகளைப் பணமாக மாற்றுவதற்குச் செலாவணிக் கட்டுப்பாட்டு ஒப்புதலைப் பெறவேண்டிய தேவை 1986.12.16 இன் தொழிற்படு அறிவுறுத்தல்கள் எண் ஈசி/39/86 (டி) இனால் புறக்கீடு செய்யப்பட்டது.

## பொதுப்படுகடன்

நாணய விதிச் சட்டத்தின் பகுதி 113 இன் நியதியின்படி வங்கி அரசின் சார்பில் பொதுப்படுகடனை முகாமைப்படுத்துதலைத் தொடர்ந்தும் செய்துவந்தது. 1986 ஆம் ஆண்டில் அரச பிணைகள்—கடன்களை மிதக்கவிடல், திறைசேரி உண்டியல்கள், வரி ஒதுக்குச் சான்றிதழ்களை வெளியிடுதல், வெளிநாட்டுக் கடன்களைப் பதிவுசெய்தல் போன்றன வங்கியால் கையாளப்பட்ட முக்கிய பணிகளாக விளங்கின.

1986 இறுதியில் வெளிநிற்கும் மொத்த, தேறிய பொதுப்படுகடன் முறையே ரூ. 1,562,927 இலட்சமாகவும், ரூ. 1,498,636 இலட்சமாகவும் விளங்கின. 1986 இல் ரூ. 77,764 இலட்சத்திற்கு வகை கூறும் ரூபாக் கடன்கள் மிதக்க விடப்பட்டன. 1986 இல் ரூபாக் கடன்களின் மொத்த மீள் கொடுப்பனவுகள் ரூ. 52,168 இலட்சத்திற்கு வகை கூறி ஆண்டின் இறுதியில் வெளிநின்ற தொகை ரூ. 391,288 இலட்சமாக விளங்கியது. திறைசேரி உண்டியல்களின் அதிகார மளிக்கப்பட்ட மேலெல்லை 1986 இல் ரூ. 250,000 இலட்சத்திலிருந்து ரூ. 350,000 இலட்சமாக அதிகரிக்கப்பட்டது. ஆண்டின் இறுதியில் வெளிநின்ற திறைசேரி உண்டியல்களின் தொகை ரூ. 261,726 இலட்சமாக விளங்கியது.

பொதுமக்கள் மத்தியில் திறைசேரி உண்டியல்களைப் பிரபல்யமடையச் செய்யும் நோக்கில் 1986 நவெம்பரில் அரச திறைசேரி உண்டியல்களின் வாராந்த வெளியீட்டினை வங்கி தொடங்கியது. இவை வங்கியின் பிரதேச அலுவலகங்களினூடாக 1986 திசெம்பரிலிருந்து விற்பனைக்குக் கிடைக்கச் செய்யப்பட்டன. இவ்வாண்டில் நடுத்தர நீண்டகால வெளிநாட்டுக் கடன்பாடுகளின் மொத்த எடுப்பனவுகள் ரூ. 120,608 இலட்சமாக விளங்கிய வேளையில் மீளக் கொடுப்பனவுகள் ரூ. 30,244 இலட்சமாக விளங்கியது. 1986 இல் வெளிநாட்டுப் பொதுப்படுகடன் மீதான மொத்த வட்டிக் கொடுப்பனவுகளும் ஏனைய கட்டணங்களும் ரூ. 21,346 இலட்சத்திற்கு வகை கூறியது. இதனைத் தொடர்ந்து 1986 இறுதியில் வெளிநின்ற மொத்த வெளிநாட்டுப் பொதுப்படுகடன் ரூ, 862,083 இலட்சமாக விளங்கியது.

நகர அபிவிருத்தி மேலாண்மைச் சபை, அரச ஈட்டு முதலீட்டு வங்கி, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச் சபை ஆகியவற்றின் பெயரில் வங்கி தொகுதிக் கடன்களை மிதக்க விடுவதையும் பணிகள் வழங்குவதனையும் தொடர்ந்தும் மேற்கொண்டது. பொருளாதாரத்தில் மேலதிக திரவத் தன்மையை குறைப்பதற்கு வங்கி நாணய விதிச் சட்டத்தின் பகுதி 91 (1) (ஆ) இன் கீழ் மத்திய வங்கிப் பிணைகளைத் தொடர்ந்தும் வழங்கியது.

இலங்கையின் வெளிநாட்டுப் படுகடனைக் கணனிமயப்படுத்தலுக்கு உதவியளிக்கும் பொருட்டுப் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டுக் கடன்களின் பதிவேடு ஒன்று 1986 இல் நிதி திட்டமிடல் அமைச்சின் வெளிநாட்டுப் படுகடன் கண்காணிப்புப் பிரிவிற்கு அனுப்பி வைக்கப்பட்டது. மேலும், 1986 இறுதி வரையிலான வெளிநாட்டுப் பொதுப் படுகடன் தொடர்பான தரவுகள் தரவுகளைப் பூரணப்படுத்துவதற்காக வெளிநாட்டுப் படுகடன் கண்காணிப்புப் பிரிவிற்கு அனுப்பப்பட்டன.

## பிரதேச அலுவலகம்—மாத்தறை

1986 இல் மாத்தறைப் பிரதேச அலுவலகத்தின் நடவடிக்கைகள் புதிய துறைகளில் விரிவடைந்தவேளையில் நடைமுறையில் உள்ள நடவடிக்கைகள் சிறந்த பணிகளை வழங்கும் வகையில் முன்னேற்றப்பட்டன. பிரதேச அலுவலகம் பொருத்தமான உள்ளூர் முகவர் நிலையங்களுடனும் அரச மேலாண்மைச் சபைகளுடனும் நெருங்கிய தொடர்புடன் செயலாற்றி ஆறு கிராமியக் கொடுகடன் திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. பல்வேறு கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் கடன் பெற்ற கொடுகடன் பாவனையாளர்களது முயற்சித் திறனை ஊக்குவிக்கும் நோக்குடன் வேளாண்மை, பாற்பண்ணை, ஆடு, கோழிப்பண்ணை, சிறு கைத்தொழில் போன்ற துறைகளில் பல்வேறு பயிற்சிகளும் அது சார்ந்த வகுப்புக்களும் நடாத்தப்பட்டன.

### மீள் நிதியிடல் கொடுகடன் தொழிற்பாடுகள்

பங்குபற்றும் வங்கிகளுக்கு மீள் நிதியிடல் கிடைக்க வசதிகள் செய்யப்பட்டு இவ்வலுவலகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கொடுகடன் தொழிற்பாடுகளின் பல்வேறு திட்டங்களின் புள்ளிவிபரத் தொகுப்பினை அட்டவணை 2,15 விளக்குகின்றது.

அட்டவணை 2.15

**மாத்தறை பிரதேச அலுவலகம்—மீள் நிதியிடல் கொடுகடன் தொழிற்பாடுகளின் புள்ளிவிபர தொகுப்பு**

| திட்டங்கள் | 1986 | | 1986 இறுதியில் ஒன்று சேர்ந்தது | |
|---|---|---|---|---|
| | கடன்களின் எண்ணிக்கை | தொகை (ரூபா) | கடன்களின் எண்ணிக்கை | தொகை (ரூபா) |
| 1. சுயதொழில் வாய்ப்புக்கான மீள் நிதியிடல் கொடுகடன் திட்டம் | 317 | 1,623,185 | 797 | 7,056,685 |
| 2. கிராம ஏற்பு மீள் நிதியிடல் கொடுகடன் திட்டம் ... | 04 | 26,000 | 116 | 592,685 |
| 3. அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் "மாதிரி யாயா நெற்பயிர்ச் செய்கைக்கான கடன்கள்" .. | 1,212* | 2,992,526 | 1,212 | 2,992,526 |
| 4. உயர்நில வேளாண்மைக்கான கடன்கள் ... | 93 | 880,520 | 143 | 1,145,925 |
| 5. தேயிலை வளமாக்கி மீள் நிதியிடல் கடன் திட்டம் ... | 33 | 105,423 | 229 | 1,337,106 |
| 6. தெங்கு வளமாக்கி மீள் நிதியிடல் கடன் திட்டம் ... | 24 | 440,431 | 363 | 2,867,048 |
| மொத்தம் ... | 1,683 | 6,068,085 | 2,860 | 15,991,975 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* 1985/86 பெரும் போகம்
1986 சிறுபோகம்
1986/87 பெரும்போகம்

**சுயதொழில் வாய்ப்பு, கிராம ஏற்புக் கடன் திட்டங்கள்--காலி, மாத்தறை மாவட்டங்கள்**

**1. கடன் விதந்துரைப்புக்கள்**

1986 இல் பங்குபற்றும் வங்கிகளினால் மேற்கூறிய இரு கடன் திட்டங்களின் கீழ் விதந்துரைக்கப்பட்ட கடன்களின் விபரங்களை அட்டவணை 2.16 தருகின்றது.

1986 இல் விதந்துரைக்கப்பட்ட கடன்களின் மொத்த எண்ணிக்கை 310 ஆக அமைந்து ரூ. 2,875,900 தொகையைக் கொண்டிருந்தது. 1986 இறுதி வரையான ஒன்று சேர்ந்த மொத்த எண்ணிக்கை ரூ. 10,408,591 கொண்ட 1,252 செயற்றிட்டங்களாக விளங்கியது.

**2. கடன் ஒப்புதல்கள்**

சுயதொழில் வாய்ப்பு, கிராம ஏற்புத் திட்டங்களின் கீழ் 1986 இல் ஒப்புதலளிக்கப்பட்ட கடன்களின் விபரங்களை அட்டவணை 2.17 காட்டுகின்றது.

அட்டவணை 2.16

**மாத்தறை பிரதேச அலுவலகம்: சுயதொழில் வாய்ப்பு, கிராம ஏற்புத்திட்டங்களின்கீழ் விதந்துரைக்கப்பட்ட கடன்கள்—1986**

| வங்கி | | சுயதொழில் திட்டம் | | கிராம ஏற்புத்திட்டம் | |
|---|---|---|---|---|---|
| | | செயற்றிட்டங்களின் எண்ணிக்கை | பெறுமதி (ரூபா) | செயற்றிட்டங்களின் எண்ணிக்கை | பெறுமதி (ரூபா) |
| இலங்கை வங்கி | ... | 190 | 2,055,685 | — | — |
| மக்கள் வங்கி | ... | 71 | 495,415 | — | 7,000* |
| இந்தியன் ஓவசீஸ் வங்கி | ... | 18 | 130,250 | 03 | 17,500 |
| பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி | ... | 28 | 170,050 | — | — |
| மொத்தம் | ... | 307 | 2,851,400 | 03 | 24,500 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* இரண்டாவது கடன்

அட்டவணை 2.17

**மாத்தறை பிரதேச அலுவலகம்: சுயதொழில் வாய்ப்பு, கிராம ஏற்புத் திட்டங்களின் கீழ் 1986 ஆம் ஆண்டுக்கான ஒப்புதலளிக்கப்பட்ட கடன்கள்**

| வங்கி | | சுயதொழில் திட்டம் | | கிராம ஏற்புத் திட்டம் | |
|---|---|---|---|---|---|
| | | செயற்றிட்டங்களின் எண்ணிக்கை | பெறுமதி (ரூபா) | செயற்றிட்டங்களின் எண்ணிக்கை | பெறுமதி (ரூபா) |
| இலங்கை வங்கி | ... | 145 | 1,414,450 | 01 | 5,500 |
| மக்கள் வங்கி | ... | 45 | 345,615 | — | 3,000* |
| இந்தியன் ஓவசீஸ் வங்கி | ... | 18 | 130,250 | 03 | 17,500 |
| பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி | ... | 11 | 65,500 | — | — |
| மொத்தம் | ... | 219** | 1,955,815 | 04** | 26,000 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

* இரண்டாவது கடன்கள்

** 10 இரண்டாவது கடன்களையும் 32 சிறப்புச் செயற்றிட்டங்களையும் உள்ளடக்கும்.

3. மீள் கொடுப்பனவுகள்

1986 இல் ரூ. 1,034,167 கொண்ட 85 கடன்கள் முற்றாக மீளச் செலுத்தப்பட்டு, முற்றாகச் செலுத்தப்பட்ட கடன்களின் மொத்த எண்ணிக்கையை 255 இற்குக் கொண்டு வந்தது. இதன் விளைவாக 1986 இறுதி வரை முற்றாகச் செலுத்தப்பட்ட கடன்களின் மொத்தப் பெறுமதி ரூ. 1,706,457 ஆக அமைந்து மொத்த ஒப்புதலளிக்கப்பட்ட கடன் பட்டியலில் 22 சதவீதத்தினைப் பிரதி பலித்தது.

அட்டவணை 2.18 சுயதொழில் வாய்ப்பு, கிராம ஏற்புத் திட்டங்களின் கீழான கடன் ஒப்புதல்களின் துறைவாரியான பகுப்பினைத் தருகின்றது.

அட்டவணை 2.18

**மாத்தறை பிரதேச அலுவலகம்: ஒப்புதலளிக்கப்பட்ட கடன்களின் துறைவகைப் படியான பகுப்பாய்வு**

| துறை | செயற்றிட்டங்களின் எண்ணிக்கை | | கடன்தொகை (ரூபா) | |
|---|---|---|---|---|
| | 1986 ஆம் ஆண்டு | 1986 இறுதி வரை (ஒன்று சேர்ந்தது) | 1986 ஆம் ஆண்டு | 1986 இறுதி வரை (ஒன்று சேர்ந்தது) |
| வேளாண்மை ... | 64 | 267 | 649,715 | 1,890,850 |
| கைத்தொழில் ... | 104 | 438 | 1,020,680 | 2,642,075 |
| பணி, பண்ணைவலு முதலியவை ... | 55 | 208 | 311,420 | 3,139,445 |
| மொத்தம் ... | 223 | 913 | 1,981,815 | 7,675,370 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

மிகக் கூடுதலான எண்ணிக்கை கொண்ட கடன்கள் கைத்தொழில்துறையில் அமைந்திருந்தவேளையில் வேளாண்மை, பணிகள் துறைகள் முறையே இரண்டாம் மூன்றும் இடங்களுக்கு வகை கூறின.

ஒவ்வொரு செயற்றிட்டத்துக்குமான சராசரிக் கடன் கூறு ரூ. 6,000—7,000 வரையில் அமைந்திருந்ததுடன் வசதிகள் பெரும்பாலும் தொழிற்படும் மூலதனத் தேவைகளுடன் தொடர்புபட்டதாக விளங்கின. கடன் பட்டியலின் மொத்தத் தொகையான ரூ. 76 இலட்சத்தில் ரூ. 26 இலட்சம் அல்லது 34.0சத வீதம் கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு வகை கூறிய வேளையில் பணிகள் பண்ணை வலுத்துறை 41.0 சதவீதமான மிகப் பெரும் பங்கிற்கு வகை கூறியது.

**அனைத்தையும் உள்ளடக்கிய புதிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழான நெற்கடன்கள்**

அனைத்தையும் உள்ளடக்கிய புதிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் தொழிற்பாடுகள் நடைமுறைக்கு வந்ததில் இருந்து வேளாண்மையாளர்கள் குழுக்களை நிறுவுவதிலும் அதன் பின்னர் பங்குபற்றும் வங்கிகளுக்குக் கொடுகடன் வசதிகளுக்காக அறியத் தருவதிலும் பிரதேச அலுவலகம் சிறப்பான பங்கினை ஆற்றவேண்டியிருந்தது. விதைத்தல் தொடக்கம் அறுவடை வரையான காலப்பகுதியில் பயிரிடல் நடவடிக்கைமீது பிரதேச அலுவலகம் வேளாண்மை காப்புறுதிச் சபையின் அலுவலர்களுடன் இணைந்து தொடர்ந்து நெருங்கிய கண்காணிப்பை மேற்கொண்டது. 1985/86 பெரும்போக காலத்தின் மீளச் செலுத்தல் வீதம் ஏறத்தாழ 90 சதவீதமாக விளங்கியவேளையில் 1986 சிறுபோக காலத்தின் தொடர்பான வீதம் 95 சதவீதமாக விளங்கியது. இத்திட்டத்தின் மிகவும் ஊக்கமளிக்கும் விடயம் யாதெனில் வேளாண்மையாளருடன் நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்த முயற்சித்தமையும் அவர்களுக்கு அதிகரித்த விளைவினைப் பெற உதவியதன் மூலம் அவர்களது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தியதுமேயாகும். அட்டவணை 2.19 தொடர்பான பருவகாலங்களின் போதான நெற்பயிர்ச்செய்கைக் கடன்களைத் தேர்தல் தொகுதி அடிப்படையில் தருகின்றது.

திட்டத்தின் தொடக்க நடைமுறைப்படுத்தல் கட்டத்தில் ஊக்கமிழக்கச் செய்யும் அனுபவமே அடையப்பட்டமையின் காரணமாக வேளாண்மையாளர்கள் தொடர்ந்து வங்கியிடமிருந்து நேரடியாக உதவிகளைத் தேடியமையினால் தொகுதிக் கொடுகடன் வசதிகளுக்காகக் கையேற்கப்பட்ட பரப்புக்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்து செல்கின்றமை அட்டவணை 2.19 இலிருந்து தெரிய வருகின்றது. கடன் பெறுநர்களது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணங்களினால் கடன்களை மீள அட்டவணைப்படுத்துவதற்குத் தகுதி பெற்ற கடன் பெறுநர்களை இனங் காண்பதற்காகப் பிரதேச அலுவலகம் 1986 இல் ஏழு மீள் சுழல்வடையும் வசதிக் கூட்டங்களை நடத்தியது.

**உயர்நிலப் பண்ணை**

இந்நடவடிக்கை அம்பாந்தோட்டை, மொனறாகலை ஆகிய மாவட்டங்களில் முக்கியமாக அப்பிரதேசங்களில் நிலவும் ஒத்த காலநிலை காரணமாக இம் மாவட்டங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டதாக இருந்தது. மொனறாகலை மாவட்டத்தைப் பொறுத்தவரை புத்தள, வெள்ளவாயவில் உள்ள வேளாண்மையாளருக்குத் திறந்த கிணறுகளுக்காக 42 பம்புகள் வழங்கப்பட்டன. இச்செயற்றிட்டங்கள் ஒவ்வொன்றினதும் வளர்ச்சி மாத அடிப்படையில் ஒழுங்காகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றது. இத்துடன் இலங்கை வங்கியின் தங்காலைக் கிளை கண்ண பிரதேசத்தில் உள்ள காய்கறி வேளாண்மையாளருக்குப் பணக் கொடுகடன்களை தொடர்ந்து வழங்கியது. 1986 இறுதி வரையில் மேற்கூறப்பட்ட இரு மாவட்டங்களிலும் ரூ. 1,145,925 கடன் பெறுமதி கொண்ட 143 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

அட்டவணை 2.19

## மாத்தறை பிரதேச அலுவலகம்: மாதிரி யாயா கடன்கள்—நடவடிக்கைகள்

| தேர்தற்றொகுதி | 1985/86 பெரும்போகம்* | | | 1986 சிறுபோகம்** | | | 1986/87 பெரும்போகம்*** | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஏக்கர் | வேளாண்மை யாளர்களின் எண்ணிக்கை | ஒப்புதலளிக் கப்பட்ட கடன் (ரூபா) | ஏக்கர் | வேளாண்மை யாளர்களின் எண்ணிக்கை | ஒப்புதலளிக் கப்பட்ட கடன் (ரூபா) | ஏக்கர் | வேளாண்மை யாளர்களின் எண்ணிக்கை | ஒப்புதலளிக் கப்பட்ட கடன் (ரூபா) |
| மாத்தறை ... | 13 | 11 | 20,000 | 39 | 24 | 74,300 | விபரம் இடைக்கவில்லை | — | — |
| அக்குரச ... | 362 | 160 | 542,600 | 217 | 138 | 151,600 | | 73 | 108,523 |
| அக்மன ... | 77 | 67 | 108,500 | 55 | 53 | 80,000 | | 57 | 86,224 |
| கம்புறுபிட்டியா ... | 584 | 285 | 928,400 | 302 | 143 | 311,800 | | 39 | 103,334 |
| தெவிநுவர ... | 88 | 46 | 130,200 | 20 | 11 | 35,900 | | 10 | 19,545 |
| வெலிகம ... | 49 | 28 | 86,200 | 73 | 42 | 126,600 | | — | — |
| அம்பாந்தோட்டை ... | 17 | 07 | 40,000 | — | — | — | | — | — |
| மொனராகலே ... | 24 | 18 | 38,800 | — | — | — | | — | — |
| மொத்தம் ... | 1,214 | 622 | 1,894,700 | 706 | 411 | 780,200 | | 179 | 317,626 |

*23 யாயாக்கள்
**18 யாயாக்கள்
***12 யாயாக்கள்

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

**தேயிலை, தெங்கு வளமாக்கிக் கடன் திட்டங்கள்**

சந்தையில் நிலவிய குறைவான விலைகள் காரணமாக 1986 இல் இவ் இரு திட்டங்களினதும் செயலாற்றம் எதிர்பார்த்ததைவிடக் குறைவாகவே இருந்தது. எவ்வாறுயினும் இத்திட்டத்தின் கீழ்க் கிடைக்கக் கூடிய நன்மைகளைச் சிறு உடமையாளர்களுக்குத் தெளிவுபடுத்தும் முயற்சியாகக் குருசிங்கொட, நெலுவ, ஒபற்று, களுபோவிற்றியான, மொறவக்க ஆகிய இடங்களிலுள்ள தேயிலைப் பயிர்ச்செய்கைப் பிரதேசங்களிலுள்ள உள்ளூர் வங்கி அலுவலர்களுடனும் விரிவாக்க அலுவலர்களுடனும் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

இவ்விரு கடன் திட்டங்களினதும் தொழிற்பாடுகளின் விபரங்களை அட்டவணை 2.20 தருகின்றது.

அட்டவணை 2.20

**மாத்தறை பிரதேச அலுவலகம் : தெங்கு, தேயிலை வளமாக்கிக்கடன் திட்டங்களின் தொழிற்பாடு — 1986**

| திட்டம் | 1986 ஆம் ஆண்டு | | 1986 இன் இறுதியில் ஒன்று சேர்ந்த மொத்தம் | |
|---|---|---|---|---|
| | கடன் அலகு | பெறுமதி (ரூபா.) | கடன் அலகு | பெறுமதி (ரூபா) |
| தெங்கு வளமாக்கிக்கடன் திட்டம் ... | 24 | 440,431 | 363 | 2,867,048 |
| தேயிலை வளமாக்கிக்கடன் திட்டம் ... | 33 | 105,423 | 229 | 1,337,106 |
| மொத்தம் ... | 57 | 545,854 | 592 | 4,204,154 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**பிரதேச தீர்வகம்**

ஆய்விற்குரிய காலப்பகுதியில் பிரதேச அலுவலகப் பணிமனையில் நாளாந்தம் இரு முறை கூடிய பிரதேசத் தீர்வகம் ரூ. 10,430 இலட்சம் பெறுமதி கொண்ட 143,230 காசோலைகளைத் தீர்ப்பனவு செய்தது. இவ்வாண்டில் ''வசிமைல்'' பொறி நிறுவப்பட்டதுடன் பதிவுகள் தீர்ப்பனவு செய்யப்படும் நாளில் இவ்வொண்தொகை மாற்றல் களின் மூலம் தலைமை அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டன

## பிரதேச அலுவலகம்—அநுராதபுரம்

1986 இல் அநுராதபுரப் பிரதேச அலுவலகம் ஏற்கனவே நடைமுறையில் உள்ள நடவடிக்கைகளை முன்னேற்றும் வேளையில் அதன் வசதிகளைப் புதிய பகுதிகளுக்கு விரிவாக்கியது. சிறு வியாபாரம், கைத்தொழில் ஆகியவற்றின் நிதி, முகாமைத்துவம், தொழில்நுட்பம் தொடர்பான விடயங்களை உள்ளடக்கும் விதத்தில்

எதிர்கால கடன்படுநர்களுக்கு அனைத்தையும் உள்ளடக்கிய விரிவாக்க, மதியுரைப் பணிகள் வழங்கப்பட்டது. கிராம மட்டத்தில் ஆய்வரங்குகள், தொழிற் கூடப்பயிற்சி, மக்கள் ஒன்றுகூடல் போன்றவற்றை ஒழுங்கு செய்வதன் மூலம் கிராமிய மக்களுக்கும் அதிகாரிகளுக்குமிடையே இருவழித்தொடர்பொன்று நிறுவப்பட்டது. வேளாண்மையாளர் மத்தியில் நவீன பயிர்ச்செய்கைத் தொழில் நுட்பங்களின் அறிவாற்றலை உருவாக்கவும், பிரதேச அலுவலகத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட பல்வேறு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பெறப்பட்ட அறிவின் அளவை மதிப்பிடுவதற்காகவும் வேளாண்மைப் போட்டி ஒன்று 1986 சிறு போகத்தில் நடாத்தப்பட்டது.

### மீள் நிதியிடல் கொடுகடன் தொழிற்பாடுகள்

1986 இல் பிரதேச அலுவலகத்தின் மீள் நிதியிடல் கொடுகடன் தொழிற் பாடுகளின் தொகுப்பினை அட்டவணை 2.21 தருகின்றது.

அட்டவணை 2.21

**அநுராதபுரம் பிரதேச அலுவலகம் : மீள்நிதியிடல் கொடுகடன் தொழிற்பாடுகள்**

| துறை | விதந்துரைக் கப்பட்ட செயற்றிட் டங்களின் எண்ணிக்கை | விதந்துரைக் கப்பட்ட தொகை (ரூ. '000) | ஒப்புதலளிக் கப்பட்ட எண்ணிக்கை | ஒப்புதலளிக் கப்பட்ட தொகை (ரூ. '000) |
|---|---|---|---|---|
| 1. நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் | | | | |
| வேளாண்மை ... | 870 | 9,915 | 315 | 3,733 |
| கால்நடை ... | 523 | 2,680 | 146 | 741 |
| சிறு கைத்தொழில் ... | 246 | 2,387 | 133 | 1,310 |
| பணிகள் ... | 107 | 813 | 53 | 392 |
| 2. குறுங்காலம் | | | | |
| நெல்லும் துணைப்பயிர்களும் ... | 447 | — | 288 | 1,815 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

பெரும்பாலான கடன்பாடுகள் வரட்சிக் காலங்களில் மண்ணெண்ணெய் பம்பு மூலமாக அல்லது காற்றூடி ஆலைகள் மூலமாகப் பயிர்ச் செய்கைக்கான நிலக்கீழ் நீர் மூலவளங்களை நீர்ப்பாசன வழியாக பயன்படுத்தும் வேளாண்மைச் செயற்றிட்டங்களுக்கானவையாக விளங்கின. இச்செயற்றிட்டங்கள் பொருளா தார ரீதியில் இயலக்கூடியதாகவும் இம்மாவட்டத்திலுள்ள வேளாண்மையாளர் களின் மத்தியில் பிரபல்யம் அடைந்தனவாகவும் காணப்பட்டுள்ளன. மண்ணெண் ணெய் பம்புகளின் மூலதனச் செலவு அதிகரிப்பும் காற்றூடி ஆலைகளுக்கான தொழிற் படும் செலவு குறைவாயுள்ளமை சாதகமாகவுள்ளதாலும் காற்றூடி ஆலை தற் பொழுது கூடுதலாகப் பிரபல்யம் அடைந்து வருகின்றது.

## செயற்றிட்டங்களின் செயற்பாடுகள்

பிரதேச அலுவலகத்தினல் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்றிட்டங்களின் முக்கிய குறிக்கோள் உற்பத்தியையும் வருவாய் மட்டங்களேயும் அதிகரித்தலும் உள்ளூரிலேயே கிடைக்கத்தக்க மூலவளங்களேப் பயன்படுத்துவதன் மூலம் மேலதிக தொழில் வாய்ப்புக்களே உருவாக்குவதுமாகும். 1986 இறுதிவரை 647 செயற்றிட்டங்கள் ஒப்புதலளிக்கப்பட்டு இதில் 557 தொழிற்பாட்டிலுள்ளன.

## வருவாயும் தொழில் நிலேயும்

இவ்வாண்டில் தொழிற்பாட்டிலுள்ள செயற்றிட்டங்களினல் உருவாக்கப்பட்ட மொத்த வருவாய் ரூ. 206 இலட்சமாக மதிப்பிடப்பட்டது. துறை ரீதியான பகுப்பாய்வொன்று வேளாண்மை செயற்றிட்டங்கள் உயர்வானதும் உறுதியானதுமான வருவாயை ஒழுங்கான முறையில் உருவாக்கியதென்பதைக் காட்டுகின்றது. பெரும்பாலான வேளாண்மைச் செயற்றிட்டங்களிலிருந்தான வருவாய்களின் சராசரி பருவகாலம் ஒன்றுக்கு ரூ. 10,000 இற்கும், ரூ. 15,000 இற்குமிடையே விளங்கிய வேளேயில் சில செயற்றிட்டங்களிலிருந்தான வருவாய் பயிர்ச்செய்கை பரப்பு 1 இலிருந்து 2 ஏக்கர் வரையான பணப்பயிர்களின் பருவ காலமொன்றுக்கு ரூ. 35,000 ஐயும் விஞ்சி ரூ. 40,000 வரை காணப்பட்டது.

பெரும்பாலான வேளாண்மைச் செயற்றிட்டங்கள் செயற்றிட்டமொன்றுக்கு 5—6 ஆட்களே ஒழுங்கான அடிப்படையில் தொழிலிலமர்த்தியது. கைத்தொழில், பணிகள் துறைச் செயற்றிட்டங்கள் கூடியளவு தொழில் வாய்ப்புக்களே ஒழுங்கான அடிப்படையில் வழங்கிக் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டின. சிறு அளவிலான கைத்தொழில் செயற்றிட்டங்கள் சிலவற்றில் 6—8 ஆட்களுக்குத் தொழில் வாய்ப்புக்களே உருவாக்க முடிந்தது. இச்செயற்றிட்டங்களினல் உருவாக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், தொழில்நிலே மீதான தரவுகளே அட்டவணே 2.22 தருகின்றது.

அட்டவணே 2.22

**அநுராதபுரப் பிரதேச அலுவலகம் : மதிப்பிடப்பட்ட வருவாயும், தொழில் வாய்ப்பும்**

| துறை | தொழிற்பாட்டிலுள்ள. செயற்றிட்டங்களின் எண்ணிக்கை | மாதாந்த வருவா ரூடா | ஆண்டு வருவாய் ரூபா | தொழில் வாய்ப்பு |
|---|---|---|---|---|
| வேளாண்மை ... | 274 | 665,527 | 7,986,324 | 440 |
| கால்நடை ... | 112 | 27,000 | 324,000 | 67 |
| சிறுகைத்தொழில் ... | 122 | 898,000 | 10,776,000 | 194 |
| பணிகள் துறை ... | 49 | 129,500 | 1,554,000 | 60 |
| மொத்தம் ... | 557 | 1,720,027 | 20,640,324 | 761 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

**கடன் மீளக் கொடுப்பனவு**

நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிகழ்ச்சித் திட்டத்தின் கடன்களின் மீளக் கொடுப்பனவுகளின் தொகுப்பினை அட்டவணை 2.23 தருகின்றது.

அதியுயர் மீளக் கொடுப்பனவு வீதமான 81.1 சதவீதம் பணிகள் துறையினுல் பதியப்பட்ட வேளையில் வேளாண்மைச் செயற்றிட்டங்களின் மீள் கொடுப்பனவு வீதம் 80.1 சதவீதமாக விளங்கியது. கைத்தொழில், கால்நடை களின் மீள் கொடுப்பனவு வீதம் முறையே 73.1 சதவீதமாகவும், 65.5 சதவீத மாகவும் விளங்கியது. கால்நடைத்துறை சார்பு ரீதியாகக் குறைவான மீள் கொடுப்பனவு வீதத்தினைப்பதிவு செய்தது. அநேகமாக எல்லாக் கோழி வளர்ப்புப் பகுதிகளினதும் தோல்வி இத்துறையின் குறைவான மீள் கொடுப்பனவு வீதத்திற் குப் பங்கு வழங்கிய முக்கிய காரணிகளில் ஒன்ருகும்.

**வேளாண்மையாளர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், ஆய்வரங்குகள்/தொழிற் கூடப் பயிற்சிகள்**

வேளாண்மையாளர்களுக்கு அறிவியல் ஆராய்ச்சியினதும் தொழில்நுட்ப முன்னேற்றங்களினதும் விளைவுகளை வழங்குவதற்கான தேவையினை உறுதிப்படுத்தும் வகையில் பிரதேச அலுவலகத்தினுல் பல்வகைப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் வடிவமைக்கப்பட்டு இதற்குச் சிறப்புக் கவனமும் கொடுக்கப்பட்டது. முன்னைய ஆண்டினைப் போல வேளாண்மையாளர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ்ப் பின் தங்கிய பகுதிகளிலுள்ள வேளாண்மையாளருக்கு உதவுமுகமாக மாவட்டத் தின் வெவ்வேறு நிலையங்களில் நெல், பண, துணைப் பயிர்ச் செய்கைகளின் மீதான 17 பயிற்சித் தொடர்களும் ஆய்வரங்குகளும் நடத்தப்பட்டன. 1986 இல் 1,000 இற்கும் மேற்பட்ட வேளாண்மையாளர்கள் பயனடைந்தனர். இத்துடன் இவ்வாண்டில் வேளாண்மையாளர்களுக்கும் கிராமிய தலைவர்களுக்கும் ஏனைய பல ஆய்வரங்குகளும் தொழிற்கூடப் பயிற்சிகளும் நடாத்தப்பட்டன.

**புதிய அணைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம்**

**குறுகியகால உற்பத்திக் கடன்கள்**

1986 ஆம் ஆண்டுக் காலத்தில், குறுகிய கால உற்பத்திக் கடன்களின் பகுதியில் அதன் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் தீவிர பங்காற்றலின் மூலம் பிரதேச அலுவலகம் கொடுகடன் வசதிகளை விரிவாக்கியது.

1986 சிறுபோகத்திலிருந்து இத்திட்டம் தொழிற்பாட்டுக்கு வந்தது. முன்னைய வங்கிக் கடன்களில் அதிகளவு திரும்பப் பெறப்படவில்லை என்ற பின்னணிக்கெதிராகப் பிரதேச அலுவலகம் இத்திட்டத்தில் பங்குபற்ற முடிவெடுத்தது. இத் திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு மட்டுமல்லாது தொழிற்பாட்டிலுள்ள ஏனைய பல திட்டங்களின் பலன்களைப் பற்றி மக்களுக்கு அறியச் செய்வதற்கும் தீவிர பிரசாரமொன்று மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. மீள் நிகழ்ச்சியிடல் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் வசதிகளை, கடனைத் திரும்பச் செலுத்தாதவர்களையும் வங்கித்தொழில் வலை அமைப்புக்குள் கொண்டுவருவதற்காக வேளாண்மையாளர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டி யிருந்தது. முதல் படியாக, தொழிற்பாட்டுக்காகச் சில பகுதிகள் தெரிவு செய்யப்பட்டன.

அட்டவணை 2.23

அநுராதபுரம் பிரதேச அலுவலகம்: கடன்களின் மீள்கொடுப்பனவு

| துறை | தொழிற்பாட்டிலுள்ள செயற்றிட்டங்களின் எண்ணிக்கை | மீள்கொடுப்பனவு தொடங்கவுள்ள செயற்றிட்டங்களின் எண்ணிக்கை | கொடுக்கப்பட்ட அலகு | வங்கிக்கு வரவேண்டிய தொகை ரூபா | மீளச் செலுத்தப்பட்ட தொகை ரூபா | மேலதிகமாக வரவேண்டிய தொகை ரூபா | மீள் கொடுப்பனவு வீதம் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| வேளாண்மை ... | 274 | 173 | 21 | 456,635 | 365,635 | 91,000 | 80.07 |
| கால்நடை ... | 112 | 74 | 44 | 185,785 | 121,650 | 64,135 | 65.47 |
| சிறுகைத்தொழில் ... | 122 | 92 | 26 | 201,130 | 147,010 | 54,120 | 73.09 |
| பணிகள் துறை ... | 49 | 34 | 08 | 68,400 | 55,500 | 12,900 | 81.11 |
| மொத்தம் ... | 557 | 373 | 99 | 911,950 | 689,795 | 222,155 | 75.64 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## திறைசேரி உண்டியல் வெளியீடு

வெளியூர்ப் பகுதிகளிலுள்ள பொது மக்கள் மத்தியில் திறைசேரி உண்டியல்களைப் பிரபல்யமடையச் செய்வதற்கான மத்திய வங்கியின் நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக அநுராதபுர மாவட்டத்தில் ரூ. *900,000* பெறுமதியான திறைசேரி உண்டியல்களைப் பிரதேச அலுவலகம் சந்தைப்படுத்த முடிந்தது.

## உள்ளூர் தீர்வகம்

இப் பிரதேசத்திலுள்ள வங்கிகளுக்குக் காசோலை தீர்ப்பனவு வசதிகளை வழங்குவதனைத் தீர்வகம் தொடர்ந்தும் மேற்கொண்டது. அநுராதபுர பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியும் கூட *1986* இல் தீர்வகத்தில் இணைந்து பிரதேச அலுவலகத்தினால் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டது. இவ்வாண்டில், உள்ளூர்த் தீர்வகத்தினால் ரூ. *1,901* இலட்சம் கொண்ட காசோலைகள் தீர்ப்பனவு செய்யப்பட்டன.

## பிரதேச அலுவலகம்—மாத்தளை

கிராமிய எழுச்சி, அபிவிருத்தி என்பவற்றில் முக்கிய பங்கினை வகிக்கும் முயற்சியில் ஆய்வுக்குரிய காலத்தில் இவ்வலுவலகத்தின் முக்கிய நடவடிக்கைகள் பல்வேறு கிராமியக் கொடுகடன் திட்டங்கள் பற்றிய தகவல்களைத் தருதல், கடன் பெற்றவர்களை அடையாளம் காணுதலும் பயிர்ச் செய்கைக்கான விண்ணப்பங்களை ஆராய்ந்து விதந்துரைத்தலும், சுய தொழில் வேலை வாய்ப்பு, வர்த்தக வங்கிகளுக்கான நடுத்தரத் தவணைக் கடன்கள் என்பவற்றை மையமாகக் கொண்டிருந்தது. மேலும் இதே காலப்பகுதியில் கொடுகடன் பணிமனை, மீளப்பெறல் பணிமனை, மீன்சூழல்படையும் வசதிகளை வழங்கும் குழுக்கள், சிக்கன கொடுகடன் கூட்டுறவுச் சங்கங்கள் என்பனவும் ஒரே காலப்பகுதியில் நிறுவப்பட்டன. இவ்வலுவலகத்தின் கிராமியக் கொடுகடன் நடவடிக்கை பற்றிய வடிவமைப்பினை வழங்கும் கடன் திட்டங்கள் *1986* இல் விதந்துரைக்கப்பட்டகடன் தொகை வங்கிகளுக்கு விதிக்கப்பட்ட நன்மை பெறுவோர்/அலகுகளின் தொடர்பான எண்ணிக்கை என்பவற்றின் தொகுப்புடன் அட்டவணை *2.24* இல் தரப்பட்டுள்ளது.

### அட்டவணை 2·24

### மாத்தளை பிரதேச அலுவலகம்: கொடுகடன் தொழிற்பாடுகள் 1986

| கடனின்வகை | நன்மை பெறுபவர் வங்கிகளுக்கு வழிப் படுத்தப்பட்ட கூறுகளின் எண்ணிக்கை | விதந்துரைக்கப் பட்ட கடன் தொகை (ரூபா.) |
|---|---|---|
| 1. புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம் ... | 427 | 1,822.005 |
| 2. சுய தொழில் வாய்ப்பு கெகடுகடன் திட்டம் (மாத்தளை/கண்டி-கேகாலை) ... | 154 | 996,740 |
| 3. பண்ணை அபிவிருத்தி கொடுகடன் திட்டம் ... | 38 | 400,300 |
| 4. நாடு பூராவுமான பண்ணை பொறித் தொகுதி கடன் திட்டம் ... | 23 | 326,845 |
| 5. ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய அபியிருத்தி நிகழ்ச்சித் திட்டம் —மாத்தளை மாவட்டம் ... | 01 | 68,758 |
| 6. சிறிய நடுத்தர கைத்தொழில் செயர்றிட்டங்கன் ... | 04 | 146,500 |
| 7. எனையவை ... | 01 | 168,150 |
| மொத்தம் ... | 648 | 3,929,298 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

### சிறுபோகப் பயிர்ச்செய்கைக் காலம்—1986

மாத்தளை மாவட்டத்தில் பெரும்போகத்தில் நெற் பயிர்ச்செய்கைக்கு நீர் போதாமையினால் வேளாண்மையாளர்கள் இப் பருவகாலத்தில் வழமையாகக் காய்கறிகளையும் உப உணவுப் பயிர்களையும் தமது வயல்களில் பயிரிடுவர். புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் மேற் கொள்ளப்பட்ட பிரதேச அணுகுமுறையின்படி மாத்தளை மாவட்டத்தில் மூன்று பிரதேசங்கள் பொருத்தமான துணை உணவுப் பயிர்களை ஊக்குவிப்பதற்கு இனங்காணப்பட்டன. அவையாவன பெரிய வெங்காயத்திற்கு கிம்பிஸ்சாவும், சோயா அவரைக்கும் ஏனைய துணை உணவுப் பயிர்களுக்கும் தேவகூவவும், வில்கமுவவும் இனங் காணப்பட்டன. நன்மை பெறுவோரில் குறிப்பிடத்தக்களவு தொகையானோருக்குக் கடன்கள் விதந்துரைக்கப்பட்டன.

கொடுகடன், கடன் மீளப் பெறுதல் பணிமனைகளையும் வர்த்தக வங்கிகள் ஏனைய தொடர்புடைய அரச மேலாண்மைச் சபைகள் என்பவற்றின் கூட்டு முயற்சியுடன் நிறுவியதன் மூலம் கடன்களை வழங்குவதிலும் மீளப் பெறுவதிலும் மாத்தளை பிரதேச வங்கியினால் நவீன முறையொன்று மேற்கொள்ளப்பட்டது. ஒப்பு தலளிக்கப்பட்ட கடன்கள் கொடுகடன் மனையில் காசு வடிவிலும் ஏனைய வடிவிலும் பகிர்ந்தளிக்கப்பட்டன. கொடுகடனின் தவறான பயன்பாட்டினைக் குறைக்கும் பொருட்டுப் பிரதேச அலுவலகத்தினால் தொடர்ச்சியான பயன்மிக்க மேற்பார்வை மேற்கொள்ளப்பட்டது. கடன்களை உரிய நாட்களில் திரும்பப் பெறுவதற்குக் கடன் மீளப்பெறல் பணிமனைகளில் ஒழுங்குகள் செய்யப்பட்டன. பெரும் பாலான விடயங்களைப்பொறுத்தவரை நூறு வீதமான கடன் மீளப்பெறுகை வீதங்கள் அடையப்பட்டதிலிருந்து இது மிக உயர்வான வெற்றி என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

### பெரும்போகப் பயிர்ச்செய்கைக் காலம்—1986/87

1986 இன் சிறுபோகத்தினைப் போன்று, இரு அரச வங்கிகளினாலும் வழங்கப்பட வேண்டிய நேரடிப் பயிர்ச்செய்கைக் கடன்களுக்கான குழு விண்ணப் பங்களின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட கொடுகடன்களின் பகிர்ந்தளிப்பிற்காகக் கொடுகடன் பணிமனைகள் நிறுவப்பட்டன. 210 நன்மை பெறுவோருக்கு இக் கொடுகடன் பணிமனைகளினால் ரூ. 13 இலட்சம் கொண்ட மொத்த வங்கிக் கடன்கள் வழங்கப்பட்டன. இத்துடன் இரு சில்லு, நான்கு சில்லு உழு பொறிகளைக் கொள்வனவு செய்வதற்காக ரூ. 705,000 கொண்ட தொகை வழங்கப் பட்டது.

### சிறு ஏற்றுமதிப் பயிர்கள்

இப் பிரதேசத்தின் பொருளாதாரத்தில் சிறு ஏற்றுமதிப் பயிர்கள் மிகவும் குறிப்பிடத்தக்க இடத்தை வகிப்பதுடன் சிறிய கலப்புத் தோட்டங்களில் பெருமளவில் வளர்க்கப்படுகின்றது. பிரதேச அலுவலகம் சிறு ஏற்றுமதிப் பயிர் உற்பத்தியாளர்களுக்கு அவர்களது பயிர்ச்செய்கையை அபிவிருத்தி செய்வதற்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள உதவு தொகையைப் பெறுவதற்கு ஊக்கமளித்ததுடன் மாத்தளை, கண்டி, கேகாலை ஆகிய மாவட்டங்களில் சிறு ஏற்றுமதிப் பயிர்களின் நாற்று மேடைகளை நிறுவுவதற்கான கொடுகடன் வசதிகளையும் விதந்துரைத்தது.

**பயிற்சி, ஆலோசனைகள், பிரபலப்படுத்தல் நடவடிக்கைகள்**

கிராமிய வேளாண்மையாளர்களுக்குத் துணை வருமான மூலத்தினை வழங்கும் நோக்குடன் பிரதேச அலுவலகங்கள் தேனீ வளர்த்தல், பெரிய வெங்காயப் பயிர்ச்செய்கை, கால்நடை வளர்ப்பு என்பவற்றில் அவர்களுக்குக் கல்வியளிப்பதற்காகச் சில அறிமுகப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியது.

**சுயதொழில் வாய்ப்புக் கடன் திட்டமும், கால்நடை அபிவிருத்தி, பண்ணைப்பொறிகள் கருவிகள் என்பவற்றுக்கான ஏனைய நடுத்தரக் கடன் திட்டங்களும்**

1986 இல் பிரதேச அலுவலகம் மேற்கூறப்பட்ட திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு 31 கூட்டங்களை நடாத்தியது. ஏறத்தாழ 1,252 தனிப்பட்ட கடன் விண்ணப்பங்கள் பெறப்பட்டன. நடைமுறையிலுள்ள செயற்றிட்டங்களில் ஏறத்தாழ 40 சதவீதமானவற்றைக் கால்நடை வளர்ப்புச் செயற்றிட்டங்கள் கொண்டிருந்தன. இவ்வகையில் ஏறக்குறைய அரைப்பங்கு பாற்பண்ணைக்கானதாகும்.

சுய தொழில்வாய்ப்புத் திட்டங்களைப் பொறுத்தவரை புகழ் பெற்ற தொழில் முயற்சிகளாகச் சிறிய அளவு ஆடைத் தயாரிப்பு, செங்கட்டிகள் செய்தல், சிறிய வார்ப்புச்சாலைகளிலும் தொழிற்கூடங்களிலும் உள்ள உலோக வேலைகள், இனிப்புத் தயாரிப்பு,கிராம அப்பமனைகள் என்பனவிளங்கின. கேகாலை மாவட்டத்தில் குறிப்பிட்ட கிராம மக்கள் துடைப்பம் தயாரிப்பதில் சிறந்து விளங்கிய வேளையில் கைவினைப் பொருட்களுக்கான கடன் விண்ணப்பதாரிகள் முக்கியமாகக் கண்டி மாவட்டத்திலேயே இருந்தனர். கடன் விண்ணப்பங்களில் பெரும்பாலானவை தற்பொழுதிருக்கும் தயாரிப்பு அலகுகளை முன்னேற்றுவதனையும் விரிவாக்கம் செய்வதனையுமே நோக்கமாகக் கொண்டிருந்தன.

**தீர்வகத் தொழிற்பாடுகள்**

மாத்தளையிலுள்ள பிரதேசத் தீர்வகம் இரண்டு அரச வங்கிகள், இலங்கை வர்த்தக வங்கி என்பனவற்றின் பங்கேற்புடன் 1986 மேயில் தொழிற்படத் தொடங்கியது. 1986 மேயிலிருந்து திசெம்பர் வரையான எட்டு மாத காலத்தில் ரூ. 27.2 இலட்சம் தொகை கொண்ட 49,794 காசோலைகள் தீர்ப்பனவு செய்யப்பட்டன.

**வாடிக்கையாளர் பணிகள்**

மத்திய வங்கி, வர்த்தக வங்கிகள் மற்றும் சில அபிவிருத்தியுடன் தொடர்புடைய அமைச்சுக்கள், அரச நிறுவனங்கள் என்பனவற்றின் மூத்த அலுவலர்களை உள்ளடக்கிய வங்கித் தொழிலிலான நுகர்வோர் பணிகள் மீதான குழு ஒன்று 1981 இன் நடுப்பகுதியில் நிறுவப்பட்டது. அன்று தொடக்கம் இக்குழு வர்த்தக வங்கிகளினால் வாடிக்கையாளருக்கு வழங்கப்படும் பணிகளை ஊக்குவிப்பதனை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு தொழிற்பட்டு வருகின்றது. இக்குழு 1986 இல் மூன்று முறை கூடி வாடிக்கையாளர் பணிகளுடன் தொடர்புடைய பல்வேறு விடயங்கள் பற்றி ஆராய்ந்தது.

1895 இல் இக்குழுவினுல் நிறுவப்பட்ட இலங்கையின் வங்கித் தொழில் வாடிக்கையாளர் பணிகள் மீதான அளவீடு பற்றிய அறிக்கை 1986 திசெம்பரில் வெளியிடப்பட்டது. தகவல்களைப் பெறுவதற்கான அளவீடு அஞ்சல் மூலமும் கேள்விக் கொத்து மூலமும் நடாத்தப்பட்டதுடன் ஐந்து வர்த்தக வங்கி களிலிருந்து தெரிந் தெடுக்கப்பட்ட 10,000 மாதிரி வாடிக்கையாளருக்குக் கேள்விக் கொத்து அனுப்பப்பட்டது. கேள்விக் கொத்துக்களைப் பெற்றவர்களில் 23 சதவீதமானோர் மாத்திரம் பதிலளித்தபோதிலும் வங்கிகளினுல் அளிக்கப்பட்ட பணிகளில் மேலும் முன்னேறுவதற்கு இடமுள்ள பகுதிகளை அவர்கள் சுட்டிக் காட்டியிருந்தனர். இவ் அறிக்கை வங்கிகளுக்கும் அவர்களது வாடிக்கையா ளர்களுக்கும் மிகவும் பயனுடையதாகவும் வர்த்தக வங்கிகளினுல் வழங்கப்படும் பணிகளில் பொதுவாக முன்னேற்றத்தினை ஏற்படுத்துவதாகவும் அமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## வெளியீடுகள்

1985 ஆம் ஆண்டின் மத்திய வங்கி ஆண்டறிக்கை நாணயச் சட்ட விதியின் 35 (1) பிரிவு நியதிகட்கமைய மாண்புமிகு நிதி திட்டமிடல் அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. ''1986 ஆம் ஆண்டின் முதலரைப் பகுதி பற்றிய ஒரு சுருக்கமான பொருளாதார மீளாய்வு 1986 ஆம் ஆண்டின் முதலரைப் பகுதிக் கான பொருளாதாரச் செயலாற்றம்'' என்ற தலைப்பில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நவெம்பர் மாதத்தில் வெளியிடப்பட்டது.

''இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாடுகளும் வேலையும்'' என்ற தலைப்பி லான நூலொன்றை வங்கி 1986 ஒகத்தில் வெளியிட்டது. இந்நூல் வங்கி தொடங்கப்பட்டதிலிருந்து அதன் அபிவிருத்தி இலங்கையின் பொருளாதாரத்தில் பல்வேறு இயல்திறன்களில் இது ஆற்றும் பங்கு ஆகிய அனைத்தையும் உள்ளடக்கித் தருகின்றது.

இவ்வாண்டுக் காலத்தில் வேறு பல வெளியீடுகளும் வெளியிடப்பட்டன. அவற்றுள் இலங்கையின் பொருளாதார சமூக புள்ளி விபரங்கள்—1985 தொகுதி VIII சமூக பொருளாதார தரவுக் கையேடு 1986 என்பன அடங்கும். இவ்வெளியீடுகள் முக்கிய பொருளாதார மாறிகளின் அடிப்படைத் தரவுகளைக் கொண்டிருந்தன. ''வரட்சி நிலையும் கிராமிய அபிவிருத்தியும்''—முனைவர் எம். யூ. ஏ. தென்னக்கோன், இலங்கை பல்துறை இயல்புகளுக்கு இடையிலான விரும்பத்தக்க நிலைகள் பற்றிய சில ஆய்வுகள்—முனைவர் டி. எஸ். விஜேசிங்க என்பன 1986 இல் வெளியிடப்பட்டன. சிறப்பு ஆய்வு தொகுதி எண் 14 இந்திய ஒதுக்கு வங்கியின் ஆளுநர் சிறி. ஆர். என். மல்கோத்திராவின், ''கிரா மிய அபிவிருத்தியில் வங்கியியலின் பங்கு'' என்ற வெளியீடும் இவ்வாண்டின் வெளியீடுகளில் ஒன்ருக விளங்குகின்றது. ''அளவீட்டுப் பகுப்பாய்வு'' தொடரி லான முதல் தொகுதியும் வெளியிடப்பட்டது. செய்தித் திரட்டு, சிங்கள மாதாந்த வெளியீடான—சற்றகன, ஆங்கில செய்தி அளவை என்பன மீளாய்வின் கீழான ஆண்டில் தொடர்ந்தும் வெளியிடப்பட்டன.

## நூலகம்

நூலகமானது வங்கியில் பணியாற்றும் அலுவலர்களின் உடனுதவும் மத்திய நிலையமாக விரைவாகப் பிரபல்யம் பெற்று விளங்குகிறது. வெளியார் கட்டுப் படுத்தப்பட்டுள்ளபோதிலும் அதன் பயனைப் பெறுகின்றனர். இவ்வாண்டில் பொருளியல் மற்றும் தொடர்பான துறைகளில் நூலகத்தில் 1,523 புதிய ஆக்கங்கள் இடம் பெற்றுள்ளன.

DISCARDED

## ஆய்வரங்குகள்

*1986 ஆம் ஆண்டில் பின்வரும் புகழ் பெற்ற பொருளியலாளர்கள் மத்திய வங்கியில் அலுவலர்களுக்கு பயனளிக்கும் விடயங்களில் விரிவுரைகளை வழங்கினர்:—*

1. *ஐக்கிய நாடுகள் சபையின் வர்த்தகமும் அபிவிருத்திக்குமான ஆணைக் குழுவின் முன்னுள் செயலாளர் நாயகம் முனைவர் காமினி கொறியா ''பண்டங்களின் விலைகளும் அபிவிருத்தியடையும் நாடுகளின் மீது அவற்றின் தாக்கமும் பற்றி'' விரிவுரையாற்றினர்.*

2. *ஹல் பல்கலைக்கழகத்தின் ஒய்வு பெற்ற பொருளியற் பேராசிரியர் ஜே. எஸ். ஜி. வில்சன் ''பணச்சந்தைகளும், நாணயக் கொள்கையின் நடைமுறைப்படுத்துகையும்'' பற்றி விரிவுரையாற்றினர்.*

3. *அபிவிருத்திப் பொருளியல் ஆய்வுக்கான உலக நிறுவனத்தின் உறுப்பினரான பேராசிரியர் என். கக்வானி ''ஊட்டச்சத்துப் பற்றுக்குறை அளவும் கொள்கையும்'' பற்றி உரையாற்றினர்.*

## அளவீடுகள்

### வியாபார நடவடிக்கைகள், திட்டமிடப்பட்ட முதலீடுகள் என்பவற்றின் மீதான அளவீடுகள்

*வர்த்தக நடவடிக்கைகள், திட்டமிடப்பட்ட முதலீடுகள் மீதான ஐந்தாவது அளவீடு 1986 இன் இரண்டாம் அரைக்காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டது. தரவுகளின் அட்டவணைப்படுத்தல் முழுமைப்படுத்தப்பட்டு அறிக்கை தயாரிப்பு நிலையில் உள்ளது.*

### நுகர்வோர் நிதியும் சமூக பொருளாதார அளவீடும் — 1986/87

*1986/87 ஆம் ஆண்டிற்கான நுகர்வோர் சமூகப் பொருளாதார அளவீடு 1986 ஒத்தோபரில் தொடங்கப்பட்டது. இது மத்திய வங்கியினல் மேற்கொள்ளப்பட்ட ஆறுவது நுகர்வோர் நிதி அளவீடாகும். இவ்வளவீட்டிற்கான கள தரவு சேகரிப்புக்கள் நான்கு சுற்றுக்களாக 12 மாத காலத்தை உள்ளடக்கியதாகச் செய்து முடிக்கப்படும். பயங்கரவாத நடவடிக்கைகளினுல் பாதிக்கப்பட்ட பகுதிகள் தவிர்ந்த நாடு முழுவதிலும் பரந்திருந்த 7,104 மாதிரிக் குடியிருப்புக்கள் அளவீட்டிற்காகப் பயன்படுத்தப்பட்டன.*

### நாடளாவிய தரவுகள் சேகரிக்கும் முறை

நாடளாவிய தரவுகள் சேகரிக்கும் முறையின் கீழ்க் கிட்டத்தட்ட 220 விடயங்களின் சில்லறை விலைகள், முதன்மை வேளாண்மை உள்ளீடுகளின் உற்பத்தியாளரின் விலைகள், நெற்செய்கை, தேயிலை, இறப்பர், தெங்கு சிறுவுடைமைகள், கட்டடவாக்க நடவடிக்கைகள் ஆகிய ஒவ்வொன்றிற்குமான நாட் கூலி வீதங்கள் என்பவற்றின் தரவுகள் தொடர்ந்தும் சேகரிக்கப்பட்டன. நுகர்வுப் பொருட்களின் கிடைக்கும் தன்மை பற்றிய தகவல், வேளாண்மை உள்ளீடுகள் தொழிலாளர் என்பவற்றிற்கான தரவுகளும் சேகரிக்கப்பட்டன. இத்தரவுகள்

ஒழுங்கான அடிப்படையில் நாட்டில் 100 நிலையங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட துடன், ஆண்டின் வெளியீடான ''விலையும், கூலியும் புள்ளி விபரங்கள்; சில்லறை உற்பத்தியாளர்களும், உள்ளீட்டு விலைகளும் கூலிகளும்'' என்பனவற்றில் காட்டப் பட்டுள்ளன.

**இறக்குமதி தாராளமாக்கல் நிகழ்ச்சித் திட்டத்தைக் கண்காணித்தல்**

வங்கி, இறக்குமதியாளர்களினால் திறக்கப்பட்ட கொடுகடன் பத்திரங்கள் வாயிலாகச் சேகரிக்கப்பட்ட விபரங்கள் மூலம் இறக்குமதி தாராளமாக்கல் நிகழ்ச்சித் திட்டங்களின் கீழான இறக்குமதிகளைத் தொடர்ந்தும் கண்காணிப்புச் செய்தது. ஒவ்வொரு கொடுகடன் பத்திரம் தொடர்பான திருத்தியமைத்தல், நீக்குதல், கடன் தீர்ப்பனவு என்பனவற்றை வர்த்தக வங்கிகள் மத்திய வங்கிக்கு அறிவிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்பட்டன. இத்தகவல்களும் அவற்றின் பகுப்பாய்வுகளும் ஒழுங்கான அடிப்படையில் தொடர்பான அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

**பயிற்சி**

பயிற்சித் திணைக்களமானது தொடர்ந்தும் மத்திய வங்கி அலுவலர்களுக் கான கல்வி சார்ந்த, கல்வி சாராத துறைகளில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்தது. கல்வி சார்ந்த பயிற்சி நெறிகள் பொருளியல் மற்றும் அது சார்ந்த துறைகளுக்குப் பட்டப்பின் படிப்பு கற்கைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டு இலங்கையிலும், வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களிலும் முதுமாணி, முனைவர் பட்ட நெறிகளை உள்ளடக்கியிருந்தன. 1986 ஆம் ஆண்டுக் காலத்தில் மொத்தமாக எட்டு அலுவலர்கள் பிற நாடுகளில் பட்டப்பின் படிப்புக் கற்கை நெறிகளில் ஈடுபட்ட வேளையில் இரு அலுவலர்கள் இலங்கையில் பட்டப்பின் படிப்புக்களை மேற்கொண்டனர். ஆறு அலுவலர்கள் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் டிப்பி ளோமா பயிற்சி நெறிகளை மேற்கொண்டனர்.

கல்வி சாராத் துறைகளிலான பயிற்சிகள், செயல்முறை குறுங்கால பயிற்சி நெறிகள், ஆய்வரங்குகள், வேலைத்தளங்கள், கல்விச் சுற்றுலாக்கள், பார்வையிடல் என்பனவற்றை உள்ளடக்கியதாகவிருந்து பெருமளவுக்குக் கிராமிய அபிவிருத்தி வேளாண்மை கைத்தொழிற் கொடுகடன் உள்நாட்டு பிறநாட்டு வங்கித் தொழில் கணனிக் கற்கைகளையும் முக்கியமாக உள்ளடக்கியிருந்தன. 1986 இல் எல்லாமாக 77 அலுவலர்கள் வெளிநாடுகளில் குறுங்காலப் பயிற்சிகளைப் பெற்ற வேளையில் மேலும் 217 பேர் உள்ளூர்ப் பயிற்சி நெறிகளில் பங்கேற்றனர்.

மத்திய வங்கி அலுவலர்களுக்கான வர்த்தக வங்கித்தொழில் நடைமுறைகள், தொழிற்பாடுகளில் பணி புரியும்போதே பயிற்சி பெறும் நிகழ்ச்சித் திட்டம் இலங்கை வங்கியிலும், மக்கள் வங்கியிலும் 1986 இல் தொடர்ந்தும் மேற் கொள்ளப்பட்டது.

**தரவு செய்முறைப்படுத்தல்**

1986 இல் மேற்கொள்ளப்பட்ட முக்கிய செயற்றிட்டங்களாக தன்னியக் கத் தீர்ப்பனவு நிலையச் செயற்றிட்டம், அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம், நுகர்வோர் நிதியும் சமூக பொருளாதார அளவீடும்-1986/87 ஆகியன விளங்கின. இவற்றின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**1. தன்னியக்கத் தீர்ப்பனவு நிலையச் செயற்றிட்டம்**

தன்னியக்கத் தீர்ப்பனவு நிலையம் கொழும்பில் தற்போது நடைமுறையிலுள்ள காசோலைத் தீர்ப்பனவு ஒழுங்குகளுக்குப் பதிலாக இருக்கும். மத்திய வங்கி தீர்ப்பனவு நிலையத்தில் பங்குபற்றும் வங்கிகள் தன்னியக்கத் தீர்ப்பனவு நிலையத்தில் பங்கேற்பவர்களாக இருப்பர். வங்கிப் பிரதிநிதிகளினால் (மேசையில் இருந்த வண்ணம்) கைகளினால் மாற்றிக் கொள்ளப்படும் காசோலைக் கட்டுக்களுக்குப் பதிலாக ஒழுங்குபடுத்தப்படாத ஆவணங்கள் கருமபீடங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்டுப் பொறிகளினால் வாசித்து, ஒழுங்குபடுத்தப்படும். எனவே இம் மாற்றச் செயற்பாட்டின் முதற்படியாகக் காசோலைகளைப் பொறியினால் வாசிக்கக் கூடியதாக்குவதாகும்.

*1986* ஆம் ஆண்டில் மத்திய வங்கி உட்படப் பல்வேறு வங்கிகளும் காந்த மை எண் அங்கீகரித்தல் என மையிடப்பட்ட காசோலைகளைப் பரீட்சித்ததுடன் இக் காசோலைகள் *1987* தொடக்க காலத்தில் புழக்கத்திற்கு விடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

*1986* ஆம் ஆண்டில் இம்முறையின் தொழில் நுட்பப் பாகுபாடு இறுதியாக்கப்பட்டு, விலைக் கோரல்கள் கோரப்பட்டு, மதிப்பிடப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. இம்முறையின் நடைமுறைப்படுத்தல் *1987* ஆம் ஆண்டில் இடம் பெறும்.

**2. கிராமியக் கொடுகடன் திணைக்களம் — அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம்**

தரவுச் செய்முறைத் திணைக்களமானது கிராமிய கொடுகடன் திணைக்களத்திற்கு அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம் தொடர்பான புள்ளி விபரங்களைப் பெறுவதற்கான ஒரு தொகுப்பு முறையை ஏற்படுத்தியது.

இத் தொகுப்பு முறையானது இவ்வாண்டின் பெரும்போக காலத்தில் மேற் கூறப்பட்ட இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களின் புள்ளிவிபரத் தரவுகளைத் தரக்கூடியதாயிருக்கும். தரவுகள் கிடைக்கப்பெற்றதும் தொழிற்பாடுகள் ஆரம்பிக்கப்படும்.

**3. நுகர்வோர் நிதியும், சமூக பொருளாதார அளவீடும் 1986/87**

தரவுச் செய்முறைத் திணைக்களமானது, இந்த அளவீட்டின் கீழ்ச் சேகரிக்கப்பட்ட தரவுகளின் செய்முறைப்படுத்தலுக்கான தொகுப்பு முறையையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் ஏற்படுத்துவதற்குத் தொடங்கியுள்ளது. செய்முறைப்படுத்தல் *1987* இல் நடைபெறும்.

இவ்வாண்டில் மீள வடிவமைக்கப்பட்ட அல்லது முழுமைப்படுத்தப்பட்ட முறைகள் கீழே தரப்பட்டுள்ளன:—

1. செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கான ஏற்றுமதிகள் கண் காணிப்பு முறை—பின்னைய பரீட்சிப்புக்கள் முடிவெடுக்கப்பட்டு 1986 சனவரியில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

2. வங்கித்தொழில் திணைக்களத்தின் கையினால் மேற்கொள்ளப்பட்ட முறைக்குப் பதிலீடாக பொதுப் பேரேடு முறை யின் கீழ் நாளாந்தம் நடைபெறும் வேலைநடைமுறைகள் 1986 செத்தெம்பரில் தொடக்கி வைக்கப்பட்டது.

3. ஊழியர் சேம நிதிய பண வைப்புப் புத்தக முறை அபிவிருத்தி வேலைகள் நிறைவேற்றப்பட்டதுடன் 1986 நவெம்பரில் பணவைப்புப் புத்தகங்களைச் சீரமைப்பதற்காகச் சிறப்புப் பிரிவு தொடக்கி வைக்கப் பட்டது.

4. நடுத்தர, நீண்டகால மீள் நிதியிடல் முறை — வங்கித்தொழில் திணைக் களத்தின் நடுத்தர நீண்டகால மீள் நிதியிடல் முறை திட்டத்தைக் கண் காணிக்கும் பொருட்டும், தனிப்பட்ட கடன் கணக்குகளைப் பூர்த்தி செய்து விசாரிக்கவும் கிடைக்கக்கூடிய வசதிகள் மீளவடிவமைக் கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டது.

5. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் வர்த்தகப் பிரிவில் வர்த்தக குறிகாட்டிகளை ஏற்படுத்துவதற்கான முறை ஒன்றினை ஏற் படுத்துதல்.

## முகாமைக் கணக்காய்வு

வங்கியின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது தமது வேலைகளின் நிகழ்ச்சித் திட்டத்தின்படி 1986 இல் வங்கியின் பிரதேச அலுவலகங்களான மாத்தளை, மாத்தறை, அநுராதபுரம் உட்படப் பல்வேறு திணைக்களங்களினதும் கணக்குக ளைக் கணக்காய்வு செய்தது.

முகாமைத்துவப் பணிகள் பிரிவு வங்கியில் மேலதிகமாகத் தேவைப்படும் கூலியாட்கள் பற்றிய ஒரு ஆய்வினை மேற்கொண்டது. இப்பிரிவானது தற்சமயம் வங்கியினால் பயன்படுத்தப்படும் கணக்காய்வு கையேட்டினைத் திருத்தியமைக்கவும் தொடங்கியுள்ளது. இதற்கு மேலாக வங்கியின் மனிதவளத் தேவையைப் பற்றிய நடைமுறையிலிருக்கும் செயற்றிட்ட ஆய்வின் ஒரு பகுதியாக இப்பிரிவானது வங்கியின் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் மனிதவளத் தேவை களைப் பற்றியும் ஒரு ஆய்வினை மேற்கொண்டுள்ளது.

# ஆளணி

ஆளுநர், முனைவர் டபிள்யூ. இராசபுத்ர 1986 ஆம் ஆண்டுக்காலத்தில் பின்வரும் மாநாடுகளிலும், கூட்டங்களிலும் கலந்துகொண்டார்.

1. பிலிப்பைன்சில் பாகுய்யோ நகரத்தில் நடைபெற்ற தென்கிழக்காசிய மத்தியவங்கியின் ஆளுநர்களின் 21 வது மாநாடு.

2. ஆயென்ரைஞ, புவனஸ் அயர்சில் நடைபெற்ற 24 குழுக்களின் சிறப்பு அமைச்சரவைக்கூட்டம் அதன்பின்னர் அமைச்சு பேராளர் உறுப்பின ராக சிலியிலும், வெனிசூலாவிலும் நடைபெற்ற கூட்டத்தில்.

3. ஐக்கிய அமெரிக்க நாடுகள், வாசிங்டனில் நடைபெற்ற 24 குழுக்களி னது உறுப்பினர்களின் 46 வது கூட்டம் மற்றும் பன்னுட்டு நாணய நிதியத்தின் இடை நிலைக்குழுவினது கூட்டம்.

4. வங்காளதேசம், தக்காவில் நடைபெற்ற ஆசியத்தீர்ப்பனவு ஒன்றி யத்தின்கூட்டம்.

5. இங்கிலாந்து, லண்டனில் நடைபெற்ற பொதுநலவாய மத்திய வங்கி ஆளுநர்களின் மாநாடு.

6. ஐக்கிய அமெரிக்க நாடுகள், வாசிங்டனில் நடைபெற்ற பன்னுட்டு நாணய நிதியத்தினதும் புத்தாக்க அபிவிருத்திக்கான உண்ணுட்டு வங்கியினதும் ஆண்டுக் கூட்டங்கள் மற்றும் 24 குழுக்களின் கூட்டங் கள்.

7. வங்காளதேசம், தக்காவில் நடைபெற்ற தென்கிழக்காசியா, நியூசி லாந்து, அவுத்திரேலியா ஆளுநர்களின் 16 வது கருத்தரங்கு.

நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளர் நாட்டில் இல்லாத காலப்பகுதி யில் திறைசேரியின் துணைச்செயலாளரான திரு. ஜி. குமாரணதுங்க அவை யின் மாற்று அலுவல்சார் உறுப்பினராக செயற்பட்டார்.

நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளர் நாட்டில் இல்லாத காலப்பகுதி யில் திறைசேரியின் பதிற் செயலாளர் திரு. பி. மகாதேவா நாணயச்சபைக் கூட்டங்களில் கலந்து கொண்டார்.

ஆளுநர் இலங்கையில் இல்லாத காலப்பகுதியில் மூத்த துணை ஆளுநர் திரு. டி. எல். கன்னங்கரா வங்கியின் முதன்மை நிறைவேற்று அலுவல ராகவும் நாணயச்சபையின் தலைவராகவும் செயற்பட்டார்.

### நியமனங்கள்

பொதுப்படுகடன் திணைக்களக் கண்காணிப்பாளர் திரு. வி. என். டி. நாணயக்கார 1986 ஏப்பிறல் 1 ஆம் நாளிலிருந்து சிறப்புச் செயற்றிட்டங்களுக் கான மதியுரையாளராக நியமிக்கப்பட்டார்.

துணை முதன்மைக் கணக்காளர் திரு. எஸ். இரத்தினப்பிரகாசம் 1986 ஏப்பிறல் 1 ஆம் நாளிலிருந்து முகாமைக் கணக்காய்வுத் திணைக்களத்தில் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் துணைப் பணிப்பாளர் திரு. ரி. எஸ். என். பர்ணந்து 1986 ஏப்பிறல் 1 ஆம் நாளிலிருந்து பொதுப்படுகடன் திணைக்களத்தின் பதில் கண்காணிப்பாளராக நியமிக்கப் பட்டார்.

பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் கண்காணிப்புப் பிரிவின் துணைப் பணிப்பாளர் திரு. வை. ஏ. பியதிஸ்ஸ 1986 நவெம்பர் 11 ஆம் நாளிலிருந்து வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பதில் மேலதிகப்பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

வங்கித்தொழில் அபிவிருத்தி, பயிற்சி திணைக்களத்தின் மதியுரையாளர் முனைவர் டபிள்யூ. எட்டியாராச்சி 1986 திசெம்பர் 1 ஆம் நாள் முதல் வங்கித்தொழில் அபிவிருத்தி பயிற்சி திணைக்களம் இரு திணைக்களங்களாக மீளமைக்கப்பட்டதன் விளைவாக வங்கித்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளராகவும், பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார். இவர் 1986 திசெம்பர் 1 ஆம் நாளிலிருந்து பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார்.

**விடுவிப்பிலுள்ள அலுவலர்கள் (1986 திசெம்பர் 31 ஆம் நாளில் உள்ளவாறு)**

பின்வரும் வங்கி அலுவலர்கள் இலங்கையின் அமைச்சுக்கள், அரசதிணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் பன்னாட்டு அமைப்புக்கள் என்பவற்றில், பதவியேற்பதற்காக விடுவிக்கப்பட்டார்கள்.

நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு. ஏ. எஸ். ஜயவர்த்தன, வங்காளதேசம், பூட்டான், இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளின் மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளராக பன்னாட்டு நாணய நிதியத்திற்கு

முனைவர் எஸ். ரி. ஜி. பர்ணந்து மக்கள் வங்கியின் தலைவராகக் கடமையாற்றுவதற்காக நிதி திட்டமிடல் அமைச்சிற்கு

திரு. எஸ். ஈஸ்பரதாசன் வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளராக கடமையாற்றுவதற்காக நிதி திட்டமிடல் அமைச்சிற்கு.

முனைவர் எல். ஈ. என். பர்ணந்து இலங்கை வங்கியின் தலைவராக கடமையாற்றுவதற்காக நிதி திட்டமிடல் அமைச்சிற்கு

திரு. ஏ. ஏ. டி. ஜஸ்ரின் கைத்தொழில் அறிவியல் அலுவலர்கள் அமைச்சின் செயலாளராக பணிபுரிவதற்காக கைத்தொழில் அறிவியல் அலுவல்கள் அமைச்சுக்கு.

முனைவர் ஏ. சி. ரந்தெனி, முனைவர் ஜி. அபயசேகர, திரு. எம். பி. திச நாயக்கா, முனைவர் எஸ். எஸ். கொலம்பகே, திருவாளர்கள் ஈ. ஏ. பி. என். டயஸ், ஜே. எம். ரி. பி. ஜயசுந்தர. ஜி. ஏ. வி. பொன்சேகா, முனைவர் ஐ. குமாரசுவாமி, திரு. ரி. எம். சற். முத்தலிப், திருமதி வை. எம். இந்திரரத்ன ஆகியோர் நிதி திட்டமிடல் அமைச்சுக்கு.

முனைவர் டி. எஸ். விஜேசிங்க ஆராய்ச்சிப் பொருளியலாளராகப் பதவி யேற்பதற்காக மலேசியாவில் உள்ள தென்கிழக்கு ஆசிய மத்திய வங்கி யின் ஆராய்ச்சிப் பயிற்சி நிலையத்திற்கு.

திரு. என். ஏ. த. எஸ். அத்துரெலிய இலங்கை மகாவலி மேலாண்மைச் சபைக்கு.

**பதவி விலகல்**

உயர்பதவி அலுவலர் தரம் IVஇலிருந்த திரு. எஸ். இராசலிங்கம் 1986 ஒத்தொபர் 5 ஆம் நாளிலிருந்து மத்திய வங்கிப் பணியிலிருந்து பதவி விலகினர்.